ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

சோதிட

கோட்சாரசிந்தாமணி

மூலமும்-உரையும்.

இஃது

சிலசோதிடவல்லவர்களின்

அனுக்கிரகத்தினால்

பற்பலகணிதநூற்களைக் கொண்டாராய்ந்து

இவை

செஞ்சி ஏகாம்பரமுதலியாரவர்களால்

எழுதப்பட்ட

இந்நூல்

மே கன்னய்ய அண்டு கம்பெனியாரால்

இவை சென்னை:

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்ட் காப்பிரைட்.

இதன் விலை] 1920. [ரூபா 1

அட்டவணை.

பெயர்.	பக்கம்.	பெயர்.	பக்கம்.
அ		ஆ	
அங்காரகனமில	௫௧	ஆக்கிராந்தமறிதல்	௭௮
அங்காரகன நட்பாட்சியுச்சத்திலநின்றபலன்	௫௧	ஆயிலியத்தின்பலன்	௭௭
அங்காரகன் பகைநீசத்தில நின்றபலன்	௫௧	ஆரூடத்திற்கு அறியும்வகை	௧௧௪
அங்காரகன்திசையின்பலன்	௫௧	ஆரும்பாவகம்	௧௧௮
அங்காரகன்திசையில் அங்காரகன்புத்திபின்பலாபலன்	௫௨	இ	
அங்காரகன்திசையில் ராகுபுத்தியின் பலாபலன்	௫௨	இராகுகுளிகாதிகாலம்	௰
அங்காரகன்திசையின் குருபுத்தியின்பலாபலன்	௫௩	இராசிகளில் கிரகங்கள் சஞ்சாரகாலம்	௧௯
அங்காரகன்திசையில் சனிபுத்தியின்பலாபலன்	௫௩	இராகுநில	௫௯
அங்காரகன்திசையில்புதனார்புத்தியின்பலாபலன	௫௪	இராகுநட்பாட்சியுச்சத்தில் நின்றபலன்	௫௯
அங்காரகன்திசையில் கேதுபுத்தியின்பலாபலன்	௫௪	இராகுபகைநீசத்தில் நின்றபலன்	௫௭
அங்காரகன்திசையில சுக்கிரனார் புத்தியின்பலாபலன	௫௫	இராகுமகாதிசைபலன்	௫௮
அங்காரகன்திசையில் சூரியனார் புத்தியின்பலாபலன்	௫௫	இராகுதிசையில் இராகுபுத்தியின பலாபலன்	௫௮
அங்காரகன் திசையில் சந்திரபுத்தியின்பலாபலன்	௫௬	இராகுதிசையில் குருபுத்தியின் பலாபலன்	௫௯
அசுவனியின்பலன்	௭௩	இராகுதிசையில் சனிபுத்தியின் பலாபலன்	௫௯
அஸ்தத்தின்பலன்	௭௮	இராகுதிசையில் புதனார்புத்தியின்பலாபலன்	௫௯
அனுஷத்தின்பலன்	௭௧	இராகுதிசையில் கேதுபுத்தியின் பலாபலன்	௬௰
அவிட்டத்தின்பலன்	௧௧௦	இராகுதிசையில் சுக்கிரனார்புத்தியின்பலாபலன்	௬௰
		இராகுதிசையில் சூரியனார்புத்தியின் பலாபலன்	௬௧

அட்டவணை.

பெயர்.	பக்கம்.
இராகுதிசையில் சந்திரனுர் புத்தியின்பலாபலன்	௬௧
இராகுதிசையில் செவ்வாய்புத்தியின்பலாபலன்	௪௨
இன்னுமோர்வித மறியும் விபரம்	௯௩
இருதுமாதபலன்	௱௪
இரேவதியின்பலன்	௧௧௧
இலக்கினபலன்களறவன	௧௧௨
இராஷபலக்கினபலன்	௧௧௨
இருதுசாந்தி	௧௧௪
இலக்கினபாவகம்	௧௧௫
இரெண்டாம்பாவகம்	௧௧௫
உ	
உதாரணம்	௮௰
உரோகணியின்பலன்	௱௬
உத்திராடத்தின்பலன்	௧௧௦
உத்திரட்டாதியின்பலன்	௧௧௧
எ	
எட்டாம்பாவகம்	௧௧௬
ஏ	
ஏழாம்பாவகம்	௧௧௮
ஒ	
ஒன்பதாம்பாவகம்	௧௧௯
ஐ	
ஐந்தாம்பாவகம்	௧௧௭

பெயர்.	பக்கம்.
க	
கவி	௧௧௧
கடகத்தின்பலன்	௧௧௨
கன்னியாலக்கினபலன்	௱௬
கா	
கார்த்திகையின்பலன்	௱௬
கி	
கிரகசாரநட்புசமம்பகை	௯௨
கிரகங்களின் பார்வைகாலம்	௧௫
கிரகங்கள்நோக்குஞ் ஸ்தானங்கள்	௧௫
கிரகங்களின்வலிகாலம்	௧௬
கிரகங்களின்சமயபலன்	௮௭
கிரகங்களுக் குறிய கதிரின் விபரம்	௯௬
கு	
குருநட்பாட்சி யுச்சத்தில் நின்றபலன்	௬௩
குருபகைநீசத்தில் நின்ற பலன்	௬௪
குருமகாதிசையின்பலன்	௪௪
குருமகாதிசையில் குருபுத்தியின்பலாபலன்	௪௫
குருதிசையில் சனியனுர் புத்தியின்பலாபலன்	௪௫
குருதிசையில் புதனுர்புத்தியின்பலாபலன்	௪௫
குருதிசையில் கேதுபுத்தியின்பலாபலன்	௬௬

பெயர்.	பக்கம்.
குருதிசையில் சுக்கிரனுர்புத்தியின்பலாபலன்	௪௬
குருதிசையில் சூரியனுர்புத்தியின்பலாபலன்	௪௭
குருதிசையில் சந்திரனுர்புத்தியின்பலாபல்ன்	௪௭
குருதிசையில் செவ்வாய்புத்தியின்பலாபலன்	௪௮
குருமகாதிசையில் ராகுபுத்தியினபலாபலன்	௪௮
குடிபுக ஆகாமாதங்கள்	௮௭
கும்பலக்கினபலன்	௧௧௪
கே	
கேதுவின்நிலை	௬௨
கேதுநட்பாட்சி யுச்சத்தில்நின்றபலன்	௬௨
கேதுபகைநீசத்தில்நின்றபலன்	௬௩
கேதுமகாதிசைபலன்	௬௩
கேதுதிசையில் கேதுபுத்தியின்பலாபலன்	௬௪
கேதுதிசையில் சுக்கிரனுர்புத்தியின்பன்	௬௪
கேதுதிசையில் சூரியனுர்புத்தியின்பலாபலன்	௬௫
கேதுதிசையில சந்திரனுர்புத்தியின்பலாபல்ன்	௬௫
கேதுதிசையில் செவ்வாய்புத்தியின்பலாபலன்	௬௫
கேதுதிசையில் ராகுபுத்தியின்பலாபலன்	௬௬
கேதுதிசையில் குருபுத்தியின்பலாபலன்	௬௬
கேதுதிசையில் சனிபுத்தியின்பலாபலன்	௬௭
கேதுதிசையில் புதனுர்புத்தியின்பலாபலன்	௬௭
கேட்டையின்பலன்	௬௯
கோ	
கோட்சாரபலாபலன்	௧௮
கோசாரவேதைகயறியும்படி	௭௫
கோசாரபலனறியும்நுட்பம்	௭௬
கௌ	
கௌரிபஞ்சாங்கம்	௭௯
ச	
சந்திரன்நிலை	௨௪
சந்திரன் நட்பாட்சியுச்சத்தில்நின்றபலன்	௨௫
சந்திரனபகைநீசத்தில் நின்றபலன்	௨௫
சந்திரன்மகாதிசைபலன்	௨௬
சந்திரதிசையில் சந்திரபுத்தியின்பலாபலன்	௨௬
சந்திரதிசையில் செவ்வாய்புத்தியின்பலாபலன்	௨௭
சந்திரதிசையில் ராகுபுத்தியின்பலாபலன்	௨௭
சந்திரதிசையில் குருபுத்தியின்பலாபலன்	௨௮
சந்திரதிசையில் சனிபுத்தியின்பலாபலன்	௨௮
சந்திரதிசையில் புதன்புத்தியின்பலாபலன்	௨௯

பெயர்	பக்கம்.	பெயர்	பக்கம்.
சந்திரதிசையில் கேதுபுத்தியின் பலாபலன்	௨௯	னும்பூமிக்குட்பட்டபொருள்களையுங் கையமுகளிய வற்றாக்கற லைகளக்களை கூறுகின்றனவாம்	௮௯
சந்திரதிசையில சுக்கிரபுத்தியின் பலாபலன்	௨௯		
சந்திரதிசையில் சூரியபுத்தியின் பலாபலன்	௩௰	சல்லியங்கேட்ட மனிதனோ கட்டடம் பூமி இவைகளிலே யின்னபாகத்திலிருக்கின்றதென்று காணவேண்டியதற்கு ஆதாரங்களாவன	௯௪
சனிபின்னிலை	௪௯		
சனிநட்பாட்சி உச்சத்தில் நின்றபலன்	௪௯		
சனிபகைநீசத்தில் நின்றபலன்	௫௰		
சனிமகாதிசைபலன்	௫௰	சல்யமென்னும் பூமிக்குட்பட்டபொருள் 16-ம் விபரமானவை	௯௭
சனிதிசையில் சனியனார்புத்தியின்பலாபலன்	௫௧	சனிக்கிழமையின்பலன்	௱௪
சனிதிசையில் புதனார்புத்தியின் பலாபலன்	௫௧	சதையத்தின்பலன்	௱௩
சனிதிசையில் கேதுபுத்தியின் பலாபலன்	௫௨		
		சா	
சனிதிசையில்சுக்கிரனார்புத்தியின்பலாபலன்	௫௨	சாதகப்படலம்	௧௧௫
சனிதிசையில் சூரியனார்புத்தியின்பலாபலன்	௫௩	**சி**	
சனிதிசையில் சந்திரனார்புத்தியின்பலாபலன்	௫௩	சித்திரையின்பலன்	௱௮
சனிதிசையில் செவ்வாய்புத்தியின்பலாபலன்	௫௪	சிமபலக்கினபலன்	௧௧௨
		சு	
சனிதிசையில் ராகுபுத்தியின் பலாபலன்	௫௪	சுக்கிரன்நிலை	௬௪
		சுக்கிரன்நட்பாட்சியுச்சத்தில் நின்றபலன்	௬௫
சனிதிசையில் குருபுத்தியின் பலாபலன்	௫௫	சுக்கிரன் பகைநீசத்தில் நின்றபலன்	௬௫
சகலகிரகங்களுக்கும் திட்சவத்தகாலமறிதல்	௭௮	சுக்கிரன்மகாதிசைப்பலன்	௬௬
		சுக்கிரன் திசையில் சுக்கிரன் புத்தியின்பலாபலன்	௬௬
சந்திரபலனறியும்வகை	௮௧	சுக்கிரன்திசையில் சூரியனார் புத்தியின்பலாபலன்	௬௭
சல்லியபரிட்சையசஞ்சீவியென்			

பெயர்.	பக்கம்.	பெயர்.	பக்கம்.
சுக்கிரன் திசையில் சந்திரனர் புத்தியின் பலாபலன்	எக	சூரியன் திசையில் புதன்புத்தியின் பலாபலன்	உரு
சுக்கிரன் திசையில் செவ்வாய் புத்தியின் பலாபலன்	எக	சூரியன் திசையில் கேதுபுத்தியின் பலாபலன்	உரு
சுக்கிரன் திசையில் ராகுபுத்தியின் பலாபலன்	எஉ	சூரியன் திசையில் சுக்கிரபுத்தியின் பலாபலன்	உச
சுக்கிர திசையில் குருபுத்தியின் பலாபலன்	எஉ	செ	
சுக்கிரன் திசையில் சனிபுத்தியின் பலாபலன்	எங	செவ்வாய்க்கிழமையின் பலன்	௱ங
சுக்கிரன் திசையில் புதனர்புத்தியின் பலாபலன்	எச	ஞா	
சுக்கிரன் திசையில் கேதுபுத்தியின் பலாபலன்	எச	ஞாயிற்றுக்கிழமையின் பலன்	௱உ
சுவத்தியின் பலன்	எஅ	த	
சூ		தனக்குத்தானே பார்த்துக் கொள்ளும்விபரம்	க௰
சூரியன் கட்பாட்சி யுச்சத்தில் நின்றபலன்	கக	தனுசுலக்கினபலன்	ககரு
சூரியன் பகைக்ஷேத்திரத்தில் நின்றபலன்	கக	தா	
சூரியன் மகாதிசைபலன்	கக	தாரைவிபரம்	கரு
சூரியன் திசையில் சூரியபுத்தியின் பலன்	உ௰	தாரபலன் றியும்வகை	கஉ
		தி	
சூரியன் திசையில் சந்திரபுத்தியின் பலாபலன்	உ௰	தினபலன் றியும்வகை	அஉ
சூரியன் திசையில் செவ்வாய்புத்தியின் பலாபலன்	உக	திங்கட்கிழமையின் பலன்	௱உ
சூரியன் திசையில் ராகுபுத்தியின் பலாபலன்	உக	திதிபலன் கணாவன	௱௫
சூரியன் திசையில் குருபுத்தியின் பலாபலன்	உஉ	திருவாதிரையின் பலன்	௱௬
சூரியன் திசையில் சனிபுத்தியின் பலாபலன்	உஉ	திருவோணத்தின் பலன்	கச௰
		து	
		துறைமுகவிபரம்	அரு
		துலாலக்கினபலன்	ககரு

பெயர்.	பக்கம்.
ந	
நட்பாட்சியுச்சம் பகைநீசம் அறியும்வகை	௧௧
நக்ஷத்திரத்தைக்கொண்டு இலக்கினமறியுஞ் சக்கரம்	௧௭
நக்ஷத்திரபலன்களாவன	௱௫
நா	
நான்காம்பாவகம்	௧௧௬
நி	
நிலக்கருவுகளென்னும் மூலிகைகளாவன	௱
ப	
பதினாறுவகைசல்லியங்களின் விபரம்	௯௰
பரணியின்பலன்	௱௫
பத்தாம்பாவகம்	௧௨௦
பதினோராம்பாவகம்	௧௨௦
பனிரெண்டாமபாவகம்	௧௨௦
பி	
பிரர்களுக்குப் பார்க்கும் விபரம்	௯௧
பிதுர்பலன்	௧௧௯
பீ	
பீரகசமயம் அறியும்வகை	௮௭
பு	
புதன்நிலையின்பலன்	௫௫
புதன்நட்பாட்சியுச்சத்தில் நின்றபலன்	௫௬
புதன்பகை நீசத்தில்நின்ற பலன்	௫௧
புதன்மகாதிசைபலன்	௫௭
புதன்திசையில் புதனார்புத்தியின்லலாபலன்	௫௭
புதன்திசையில் கேதுபுத்தியின்பலாபலன்	௫௮
புதன்திசையில் சுக்கிரனார்புத்தியின்பலாபலன்	௫௮
புதன்திசையில் சூரியனார்புத்தியின்பலாபலன்	௫௯
புதன்திசையில் சந்திரனார்புத்தியின்பலாபலன்	௫௯
புதன்திசையில் செவ்வாய்புத்தியின்பலாபலன்	௫[illegible]
புதன்திசையில் ராகுபுத்தியின்பலாபலன்	[illegible]
புதன்திசையில் குருபுத்தியின்பலாபலன்	௬௰
புதன்திசையில் சனிபுத்தியின்பலாபலன்	௬௧
புதன்கிழமையின்பலன்	௱௩
புனர்பூசத்தின்பலன்	௱௭
பூ	
பூமிக்குட்பட்ட பொருள்களானவை கேட்குங் கர்த்தாவடைவன் அல்லதுபிராமடைவர்களென்ற காலங்களும் பொருட்களின் விபரங்களும் கூறப்படும்	௱௧
பூசநக்ஷத்திரத்தின்பலன்	௱௭
பூரத்தின்பலன்	௱௮

பெயர்.	பக்கம்.
பூராடத்தின்பலன்	௱௯
பூரட்டாதியின்பலன்	௧௧௧
பெ	
பெண்களின் ஜெனன இருது பலன்	௱௨
பொ	
பொருத்தலக்ஷணம்	௱௨
ம	
மகாதிசைக்குப்போதகன்முதலியோர்களறியும்வகை	௧௪
மகாதிசைக்குப்போதகன்முதலியோர்களின்பலன்	௧௬
மகாதிசைகளின்விபரம்	௧௯
மனைநூல்பார்க்கும்வகை	௮௫
மகத்தின்பலன்	௱௮
மகரலக்கினபலன்	௧௧௩
மா	
மாதமகாதிசைப்பலன்	௮௧
மாதபலன்	௮௧
மி	
மிருகசீரிடத்தின்பலன்	௱௬
மிதுனலக்கினபலன்	௧௧௨
மீ	
மீனலக்கினபலன்	௧௧௪
மு	
முன்கூறியபாகசக்ரமாவது	௯௩
மூ	
மூலத்தின்பலன்	௱௯
மூன்றும்பாவகம்.	௧௧௬
மெ	
மேற்கண்ட சக்கரங்களைப்பார்க்குமடைவு	௮௰
மேஷலக்கினபலன்	௧௧௨
யோ	
யோகினிநிலை பூமிசுக்கிரன்	௭௭
வ	
வருஷமகாதிசையறியும்வ	௮௰
வா	
வாசற்படிவைக்க	௮௬
வாரபலன்களாவன	௱௨
வி	
வியாழன்நிலை	௪௨
விபரீதவேதையறியும்படி	௭௫
வியாழக்கிழமைபலன்	௱௩
விசாகத்தின்பலன்	௱௯
விருட்சிகலக்கினபலன்	௧௧௩
வீ	
வீடு அடிகணக்குகளைக்கொண்டு பலனறியும்படி	௮௪
வீட்டின்சொந்த பாத்தியதையாம்	௯௬
வெ	
வெள்ளிக்கிழமையின்பலன்	௱௩
வே	
வேதையறிதல்	௭௮

அட்டவணை-முற்றிற்று.

அடியிற்கண்ட இவ்விரண்டு விருத்தங்களையும் 31-வது பக்கத்திலுள்ள 35-வது பாட்டின்கீழ் சேர்த்துக் கொள்ளவும்.

ஆமெனவேசெவ்வாயும் ஒன்றுரெண்டு
அடுத்தநான் கொன்பதுடன் பத்திராரும்
தாமெனவே நின்றிடிலோ பலனைக்கேளு
தழைக்காது விளவர்ப்பம் பூமிதன்னில்
போமெனவே பெண்டிற்குத் தேகந்தன்னில்
பிடிக்கும் பிணியனல் பீடைரோகம்
காமெனவே கண்டவர்க்கும் பகையதாக்கி
காணுமே ரத்தமென்றுங் கண்டுபேசே.

இ-ள். செவ்வாய் (1)(2)(4)(9)(10)(12) இந்தஸ்தானங்களில் நிற்க, பயிர்தொழில் பலியாது, பூமியற்பமாகும், மனையாளுக்கு தேகங்களில் சுரவியாதியுண்டாகும், கண்டவர்யாவருக்கும் பகையாக்கி ரத்தங்காணும்படிச்செய்யும் எ-று.

அங்காரகன் நட்பாட்சியுச்சத்தின் நின்றபலன்.

பேசவே செவ்வாய்நட் பாட்சியுச்சம்
பெருமையுடன் நின்றிடிலே பலனைக்கேளு
நேசமாம் மாடாடு வீடுமுண்டாம்
நேராக வஸ்திரமொடு பூமிகிட்டும்
வாசமாம் கீர்த்தியொடு மகிட்சிபுத்திரர்
வளமான சகோதரர்க்கு புகழுண்டாகும்
பாசமாம் பணிபொன் பண்பாய்கிட்டும்
பாங்காகக் குடும்பமது தழைக்கும்பாரே.

இ-ள். செவ்வாய் நட்பாட்சி யுச்சத்தில் நிற்க, மாடாடு வீடுஉண்டாம். வஸ்திரமோடு பூமிகிடைக்கும், கீர்த்திபெருகும், மகிழ்ச்சியாகிய புத்திரர்கள்உண்டாகும், சகோதரர்களுக்கு புகழுண்டாகும் ஆபரணத்துடன் பெண்சேர்வாள்குடும்பமானது தழைக்கும் எ-று.

உ

கடவுள் துணை.

சோதிட

கோட்சாரசிந்தாமணி.

மூலமும்—உரையும்.

விநாயகர்காப்பு.

அறுசீர்கழி விருத்தம்.

தி[illegible]வளர் புவியிலுள்ளோர் செழித்துசோ திடங்கள் செப்ப
ம[illegible]வுசோ திடகோள்ச் சாரம் வகுத்தசிந் தாமணிக்கு
தி[illegible]மண முடித்தமாயன். சிந்தையில் மகிட்சி பொங்க
பெ[illegible]ருமலரை யுரைத்தோன் பெற்றபிள்ளையில் மூத்தோன் காப்பாம்

முகவுரை விருத்தம்.

பேரோங்குஞ் சித்தர்பதி னெண்மரோடும்
பிரபலமாஞ் சப்[illegible]முனி யோதுமநூலும்
தாரோங்கும் யோகியர்கள் சவத்தின்மிக்கோர்
தானுரைத்த நூல்களெல்லாந் தவராதாய்ந்து
சீரோங்குஞ் சோதிட கோட்சாரமென்னுஞ்
சிந்தாமணியைப் புதைசிதிபோல் தெரிந்தெடுத்து
ஏரோங்குஞ் செஞ்சிநகர் வாழ்வேளாளன்
ஏகாம்பர மிந்நூலை வெளியிட்டேனே. 1

இதுவுமது.

வெளியிட்ட யின்னூலின் விளக்கம்பாரீர்
வெதசூட்சம் சோதிடங்க ளுரைப்போற்கெல்லாம்
தெளிவாகுங் களங்கமொன்றுந் தெரியாதப்பா
செகத்தினிலே யிதற்கிணை நூல் செப்பொண்ணாது

பழிவான பலநூல் பார்க்கவேண்டாம்
 பதாமலினனூலே படித்தபேர்க்கு
ஒளிவுதரு மனுவாக சிதகிபோகதம
 ஓதிடுவர் சிருவர்மூக லுக்குபாரே. 2

இதுவுமது.

பாரப்பா நட்பாட்சி யுச்சமோடு
 பரிவாகும கேந்திரமொடு திரிகோணம்பார்
சீரப்பா சுபசேஷக்கிரம் பாபசேஷகிரம
 செப்பியதோர் நவகோளும பாவக்கோளும்
நேரப்பா போதகநாம வேதநோடும்
 நிகழ்த்தியதோர் பாசுகன்கா ரகனைப்பார்த்து
கூறப்பா குருவென்று புகழ்வாருனைக்
 கோடிநூ விதற்கொவ்வா தென்றுகூர்க்தே 3

இராகு குளிகாதிகாலம்.

வாரம்	இராகு	குளிகை	யமகண்டம்	அர்தப்ரஹர	காலஹோமி
	ம-மி.	ம-மி.	ம-மி.	ம-மி	ம-மி
ஞாய	4-30	6-0	12-0	10-30	உதயம்
திங்க	7-30	1-30	10-0	9-0	3-0
செவ்	3-0	12-0	9-0	7-30	1-0
புதன்	12-0	10-30	7-30	உதயம்	12-0
வியா	1-30	9-0	உதயம்	3-0	10-30
வெள்	10-30	7-30	3-0	1-30	9-0
சனி	9-0	உதயம்	1-30	12-0	7-30

இராகு முதலிய காலங்களுக்கு நிச்சமணிக்கு மேல் 1-மணி 30நிமிஷம் வரையுஞ் சுபகருமங்களை நீக்கவேண்டும். குளிகனுக்கு அசுபகருமங்களை நீக்கவேண்டும். இதில் சொல்லப்பட்ட கிரமம் யமகண்டகாலத்திற்கா... குளிகாதிகளுக்கு இஷ்டவாரமுதல் அதனது 5-வது வாரத்திற்குச் சொல்லிய கிரமமே இராகுகுளிக்காலாதிக்கெனவறிக.

நட்பாட்சியுச்சம் பகைநீசம் அறியும்வகை.

இராசிகள்	சூரி	சந்தி	செவ்	புதன்	குரு	சுக்கி	சனி	இராகு	கேது
மேஷம்	உச்சம்	பகை	ஆட்சி	நட்பு	பகை	நட்பு	நீசம்	பகை	பகை
இடபம்	பகை	உச்சம்	நட்பு	நட்பு	நட்பு	ஆட்சி	நட்பு	நீசம்	நட்பு
மிதுனம்	பகை	நட்பு	நட்பு	ஆட்சி	நட்பு	நட்பு	நட்பு	ஆட்சி	நட்பு
கர்க்கடகம்	பகை	ஆட்சி	நீசம்	நட்பு	உச்சம்	பகை	பகை	பகை	பகை
சிங்கம்	ஆட்சி	பகை	பகை	பகை	நட்பு	பகை	பகை	பகை	நீசம்
கன்னி	பகை	நட்பு	நட்பு	ஆ உ	நட்பு	நீசம்	நட்பு	நட்பு	ஆட்சி
துலாம்	நீசம்	பகை	நட்பு	நட்பு	நட்பு	ஆட்சி	உச்சம்	நட்பு	நட்பு
விருச்சிகம்	பகை	நீசம்	ஆட்சி	பகை	பகை	நட்பு	பகை	உச்சம்	ஆட்சி
தனுசு	நட்பு	நட்பு	பகை	நட்பு	ஆட்சி	நட்பு	நட்பு	நட்பு	ஆட்சி
மகரம்	பகை	பகை	உச்சம்	நட்பு	நீசம்	நட்பு	ஆட்சி	நட்பு	ஆட்சி
கும்பம்	பகை	பகை	பகை	நட்பு	நட்பு	நட்பு	ஆட்சி	நட்பு	உச்சம்
மீனம்	நட்பு	நட்பு	பகை	நீசம்	ஆட்சி	உச்சம்	நட்பு	நட்பு	ஆட்சி

கிரகசார சமநட்புபகை
அறியும் வகை.

கிரகம்	சூரி	சந்தி	செவ்	புதன்	குரு	சுக்கி	சனி	ராகு	கேது
சூரியன்	சமம்	நட்பு	நட்பு	நட்பு	நட்பு	பகை	பகை	பகை	பகை
சந்திரன்	நட்பு	சமம்	சமம்	நட்பு	சமம்	சமம்	சமம்	பகை	ப[illegible]
செவ்வாய்	சமம்	நட்பு	சமம்	பகை	நட்பு	சமம்	நட்[illegible]	பகை	ப[illegible]
புதன்	நட்பு	பகை	சமம்	சமம்	சமம்	நட்பு	சம[illegible]	பகை	ப[illegible]
குரு	நட்பு	நட்பு	நட்பு	பகை	சமம்	பகை	சம[illegible]	பகை	ப[illegible]
சுக்கிரன்	சமம்	பகை	சமம்	நட்பு	சமம்	சமம்	நட்[illegible]	பகை	ப[illegible]
சனி	பகை	பகை	சமம்	சமம்	நட்பு	நட்பு	ச[illegible]	பகை	ப[illegible]
ராகு	பகை	பகை	பகை	பகை	பகை	பகை	ப[illegible]	பகை	ப[illegible]
கேது	பகை	பகை	பகை	பகை	பகை	பகை	ப[illegible]	[illegible]	[illegible]

தானவிபரம்.

கேளப்பா கேந்திரமது செப்புகின்றோம்
  கெடியான லக்கினமுமு நாலேழ்பத்தும்
ஆளப்பா திரிகோண மறையக்கேளு
  அழகான ஐந்தொன்போ டொன்றுமாகும்
வாளப்பா மூன்றுடனே விரையந்தானும்
  வளமான துற்தான வழுக்கலாகும்
நாளப்பா ரெண்டுடனே பதினொன்றுந்தான்
  நயமான தானமென்று நயந்துசொல்லே.

தானபலன் உரை.

கேந்திரமாவது (1) (4) (7) (10) ம் திரிகோண மாவது (1) (5) (9)-ம் துற்தானமாகிய கெட்டதானமாவது (12) (3) - ம் (2) (11) தனலாப யோக்கியமென்று சொல்க ஏ-று.

பூரண சந்திரனும வியாழனும் சுபக்கிரகம்.

சுக்கிரன் முக்கால் சுபன்.

புதனுடன் சம்பந்தப்பட்ட தேய்வுபிறை சந்திரன் கால்சுபன்.

செவ்வாய் முக்காற் பாவி

சனி-ராகு-கேது முழுப்பாவி.

சூரியன் அரைப்பாவி

பாவிக்கி 6-8-12-ம இடம் சுபஸ்தானம் மற்றவர்களுக்கு பாவஸ்தானமெனக்கொள்ள.

மகாதிசைக்குப் போதகன்முதலியோர் அறியும்வகை.

கிரகதிசைகள்	போதகன்	வேதகன்	பாசகன்	காரகன்
சூரியன்திசைக்கு	செவ்வாய்	சுக்கிரன்	சனி	வியாழன்
சந்திரன்திசைக்கு	செவ்வாய்	சூரியன்	சுக்கிரன்	சனி
செவ்வாதிசைக்கு	சந்திரன்	புதன்	சூரியன்	சனி
புதன்திசைக்கு	வியாழன்	செவ்வாய்	சந்திரன்	சுக்கிரன்
வியாழன்திசைக்கு	செவ்வாய்	சூரியன்	சனி	சந்திரன்
சுக்கிரன்திசைக்கு	வியாழன்	சனி	புதன்	சூரியன்
சனிதிசைக்கு	சந்திரன்	செவ்வாய்	சுக்கிரன்	வியாழன்
இராகு கேது திசைக்	—	—	—	—

மகாதிசைக்குப்போதகன் முதலியோர்களின் பலாபலன்

விருத்தம்

நேரப்பா திசைகளது நடக்குங்காலம்
  நிகழ்பலனைக் கொடுவென்பான் போதகந்தான்
வேறுபண்ணி தட்டிவைப்பான் வேதகந்தான்
  விளங்கவே கூடிவைப்பான் பாசகந்தான்
தேறுபலனாகவென்றுங் காரகந்தான்
  தேடிவாயீட்டுபொருள் தனைக்கொடுப்பான்
கூரியயிவ்வாறுக் குறியைக்கண்டு
  குற்றமறப் பலாபலனைக் கூறுவாயே.

இ-ள். கிரகங்களின் மகாதிசைநடக்குங் காலத்துப்போதகன் பலனைக்கொடுவென்பன் வேதகன்கொடுக்கும் பலனை தவிர்ப்பன்பாசகன் பலனைக்கூட்டிவைப்பன் காரகன்யீட்டாகியப் பொருளைத் தருவிப்பன் எ-று.

கிரகங்களின் பார்வைகாலம்.

கூரப்பா கோட்சாரம் பார்வைகாலங்
குலவியதோர் கதிர்தனக்கு நாளைந்தாகும்
பாரப்பா புதனுக்குஞ் சுக்கிரனுக்கும்
பரிவாகுந் தனித்தனிநா ளேழதாகுஞ்
சீரப்பா சேய்க்குநா ளெட்டேயாகுஞ்
சிவனுக்கு திங்கள்ரெண்டு சனிக்காறாகுங்
காரப்பா பாம்பிற்கு மாதமூன்றாங்
களங்கனுக்கு நாழிகையு மூன்றாங்காணே

இ-ள் கோட்சாரத்தின் பார்வைகாலங்களாவது கிரகங்கள் தான் நின்றஸ்தானத்தைவிட்டு மறுஸ்தானத்திற்கு ஏகுதற்குமுன் சூரியனுக்கு நாள்-5ம் புதன் சுக்கிரன் இவர்களுக்கு தனித்தனியே நாள்-7ம் செவ்வாய்க்கு நாள்-8ம் குருவிற்கு மாதம் 1-ம் சனிக்கு மாதம் 6-ம் இராகு கேதுக்களுக்கு மாதம் 3-ம் சந்திரனுக்கு நாழிகை மூன்றுமாம் தாம்தாம் ஏகுமுன் பார்க்குங்காலமாம் எ-று

கிரகங்கள் நோக்கும் ஸ்தானங்கள்.

காணவே கிரகங்கள் பார்வைஸ்தானம்
கதிர்புந்தி சசிதனுக்கு மேழாம்வீடாம்
பூணவே சேய்க்குநா லேழெட்டாகும்
பொன்னவனுக் கைந்தேழொன்பானாகும்
பேணவே சனிக்குமூன் றேழீரைந்தாம்
விளங்கியதோர் குளிகனுக்கு மேழொன்பானும்
சேணவே யிராகுவொடு கேதுவிற்கும்
சொல்லுவாய் பத்தேழும் பார்வையாமே

இ-ள் சூரியன் சந்திரன் புதன் இவர்கள் தாமிருக்குமிடத்தைக் கொண்டு 7-மிடத்தைப் பார்க்கும் செவ்வாய் தானிருக்குமிடத்தைக் கொண்டு 4 7 8 ஆமிடத்தைப் பார்க்கும் வியாழன் தானிருக்குமிடத்தைக் கொண்டு 5 7 9 - ஆமிடத்தைப் பார்க்கும் சனி தானிருக்குமிடத்தைக் கொண்டு 3 7 10- ஆமிடத்தைப் பார்க்கும் குளிகன் தானிருக்குமிடத்தைக் கொண்டு 7-9-ஆமிடத்தைப் பார்க்கும் இராகு கேது இவர்கள் தானிருக்குமிடத்தைக் கொண்டு 7-10- ஆமிடத்தைப் பார்க்கும் எல்லாக்கிரகமும் ஏழாமிடத்தையே நோக்கும் எ-று.

இராசிகளில் கிரகங்கள் சஞ்சாரகாலம்.

விடைனவே யிராசிதனில் கோட்கள்தானும்
  விளங்கவே நின்றிருக்குங் காலங்கேளீர்
தேடினிற்பார்க்கதிர் புகர்புகரோர்திங்கள்
  தெளிவிலா மதிநிற்பார் நாள்ரெண்டேகால்
நீடியமுடல்நிற்பாருண்டு ரெண்டரை
  நிலமகனும் நின்றிடுவார் மாதமொன்று
பாடியபொன்னிற்கும் வருடமொன்று
  பாம்புரெண்டுந் தனித்தனி யொண்ணறையாமாண்டே.

இ-ள். இராசிகளில் கிரகங்கள் சஞ்சாரக்காலங்களாவது சூரியன்புகன் சுக்கிரன்யிவர்கள் யிராசியொன்றுக்கு ஒருமாசம் நிற்பார்கள் சந்திரன் யிராசியொன்றுக்குரெண்டேகால்நாள்நிற்பன் சனியிராசியொன்றுக்கு ரெண்டரைவருடம் நிற்பன் செவ்வாய் யிராசியொன்றுக்கு ஒண்ணரைமாசம்நிற்பன் வியாழன் யிராசியொன்றுக்கு ஒருவருடம்நிற்பன் இராகுகேது யிவர்கள் யிராசியொன்றுக்கு ஒண்ணறைவருடம் நிற்பார்களெனக் கொள்ளவும் எ-று. 4

மகா திசைகளின் விபரம்.

அசுவனி	மகம்	மூலம்	கேது	திசைவருடம்	7
பரணி	பூரம்	பூராடம்	சுக்கிரன்	திசைவருடம்	20
கார்த்திகை	உத்திரம்	உத்திராடம்	சூரியன்	திசைவருடம்	6
உரோகணி	அஸ்தம்	திருவோணம்	சந்திரன்	திசைவருடம்	10
மிருகசீரிஷம்	சித்திரை	அவிட்டம்	குஜன்	திசைவருடம்	7
திருவாதிரை	சோதி	சதையம்	இராகு	திசைவருடம்	8
புனர்பூசம்	விசாகம்	பூரட்டாதி	குரு	திசைவருடம்	16
பூசம்	அனுஷம்	உத்திரட்டாதி	சனி	திசைவருடம்	19
ஆயிலியம்	கேட்டை	ரேவதி	புதன்	திசைவருடம்	17

ஆகமகாதிசை (9) க்கும் வருடம் 120

கிரகங்களின் வலிமையம்.

சனிசெவ்வாய் சசிமிக்கி வலுக்குநிற்பன்
சான்றோனு மமச்சர்களும் கபனன்முன்னே
அணிவதுபோல் வலுத்துநிற்பர் புகனுக்கப்பா
அதனுப்பசல் வலுவென்றே வரையலாகும்
பணியனுக்கு காலமது இல்லாதாலே
பார்க்காலும் தினைக்காலும் வலுவேயாகும்
மணிதகரில் வாழ்வோர்க ளிந்தக்காலம்
வலுவென்றே தானறிய வழித்திட்டேனே.

நட்சத்திரத்தைக்கொண்டு

இலக்கணமறியுஞ்சக்கரம்.

முதற்பாதகம்.	இரண்டாம்பாதகம்.	மூன்றாம்பாதகம்.	நாலாம்பாதகம்.	நக்ஷத்திரம்.	இராசிகள்.
சு	சே	சோ	ல	அசுவணி	மேஷம்
லி	லு	லே	லோ	பரணி	மேஷம்
அ	ஈ	ஊ	ஏ	கார்த்திகை	வ-மே[illegible]ஷபம்
ஒ	வா	வீ	வு	ரோகணி	ரிஷபம்
வே	வோ	கா	கி	மிருகசீரிடம்	உ-ரிஷபம் உ-மிதுனம்
கு	க	ங	ச	திருவாதிரை	மிதுனம்
கே	கோ	ஹ	ஹி	புனர்பூசம்	ஹ-மிதுனம் வ-கடகம்
ஹு	ஹே	ஹோ	ட	பூசம்	கடகம்
டி	டு	டே	டோ	ஆயில்யம்	கடகம்
மா	மீ	மூ	மே	மகம்	சிங்கம்
மோ	டா	டி	டு	பூரம்	சிங்கம்
டெ	டோ	பா	பி	உத்திரம்	வ-சிங்கம் ஹ-கன்னி
பூ	ஷ	ணா	ட்ட	அஸ்தம்	கன்னி
பே	போ	ரா	ரி	சித்திரை	உ-கன்னி உ-துலா
ரு	ரே	ரோ	தா	சோதி	துலாம்
தி	து	தே	தோ	விசாகம்	ஹ-துலாம் வ-விருச்சிக
நா	நீ	நூ	நே	அனுஷம்	விருச்சிகம்
நோ	யா	யி	யு	கேட்டை	விருச்சிகம்
யே	யோ	பா	பி	மூலம்	தனுசு
பூ	தா	ப	டா	பூராடம்	தனுசு
பெ	போ	ஜ	ஜி	உத்திராடம்	வ-தனுசு ஹ-மகரம்
ஜு	ஜே	ஜோ	க	திருவோணம்	மகரம்
கா	கீ	கு	கே	அவிட்டம்	உ-மகரம் உ-கும்பம்
கெ	ஸா	ஸி	ஸு	சதையம்	கும்பம்
செ	சோ	தா	தி	பூரட்டாதி	ஹ-கும்பம் வ-மீனம்
து	தை	தோ	தி	உத்திரட்டாதி	மீனம்
தே	தோ	ஸா	ஸி	ரேவதி	மீனம்

கோட்சாரப்பலாபலன்.

விருத்தம்.

பரிதியுமே மூன்றுறு வொன்பான்பத்தும்
பன்பாகும் பதினொன்றி லமரச்செல்வம்
கருதியதோர் யிலலங்கை வசமேயாகும்
காசினியோர் தான்புகழ தருமஞ்செய்வன்
உரிதியாம பலகலையு மூணர்ந்து தேர்வன்
ஓமமுடன் நதிகளிலே ஸ்தானஞ்செய்வன்
பிரிதியாம் மனையாட்குக் கெர்ப்பமூண்டாம்
பீடைபோம் தோஷம்பிணி யொழியும்பாரே

இ-ள். சூரியன் (3) (6) (9) (10) (11) ல் சுகாதிபதியாயிருந்து சுபர்பாாவையுற்றால் செல்வமிகுக மென்மேலாகப் பெருகும் மனைகிடைக்கும் தானதருமங்கள் செய்குவன் பலவிதமான வேத ஆகமங்களையும் ஓதுவன் ஓமம்வளர்ப்பன் நதிகளில் ஸ்தானமாடு மனையாளுக்குங் கெர்ப்பந்தரிக்கும் மெய்யிலுள்ளப் பிணிக தோஷங்களும் பீடையும் விலகும் எ-று. 5

பாரப்பா கதிரோனும் ஒன்று ரெண்டு
பகருகின்ற நாலைந்தே ழெட்டீராரீர்
கூரப்பா கின்றிடிலோ கொடுமைமெத்தக்
குற்றமாந் தந்தைக்கு நேருங்கண்டம்
ஆரப்பா வலச்சலுடன் நேத்திரனோயாகும்
அரசர்பய மோடுவெகு பகையுமுண்டாம்
தேரப்பா தேசாந்திரப் போக்குமுண்டாம்
தீதெலாம் வினையுமென்றுச் செப்புவாயே.

இ-ள். சூரியன் ஜென்மத்தினும் (2) (4) (5) (7) (8) (12) பகை நீசமடைந்து சுபர்பார்வையுற்றால இந்தஸ்தானங்களில் கிர்க்கில் கொடுமையானது விளைவிக்கும் தகப்பனுக்கு கெண்டமநேரும் அலச்சல்படுத்தும் நேத்திரத்தில் பிணிகாணும் அரசர்கள் பயமுண்டாகும் பகைநேரும் தேசாந்திரம்போக செய்விக்கும் பலவிதமானத் துன்பங்களைப் படித்துவிக்கும் எ-று. 6

சூரியன் நட்பாட்சியுச்சத்தில் நின்றபலன்.

செப்பக்கேள் கதிராட்சி யுச்சம்நட்பில்
சேர்ந்திடிலோ மணமாகு மங்கைசேர்வள்
மெப்புரவே மென்மேலாம் பந்துகூடும்
மேன்மையுறும் வெகுபேர்கள் நேயமாகும்
ஒப்புரவே பூமிபொருள் மனையுமுண்டாம்
ஓங்கிடும் புகழோடுச் செல்வம்மேலாய்
நைப்புரவே நான்மறைகள் கேழ்வியுண்டாம
நலமாகும் வேதாகமங்கள் சொல்லே.

இ-ள். சூரியன் நட்பு ஆக்ஷிஉச்சம் இந்தஸ்தானங்களில்நிற்க மங்கைசேர்வள் மணங்கூடும் பந்துக்கள்கூடும் வெகுபேர்கள் நேயமாகுவர் பூமி பொருள்மனை புகழ்செல்வம் இவைகளுண்டாம் வேதங்கள் கேழ்வியும் ஆகமம்வாசிப்பன் எ-று. 7

சூரியபகைநீசத்தில் நின்றபலன்,

சொல்லவே சூரியனும் பகைநீசத்தில்
சூழ்ந்துமேதானிருக்கில் சொல்லக்கேளும்
தொல்லையாம்பகையதுவுந் தொடர்ந்தேவாட்டும்
தோஷமாம் பிதற்கு மரணமுண்டாம்
புல்லவே மெய்தனிலே பித்தரோகம்
பிடிக்குந் தேடியநற் பொருளுஞ்சேதம்
அல்லலா மனையாட்குங் கர்ப்பநஷ்டம்
ஆகுமேபொல்லாங்கு மறிந்துபேசே

இ-ள். சூரியன் பகைநீசத்திலிருந்து பாவிகளால்பார்வையுற்றால் ஜாதகனுக்கு தொல்லையாகிய மனவருத்தம்நேரும் தன்னுடையதகப்பன் பாட்டனுக்கு மரணம்சம்பவிக்கும் தனக்கு வுடம்பில் பித்தரோகங்காட்டும் தேடியப்பொருள் நஷ்டமாகும் மனையாளுக்கு கெர்ப்பத்திலுண்டாகிய கருவானது அழிந்துபோகும் பலவிடத்தும் பொல்லாங்குநேரும் எ-று. 8

சூரியன்மகாதிசையின் பலாபலன்.

பேசவேபரிதியின் திசைபாறுண்டும்
பீடிக்குந்தேசாந்திரம் போகச்செய்யும்

தோசமாந் தந்தைக்குங் கெண்டம்நேரும்
தொல்லையாங்கன்று காலிக்கும்பீடை
நாசமா பயிர்பொன்னுஞ் சேதமாகும்
நண்ணியக்கண் ணோய்களதும் நாடும்பித்தம்
கூசவேதிரிச்சலு மலச்சலோடுங்
கொடுஞ்சிரையுஞ் சலதோஷங் கூறுவாயே.

இ-ள். சூரியன்மகாதிசை வருஷம் (6) க்கும் சூரியன் பாவிகள் பார்வையுற்று பாவஸ்தான மடைந்தால் ஜாதகனுக்கு தேசாந்திரம் போகும்படிச்செய்யும் தன்னுடைய தகப்பனுக்குக் கண்டம்நேரும் கன்றுகாலிகளுக்குப் பீடைக்காட்டும் பயிற்தொழில் அற்பமாகும் பொருள் சேதங்காணும் நேத்ரங்களில் நோயணுகும் திரிச்சலும் அலச்சலுமுண்டாகும் பித்தரோகமுடன் சலதோஷமும் சிரையும்சம்பவிக்கும் எ-று. 9

சூரியன்திசையில் சூரியன்புத்தியின் பலாபலன்

கூறவே கதிர்திசையிற் கதிரின்புத்தி
குறிப்பாகுந் திங்கள்மூன் றுவீரொன்பான்
சீரவேயரசர்பய முற்றூர்நாசம்
செப்புமோர் முகத்தோடு மார்பில்ரோகம்
மீறவே சன்னியோடு பலநோயுண்டா
மிகுபயமா முறவின்றும் பகையதாவர்
நேருமே சுரமதுவுஞ் சிலேற்பனத்தால்
னிந்தையாங் குன்மமது நேருங்காணே.

இ-ள். சூரியன்திசையில் சூரியன்புத்தி மாதம் (3) நாள் (8) க்கும் ஜாதகனுக்கு அரசர்களால் பயம்நேரும் பந்துவர்க்கத்தில் சேதமாகும் முகத்திலும மார்பிலும் வியாதியுண்டாம் சன்னிரோகமும் பல்நோயுமுண்டாகும்பயம்நேரும் உறவின்முறையார்பகையாவர் சுரமும் கபரோகமும் குன்மரோகமுமணுகும் எ-று. 10

சூரியன்திசையில் சந்திரன்புத்தியின்பலன்

காணவே ரவிதிசையில் சந்திரபுத்திக்
கருதியதோர் திங்களது ஆறுமாகும்
பூணவே தனலாபஞ் சம்பத்துண்டாம்
பீடிக்கும் ரோகமெனும் பிணியுந்தீரும்

வேணவே வேந்தரா லுதவியாகும்
விளங்கிடும் வாணிப லாபமுண்டாம்
தோணவே மனையாட்கும் மகிழ்சந்தோஷம்
துலங்கிடும் பலவிதத்தும் லாபந்தானே.

இ-ள். சூரியன்மகாதிசையில் சந்திரன்புத்தி மாதம் (6)க்கும் ஜாதகனுக்கு தனலாபங்கிடைக்கும், சம்பத்துண்டாகும், உடம்பில்நாட்பட்டுள்ள பிணியானதுதீரும் அரசர்களால் உதவியாகும் வாணிபமும் பூமியுக்கிடைக்கும் மனையாளுக்கும் மகிழ்ச்சியாகிய சந்தோஷமுண்டாகும் பலவிதத்திலும் லாபமுண்டாம் எ-று. 11

சூரியன்திசையில் செவ்வாய்புத்தியின் பலாபலன்

தானாகும்ரவிதிசையில் செவ்வாய்புத்தி
தாக்கியமாதம்நாள் நாளாறிற்கும்
தேனாகும்மதின்பலனை செப்பக்கேளும்
திரளானபூமிதனம் செல்வமோங்கும்
கோனாக மாடாடுக் குவிந்துசேரும்
குறவில்லா நவதான்யம் பலிதமாகும்
நானாகும் பூலாபம் வீடுமுண்டாம்
நன்மையுடன் மனையகத்தில் வாழலாமே.

இ-ள். சூரியன்மகாதிசையில் செவ்வாய்புத்தி மாதம்(4)நாள் (6)க்கும் அதின்பலன் ஜாதகனுக்குபூமிகிடைக்கும் தனலாபமாகும்செல்வமோங்கும் மாடாடுகள்விருத்தியாகச்சேரும் நவதான்யங்கள்பலிதமாகும் பூஷணலாபமுண்டாம் தன்னுடையமனையிடத்து வாழ்வுண்டாகும் எ-று. 12

சூரியன்திசையில் இராகுவின்புத்தியின் பலாபலன்

ஆமெனவேரவிதிசையில் இராகுபுத்தி
ஆன்றமதிபத்துநாள் மூவெட்டாகும்
போமெனவேயதின்பலனைப் புகலக்கேளும்
பூமிபொன்னு முற்றுறும் நாசமாவர்
நாமெனவேயரசர்பயஞ் சாம்விஷத்தால்
நாடிடும் பீடையொடு ரணமுண்டாகும்
தாமெனவே பெண்டுபிள்ளை வேறதாகும்
தனியாகுந் தேரழ்மையினால் லலச்சயெலன்னே.

இ-ள். சூரியன்மகாதிசையில் இராகுபுத்திமாதம் (10) நாள் (24)க்கும் அதின்பலன் ஜாதகனுக்கு பூமிபோன் உற்றார் நாசமாகுவர் அரசர்களால் பயம்நேரும் சுரத்தினாலும் விஷத்தினாலும் பீடையுண்டாம் பிளவையுண்டாகும் பெண்டுபிள்ளை வேருபடுத்திவைக்கும் சிநேகிதர்களால் விரோதமாகி அலச்சல்நேரும் தனியாக்கும் எ-று 13

சூரியன்திசையில் குருபுத்தியின் பலாபலன்

என்னவேரவிதிசையில் குருவின்புத்தி
இயலாகுந் திங்கள்நவம் நாளீரொன்பான்
பன்னவே யதின்பலனைப் பகரக்கேளும்
பரியானைதனமோடுப் பூமிலாபம்
மன்னருல்பகையாவு மகன்றுபோகும்
மகிட்சியாங் கன்றுடனே காலிசேரும்
மின்னவேபுத்திரரும் மேலாய்தோன்றும்
மெல்லடியைப் பகைவர்வந்து வணங்குவாரே.

இ-ள். சூரியன்மகாதிசையில் குருபுத்திமாதம் (9) நாள் (18)க்கும் அதின்பலன் ஜாதகனுக்கு குதிரையானை தனலாபமும் பூமியுங்கிடைக்கும் அரசர்களால் பகைகள்யாவும்விலகும் மனமகிட்சியுண்டாகும் கன்றுகாலிசேரும் புத்திரருர்ப்பத்தியாகும் பகைவர்கள்வந்து வணங்குவார்கள் எ-று. 14

சூரியன்திசையில் சனிபுத்தியின் பலாபலன்.

வணங்கவே ரவிதிசையில் சனியின்புத்தி
மாதமகு பதினொன்று நாளீராறக்கும்
இணங்கவே யதின்பலனை யியமபக்கேளும்
இக்கட்டாம் நேரிழைக்குப் பீடைகாட்டும்
இணங்கிய வாணிபம பூமிபொருளும்போகும்
இல்லாத ஆக்கினையும் மழியுநேரும்
பிணங்கவே தனதான்னிய நாசமோடுப்
பேசுவாய் பந்துவிற்குள் கலகமென்றே.

இ-ள். சூரியன்திசையில் சனிபுத்திமாதம் (11) நாள் (12) க்கும் அதின்பலன் ஜாதகனுக்கு இக்கட்டாகிய ஆபத்துகள் வரும் மனையாளுக்குப் பீடைகாட்டும் வாணிபமும் பூமியும்பொருள்போ

கும் அரசர்களில் ஆக்கினைவிதிக்கப்படும் பழியுண்டாகச்செய்வன் தனதான்யம சேதமாகும பந்துவர்க்கங்களில் கலகம்நேரும் எ-று.

சூரியன்திசையில் புதன்புத்தியின் பலாபலன்

என்னவேரவிதிசையில் புதனார்புத்தி
இயலாகுந் திங்கள்பத்து நாளாறிற்கும்
வண்ணமாம் பலனனைத்தும் வரையைக்கேளும்
வதுவையது தானாகும் புத்திருண்டாம
பண்ணவே பொற்பணியும் வஸ்திரலாபம்
பலித்திடுமே வித்தையொடு மகிழ்ச்சியுண்டாம்
உண்ணவே போசனமாஞ் சவுக்கியமோடே
உலகாளு மரசனினால் யோகமுண்டாம்

இ-ள் சூரியன்திசையில் புதனார்புத்தி மாதம் (10) நாள் (6) க்கும் அதின்பலன் ஜாதகனுக்கு கலியாணமாகும புதல்வருண்டாம் ஆடையாபரணம் வர்த்திக்கும் வித்தைப்பலிதமாகும் மனமகிழ்ச்சியுண்டாம் போசனசவுக்கியமும் உலகாளுமரசனால் யோகமுமுண்டாம் எ-று. 16

சூரியன்திசையில் கேதுபுத்தியின் பலாபலன்

உண்டெனவேரவிதிசையில் கேதின்புத்தி
ஒருநான்கு மாதமொடு நாளாறிற்கும்
தெண்டம்வருங் கிலேசமுடன் பந்துநாசப்
தேன்மொழியாமனையாட்கு மரிட்டமாகும்
பண்டாகு மரசர்பயம் விடத்தால் நஞ்சால்
பகருகின்றக் கருவியினால் படுத்துந்துன்பம்
திண்டாகும் வேளாண்மை செட்டும்பாழாம்
தேடியே தெண்டம்வரும் சார்ந்துகேளே.

இ-ள். சூரியன்திசையில் கேதுபுத்தி மாதம் (4) நாள் (6) க்கும் அதின்பலன் ஜாதகனுக்கு தெண்டம்வரும்கிலேசமுண்டாகும் பந்துக்கள்நாசமாகுவர் மனையாளுக்கு அரிட்டம்நேரும் அரசர்களால்பயமும் நஞ்சால்விஷத்தால் ஆயுதங்களால் துன்பம் விளவிக்கும் வேளாண்மையும் செட்டும்பாழாகும் தேடிசத்துருக்கள் வருவார்கள் எ-று. 17

சூரியன் திசையில் சுக்கிரன்புத்தியின் பலாபலன்

கேளப்பாரவிதிசையில் சுக்கிரன்புத்தி
கெடியானவருடமது வொன்றினிற்கும்
ஆளப்பாயதின்பலனை யறையக்கேளு
அடுத்திடுமே வாகனமும் பூமிலாபம்
வாளப்பா கொடுத்த காரியங்கள்சித்தி
வாழ்ந்திடுமேகன்றோடுக் காலிதானும்
வாளப்பா பலபிணியும் தீர்ந்துபோகும்
வரிவையெனு மனையாட்டுச் சிலுக்குண்டாமே.

இ-ள், சூரியன்மகாதிசையில் சுக்கிரன்புத்தி வருடம் ஒன்றிற்கும் அதின்பலன் ஜாதகனுக்குவாகனம் பூமிகிடைக்கும் எடுத்தகாரியம்சிததியாகும் கன்றுகாலிகவ்பெருகும்தேகத்தில்பலவிதமான பிணிகள்தீர்ந்துவிடும் மனையாளுக்கு உஷ்டணரோக முண்டாகும் எ-று. 18

சூரியாதி கிரகபலன் முற்றிற்று.

—

சந்திரன் நிலை.

ஆமெனவே சந்திரனு மொன்றுமூன்றும்
ஐந்துடனே யேழொன்பான் பதினொன்றிற்றான்
தாமெனவே நின்றிடவே பலனைக்கேளும்
தான்வாழ்வ னரைசனைபோல் தழைத்துவாழ்வன்
நாமெனவே நிரைதனமுந் தந்திரமந்திரம்
நானிலமெலாம் புகழக்கீர்த்தி யோங்கும்
காமெனவே களத்திரமொடு புத்திரமித்திரர்
காசினியில் தழைத்திருக்க காணலாமே.

இ-ள். சந்திரன் (1) (3) (5) (7) (9) (11) இந்தஸ்தானங்களில்நிற்க அரசனைப்போல வாழ்வுண்டாகும். தனலாபங்கிடைக்கும் தந்திரமந்திரங்களில் சமர்த்தனாவிருப்பன்யாவரும் புகழக்கீர்த்தி மானாகுவன். களத்திர புத்திர மித்திரர்களுடன் செழித்து வாழ்குவன் எ-று. 19

பாரப்பாசந்திரனு மிரண்டேழெட்டும்
பனிரண்டோடிருமூன்று நாலிலேதான்
கூரப்பா நின்றிடிலோப் பலனைக்கேளும்
கொடுமையதாம் பெண்டுபிள்ளைக்கரிட்டமாகுஞ்
சீரப்பா மாதருக்குப் பீடைகாட்டுஞ்
சேர்த்திட்ட வெகுபொருளுஞ் சேதமாகுங்
காரப்பா கள்ளரினால் கலகமுண்டாங்
கருமமில்லான் மூத்தானைக் காண்பானென்னே.

இ-ள். சந்திரன் (2) (7) (8) (12) (6) (4) இந்த ஸ்தானங்களில் நிற்க கொடுமைவிளையும் பெண்டு பிள்ளைகளுக்கு அரிட்டம் நேரும் தாயாருக்குப் பீடைகாட்டும் பொருள்சேதமாகும் களவு போம் கலகமுண்டாகும் மூதேவிவாசம்பண்ணுவள் எ-று. 20

சந்திர நட்பாட்சி யுச்சத்தில் நின்றபலன்.

தானெனவே சந்திர நட்பாட்சியுச்சந்
தனிலமா வரும்பலனைச் சாற்றக்கேளும்
தேனெனவே ஞானமொடு புகழும்வெற்றி
திகழாக நடக்குமணஞ் சீமந்தங்கள்
நானெனவே வித்தையொடு வீடுபூமி
நலந்தருகும் காலியொடு பெரியோர்நேயம்
தானெனவே போனகமும் புத்திரன்னை
தப்பாதுப் போகமுண்டா மென்றுசொல்லே.

இ-ள். சந்திரன், நட்பு, ஆட்சி, உச்சம் இந்த ஸ்தானங்களில் நிற்க, ஞானம், புகழ், வெற்றியுண்டாம். மணங்கூடும், சீமந்தம் நடக்கும். வித்தைப்பலிதமாகும் வீடு பூமி கிடைக்கும். மாடாடு விருத்தியாகும். பெரியோர்கள் நேயக்கூடும். கைவிட்டுப் போன வீடுகிடைக்கும் சுகமான பொசிப்புகிடைக்கும். புத்திர விருத்தியுண்டாகும் தாயாருக்குச் சுகபோகமுண்டாம் எ-று. 21

சந்திரன் பகை நீச்சத்தில் நின்றபலன்.

சொல்லவே சந்திரனும் பகைநீசத்தில்
சூழ்ந்துமே நிற்கபலன் செப்பக்கேளும்

தொல்லையாம் மனைவியொடு மக்களுக்கும்
தோன்றுமே மாதுருக்குங் கண்டந்தானும்
அல்லலாம் தொழில்பொருளும் பூமிநஷ்டம்
அடுக்குமே மாதுலன் தனக்குத்தீங்கு
புல்லவே பகையோடு பெண்ணால்நோயும்
பொருந்தியே வாய்க்குமெனப் பேசலாமே.

இ-ள். சந்திரன் பகைநீசத்தில்நிற்க மனைவிமக்களோடுதாயா ருக்குங் கெண்டமுண்டாகும். தொழில் பூமிபொருள் இவைகள் நஷ்டமாகும். மாதுலனுக்குத் தீங்குநேரும் பகைவினைவிக்கும்ஸ்தி ரீயினால் நோயுண்டாகும் எ-று. 22

சந்திரன் மகாதிசை பலன்,

பேசவே சந்திரனர் திசைபத்தாண்டும்
பேணியே நடக்கும்பலன் புகலக்கேளும்
வாசமா மன்னையொடு மாதுலர்க்கும்
வருஞ்சுகமே மணம்பொன்னு மைந்தர்விருத்தி
நேசமாம் வாகனமும் சிவிகைபூமி
லீலையாகுங் காமமா தடனேபோகம்
பாசமாம் சிமந்த மாகுங்கோளின்
பலமறிந்து ஜாதகர்க்குப் பகருவாயே.

இ-ள். சந்திரன் மகாதிசைவருடம் (10) ற்கும் அதின் பலன் தாயாருக்கும், மாதுலர்க்கும் சுகந்தரும். மணங்கூடும். பொருள் கிடைக்கும். புத்திரவிருத்தியாகும் வாகனம், பல்லக்கு, பூமிவந்து சேரும். அழகிய லீலை பெண்களுடன் செய்குவன். இவைகள் யாவும் கிரகங்களின் வலுவறிந்துச் சொல்லவேண்டும் எ-று. 23

சந்திரதிசையில் சந்திரபுத்தி பலாபலன்.

பாரப்பா பிறைதிசையில் பிறையின்புத்தி
பாங்காகுந் திங்கள்பத்தின் பலனைக்கேளும்
சீரப்பா பொன்பூமி மணமுங்கூடும்
சிறந்தவெகு மாடாடுஞ் செல்வமோங்கும்
பேரப்பா வாணிபமும் பலிதமாகும்
பிரபுவொடு அரசர்களின் நேயங்கூடும்
தேரப்பா தோழனது சேர்க்கையாலே
திரமாகவெதிரிகளை செயிக்கலாமே.

இ-ள். சநதிரன் மகாதிசையில் சந்திரனுர் புத்தி வருடம்(10) ற்கும் அதில் பலன் பொன், பூமிகிடைக்கும். கலியாணங்கூடும் மாடாடு விருத்தியாகும். செல்வம்பெருகும். வாணிபம்பலிதமாகும். பிரபுக்களும், அரசர்களும் நேயமாகுவர் உரவுகூடும். தோழனல் எதிரியை செயம்பண்ணுவான் எ-று 24

சந்திரன்திசையில் செவ்வாய்புத்தியின்பலாபலன்

தானுகும் பிறைதிசையில் செவ்வாய்புத்தி
தங்குகின்ற மாதமேழ் தனக்குங்கேளும்
ஊனுகுஞ் சுரபயமும் வாதஞ்சூலை
ஓங்கிடுமே பித்தமொடு அம்மைகாணும்
தேனுகு மனையாட்குப் பீடைக்காட்டும்
தேடிவந்த வேதியரால் வழக்குண்டாகும்
கானுகும் பூமிபோம் தீயால் வாதைக்
காட்டுமே யலைச்சலுந்தான் கண்டுவிள்ளே

இ-ள். சந்திரன் மகாதிசையில் செவ்வாயின்புத்தி மாதம் (7) ற்கும் அதின்பலன் சுரபயம், வாதம், கிரந்தியுண்டாம். பித்தமதிகரிக்கும் அம்மைகாணும். மனையாட்குப் பீடைகாட்டும். வேதியர்களின் வழக்குவந்தடுக்கும். பூமிபோகும். தீயனுல் வாதைநேரும் அலைச்சல்படுத்தும் எ-று. 25

சந்திரன்திசையில் இராகுபுத்தியின் பலாபலன்

விள்ளவே பிறைதிசையில் ராகுபுத்தி
வருடமது வொன்றேடு மாதமாற்கும்
தள்ளவே யதின்பலனைச் சாற்றக்கேளும்
தான்போகும் சத்துருவால் தனநாசந்தான்
கொள்ளுமே சர்ப்பபயம் பூதபீடை
கோதையெனு மனைபுதல்வர் வேறதாவர்
கள்ளமாம் மெய்தனிலே காயங்காணும்
கஞ்சிகூழ் தான்பொசிப்பன் கண்டுதேரே.

இ-ள். சந்திரன் மகாதிசையில் ராகுபுத்திவருடம் (1) மாதம் (6) ற்கும் அதின்பலன் சத்துருக்களால் தனச்சேதம்வரும் சர்ப்ப பயம்நேரும். பூதபீடைவாம்ட்டுமனையாளும் புதல்வர்களும்வேறு

படுகுவர். திரேகத்தில் காயங்காணும். சஞ்சலத்தோடு கஞ்சிகூழ் கிடைப்பது அரிது எ-று. 26

சந்திரந்திசையில் குருபுத்தியின் பலாபலன்.

தேரவே பிறைதிசையில் குருவின்புத்தி
தேடிவர் ஆண்டொன்று திங்களாறும்
கூறவே யிருந்தபலன் தன்னைக்கேளு
குலவிடும் வேளாண்மை பொருளுஞ்சேரும்
சேரவே யரசர்கள் மானமோடு
செட்டோடுப் பரிக்காலி லாபமுண்டாம்
வீரவே பலபிணியும் விட்டேயோடும்
விளங்கிடும் செல்வமுடன் கீர்த்திபாரே.

இ-ள். சந்திரன் மகாதிசையில் குருபுத்தி வருடம் (1) மாதம் (6) ற்கும் அதின்பலன் வேள்ளான்மை பலிதமாகும். பொருள் சேரும். அரசர்கள் சன்மானமாகும் செட்டு பலிதமாகும். குதிரை மாடு அதிகமாகச்சேரும் தேகத்திலுள்ள சகலவியாதியுந் தீரும். செல்வம்பெருகும் கீர்த்தியுண்டாகும் எ-று. 27

சந்திரந்திசையில் சநிபுத்தி பலாபலன்.

பாரப்பா பிறைதிசையில் சனியின்புத்தி
பரிவாகு மோராண்டும் மாதமேழும்
நேரப்பா யதின்பலனைச் சொல்லக்கேளு
நேர்ந்திடுமே பசிதாகம் பகையுங்கூட
கூரப்பா வரசரொடு மந்திரராலும்
குருவாலும் பொருளதுவுஞ் சேதமாகும்
காரப்பா எதிரிகளாற் றுன்பம்நேரும்
கனங்குலையு மென்றுநீ கண்டுகூறே.

இ-ள். சந்திரன்திசையில் சனிபுத்திவருடம் (1) மாதம் (7)ற்கும் அதின்பலன் பசிதாகமுண்டாகும் பகைநேரும். அரசர்களாலும், மந்திரிகளாலும், குருவாலும் பொருள்சேதமாகும் எதிரிகளாலும் துன்பமணுகும். பெருமை குறையும் எ-று. 28

சந்திரந்திசையில்புதன்புத்தியின்பலாபலன்

கூரவே பிறைதிசையில் புதனார்புத்தி
குணமாகு மாண்டொன்றுந் திங்களைந்தும்
தேரவே நின்றபலன் சொல்லக்கேளுந்
திகழாகும் ஆடையா பரணமுண்டாம்.
நேரவே பொன்பொருளும் வந்துசேரும்
நிலையான வியாபாரம் பலிதமாகும்
கோரவே வைசியர்தன் னேசங்கூடும்
கொற்றவர்க ளுதவியது உண்டுமாதே.

இ-ள். சந்திரன் மகாதிசையில் புதனார் புத்திவருடம் (1) மாதம் (5) ற்கும் அதின்பலன் ஆடையாபரணங்கள் கிடைக்கும்பொன்பொருள்வர்த்திக்கும் வியாபாரவிர்த்தியாகும் செட்டிகள் நேசங்கூடும் அரசர்கள் உதவியுண்டாம் எ-று. 29

சந்திரந்திசையில் கேதுபுத்தியின் பலாபலன்

சொல்லலாம் பிறைதிசையில் கேதுபுத்தி
சோர்வாகு மாதமது ஏழினிற்கும்
புல்லப்பா யதின்பலனைப் புகலக்கேளும்
புத்திரரொடு தந்தைதாய் நாசமாவர்
தொல்லையப்பா கால்களிலே நோயுண்டாகும்
தொடுக்குமே யரசர்பயம் நிந்தைகேடாம்
அல்லலப்பா கன்றுடனே காலிநஷ்டம்
அபாயம்வரும் சோரரால் கருவியாலும்

இ-ள். சந்திரன் மகாதிசையில் கேதுபுத்தி மாதம் (7) ற்கும் (அதின்பலன் புத்திரரொடு தாய்தந்தையர்கள்நாசமடைகுவர்துன்பம் கால்கள் நோயுண்டாகும். அரசர்களின் பகைநேரும். நிந்தையுண்டாகும் ஆடுமாடுகள் நஷ்டமாகும். அபாயம் சோரராலும் ஆயுதங்களினாலும் வெட்டுண்டாகும் எ-று. 30

சந்திரந்திசையில் சுக்கிரன்புத்தியின் பலாபலன்

மன்னிய பிறைதிசையில் சுக்கிரனார்புத்தி
மருவிய ஆண்டொன்று மாதமெட்டும்

உன்னையமா யதின்பலனை யுரைக்கக்கேளும்
ஓங்குமனம் மகிழ்ச்சியொடு புத்திரலாபம்
தன்னிய பாபம்போம் கீர்த்தியுண்டாம்
தழைத்திடுமே வாணிபமும் பூமிசேர்க்கை
கன்னியமாம் பொன்பொருளும் வந்துகிட்டும்
கருதிய வெங்கலபாத் திரமுண்டாமே.

இ-ள். சந்திரன் மகாதிசையில் சுக்கிரனார் புத்தி வருடம் (1 மாதம் (8) ற்கும் அதின்பலன் கலியாணங்கூடும் மகிழ்ச்சியுண்டாகும் புத்திரபாக்கியம்பெருகும் பாபம்விலகும் கீர்த்தியுண்டாகும். வியாபாரம்பலிக்கும் பூமிசேர்க்கையாகும் பொன்பொருள் வந்து சேரும் மினைத்தவைபோல் வெங்கலப் பாத்திரங்கள் வர்த்திக்கும் எ-று. 31

சந்திரந்திசையில் சூரியன்புத்தியின் பலாபலன்.

ஆமெனவே பிறைதிசையில் சூரியனார்புத்தி
ஆறுகு மாதத்தின் பலனைக்கேளும்
நாமெனவே வாதபித்தங் கண்ணோயுண்டாம்
நங்கையெனு மனையாட்குங் காட்டும்பீடை
காமெனவே கிரந்தியொடு குன்மநோயும்
காட்டுமே கழிச்சலொடு தந்தபாதை
தாமெனவே யலச்சலொடு திரிச்சலாகும்
தாண்டுவாள் லட்சிமியுந் தரித்திரங்காட்டும்

இ-ள். சந்திரன் மகாதிசையில் சூரியனார்புத்தி மாதம் (6) ற்கும் அதின்பலன் வாதபித்தரோகமுடன் கண்ணோயுண்டாம்மனையாட்குப்பீடைகாட்டும் கிரந்தியுங்குன்மநோயுமணுகும் கழிச்சலுண்டாகும் பல்லில்வியாதியுண்டாகும் அலைச்சலுந் திரிச்சலுண்டாகும் லட்சுமிவிலகிப்போவாள் தரித்திரம் சம்பவிக்கும் எ-று. 32

சந்திரன் மகாதிசையில் கிரகபலன்

முற்றிற்று.

அங்காரகன் நிலை.

காணவே செவ்வாயும் மூன்றோடைந்தார்
கருதிய யேழெட்டுப் பதினொன்றிற்றான்
பூணவே நின்றிடிலோ பலனைக்கேளும்
புகழோடு தேசங்கை வசமேயாகும்
வேணவே யாடையா பரணமுண்டாம்
விளங்கிடும் கல்வியொடு பொருளும்பூமி
தோணவே சவுக்கியமுந் துணைவர்நன்மை
தோகையெனு மாதர்களி னுறவுண்டாமே.

இ-ள். செவ்வாய் (3) (5) (6) (7) (8) (11) இந்த ஸ்தானங்களில் நிற்க புகழுண்டாம் தேசங்கிடைக்கும் ஆடையாபரணாதிகளுண்டாம் கல்வியொடு பொருளும் பூமியுண்டாம் சவுக்கியமாகும் துணைவர்களுக்குநன்மைதரும் ஸ்திரீகள் சேர்க்கையுண்டாகும் எ-று

அங்காரகன் பகைநீசத்தில் நின்றபலன்.

பாரப்பா செவ்வாயும் பகைநீசத்தில்
பழியாகத் தானிருக்கக் கீர்த்திபோகும்
கூரப்பா சுரபயமுந் தீயால்வாதை
குற்றமாஞ் சகோதரர்க்குப் பீடைகாட்டும்
நேரப்பா நஷ்டம்வரும் காலிபூமி
நேரிழையா மனைவியற்குங் கெண்டஞ்சொல்லு
பேரப்பா குறித்தபெண் பகையுமாகும்
பேணியதோர் தொழிலதுவுந் தீதாம்பாரே.

இ-ள். செவ்வாய்பகை நீசஸ்தானத்திலிருக்க கீர்த்திகெடும். சுரங்காணும் தீயனுல்வாதைநேரும் சகோதரர்களுக்குப் பீடைகாட்டும் கன்று காலி பூமி இவைகள்நஷ்டமாகும் மனையாளுக்கு கெண்டம்நேரும் விவாகத்திற்கு கேட்டபெண்நிலைக்காவாம் செய்யுந் தொழிலில் கெடுதிகாணும் எ-று. 34

அங்காரகன் திசையின்பலன்.

தீதாகுஞ் சேயின்திசை வருடமேழும்
செப்புகிறே னதின்பலனைச் சீராய்க்கேளு

வாதாகும் விரோதமுடன் சுரமுங்காணும்
வழக்காகும் மண்மனை யோடுசோரம்
கோதாகும் சகோதரர்க்குப் பீடைகாட்டும்
குற்றமாம் மெய்யில்ரத்தக் கட்டிதோன்றும்
போதாகுந் துஷ்டருர வாலுந்தானும்
பொல்லாதத் தீங்கென்றுப் புகலுவாயே.

இ-ள். செவ்வாயின் மகாதிசை வருடம் (7) ற்கும் அதின்பலன் விரோதமுண்டாகும் சுரங்காணும், கலியாணத்தினாலும், வீட்டினாலும், திருட்டினாலும், வழக்குண்டாகும். சகோதரர்களுக்குப் பீடைவிளைவிக்கும் தேகத்தில் ரத்தகட்டிக்காணும் துஷ்ட சிநேகிதரால் பொல்லாங்கு நேரும் எ-று. 35

அங்காரகன் திசையில் அங்காரகன்புத்திபலாபலன்.

புகலவே சேய்திசையில் சேயின்புத்தி
பொருந்திய மாதம்நால்நா ளிருபானேழும்
இகலவே யதின்பலனை யியம்பக்கேளு
இஷ்டமுள்ள மனைவிதனைப் பிரியச்செய்யும்
அகலவே சுரபயமுங் குஷ்டங்காணும்
அன்புள்ள சேய்மரிக்கும் பொருளும்போகும்
தன்னுடைய சோரர்களால் துன்பம்நேரும்
தன்னுண்டாஞ் செய்தொழிலின் கெடுதிதானே.

இ-ள். செவ்வாயின் திசையில் செவ்வாய் புத்தி மாதம் (4) நாள் (27) ற்கும் அதின்பலன் மனையாளைப் பிரிவுசெய்விக்கும் சுரங்காணும். குஷ்டவியாதியுனுகும் புத்திரருக்குமரணம் சம்பவிக்கும் பொருள்சேதமாகும் தன்னிடத்திலிருக்கப்பட்ட வேலைக்காரனாகியதிருடன் தான்செய்யுந் தொழிலில் கெடுதிநேரும்எ-று 36

அங்காரகன் திசையில் ராகுபுத்தியின் பலாபலன்.

தானாகும் செய்திசையில் யிராகுபுத்தி
தாவிய வருடமொன்றும் நாளீரொன்பான்
ஊனாரு மரசர்களால் பகையும்நேரும்
உத்தமனே பூமிபோம் ஊர்விட்டோட்டும்
தேனாகுந் தனதான்யம் நாசமாகும்
தீண்டிடும் பில்லிசூனியத்தால்துன்பம்

கோணுகும் முறவினற்குங் கெடுதியுண்டாங்
குலவியதோர் மைந்தன்வே றாவான்பாரே.

இ-ள். செவ்வாயின் மகாதிசையில் இராகுபுத்தி வருடம் (1) நாள் (18) ற்கும் அதின்பலன். அரசர்களால் பகைநேரும். பூமி போகும் ஊரைவிட்டோட்டும். தனதான்னியம்நாசமாகும்பில்லி சூன்னியத்தால் துன்பமணுகும். உறவின்முறையாருக்குக் கெடுதி சம்பவிக்கும். தன்னுடையபுத்திரன் வேராகப்பிரிந்துபோய் விடு
குவன். அலைச்சலுண்டாகும் எ-று. 39

அங்காரகன் திசையில்குருபுத்தியின்பலாபலன்.

ஆமெனவே செய்திசையில் குருவின்புத்தி
அடவாகும் மாதமதுப் பதினொன்றோடு
தாமெனவே நாளாற்கும் பலனைக்கேளு
தனதான்னியம் பலிசமுடன் மகிட்சியுண்டாம்
நாமெனவே சௌரியமும் அடிமையுண்டாம்
நாடிவரும் சிவிகையாபரணமாடை
பூமெனவேப் பூமியொடுப் புகழுமுண்டாம்
புவியரசர் நேயமுண்டாம் பேசிநில்லே.

இ-ள். செவ்வாயின்மகாதிசையில் குருவின்புத்திமாதம் (11) நாள் (6) ற்கும் அதின்பலன் தனதான்னியம் வர்த்திக்கும்மகிட்சி யுண்டாகும் சௌரியமுடையவநாகுவன் அடிமையாட்களுள்ளவன் பல்லக்குடன் ஆடையாபரணங்கள் கிடைக்கும் பூமிபெருகும் புக
ழுடன் அரசர்கள் நேயமுண்டாகும் எ-று. 40

அங்காரகன் திசையில்சனிபுத்தியின்பலாபலன்.

நில்லெனவே செய்திசையில் சனியின்புத்தி
நிகழ்த்திய வருடமொன்று மாதமொன்றும்
புல்லவே நாளொன்பான் பலனைக்கேளும்
புகலொணு துக்கமொடுச் சத்துருபீடை
சொல்லவே தனம்போகும் வேசியாலே
சுத்தமெனும் பந்துகளும் நாசமாகும்
அல்லவே சுபகிரகம் நோக்குண்டாகில்
அன்பாகுந் தொழில்விருத்தி யாகும்பாரே.

இ-ள். செவ்வாயின்மகாதிசையில் சனிபுத்திவருடம் (1) மாதம் (1) நாள் (9) ற்கும் அதின்பலன் சொல்லமுடியாததுக்கம்நேரும் சத்துருக்களால் பீடையுண்டாகும் பொருள்சேதமாகும் வேசியர்சேர்க்கையுண்டாம் பந்துக்கள்நாசமாகுவர் சுபக்கிரகம் பார்வையுண்டாகுமாகில் மேல்சொல்லியகாரியம் நடக்காவாம் எ-று.

அங்காரகன்திசையில் புதனார்புத்தியின் பலாபலன்.

பாரப்பாசெய்திசையில் புதனார்புத்தி
பதினொருமாதம் நாளிருபத்தேழ்க்கும்
சீரப்பா யதின்பலனைச் செப்பக்கேளும்
ஜெகத்தரச ருதவியொடு சம்பத்துண்டாம்
தேரப்பா போஜனத்தில் சவுக்கியமுண்டாம்
தேடிவரும் பூமியொடுப் புணிகளாடை
காரப்பா கல்வியது மேலாயோங்கும்
காணவே யெதிரிகளை செயிப்பானவிள்ளே.

இ-ள். செவ்வாயின் மகாதிசையில் புதனார்புத்திமாதம் (11) நாள் (27) ற்கும் அதின்பலன் அரசர்களால் உதவியுண்டாகும்சம்பத்துண்டாம் போஜனசவுக்கியமுண்டு பூமிஆபரணங்கள் ஆடையிவைகள் தேடவந்துவர்த்திக்கும் வித்தைஅதிகமாகவளரும் சத்துருக்களை செயம்பண்ணுவன் எ-று. 42

அங்காரகன்திசையில் கேதுபுத்தியின் பலாபலன்

விள்ளவே செய்திசையில் கேதின்புத்தி
விளங்கியமாதம் நால்நாளிருபத்தேழும்
தள்ளவே யதின்பலனைச் சாற்றக்கேளும்
தான்வருமே பொருள்சேசம் தேகவாதை
கொள்ளவே சபதங்க ளெல்லாம்போகும்
குறவாகு நீசர்களால் கலகம்நேரும்
உள்ளவே பூமியொடுத் தொழிலும்போகும்
ஊர்முழுதம் பகைநேரு முண்மைபேசே.

இ-ள். செவ்வாயின் மகாதிசையில் கேதுவின்புத்திமாதம்(4) நாள் (27) க்கும் அதின்பலன் பொருள்சேதம்வரும் திரேகத்தில் வியாதிதோன்றும் ஜெபதபங்கள் யாவும்போகும் நீசர்களால் கலகம்நேரும் பூமியும்தொழிலும்போகும் ஊர்முழுதும் பகையாகும் எ-று. 43

அங்காரகன் திசையில் சுக்கிரனார்புத்தியின்பலாபலன்.

பேசவே செய்திசையில் சுக்கிரனார்புத்தி
புகழாகும் வருடமொன் றும் மாதம்ரெண்டும்
வாசமாயதின்பலனை வழுத்தக்கேளும்
வளம்பெருகும் கீர்த்திகன்று காலியுண்டாம்
தோசமா மெதிரிகளை வெற்றிகொள்வன்
துலங்கிடுமே புகட்சியோடுப் போகமுண்டாம்
நேசமாம் பரிமளங்க ளணிவன்மெயில்
நேருமே யெத்தொழிலும் லாபமென்னே.

இ-ள். செவ்வாயின்மகாதிசையில் சுக்கிரனார்புத்திவருடம் (1) மாதம் (2) ற்கும் கீர்த்தியோங்கும். கன்றுகாலிகளுண்டாகும். எதிரிகளைசெயிப்பன். புகழ்ச்சியும் போகமுண்டாகும் மெய்யில் பரிமளாதிகள் அணிதுவன். தொழிலில் லாபங்காணும் எ-று. 44

அங்காரகன் திசையில் சூரியனார்புத்தியின்பலாபலன்

என்னவே செய்திசையில் சூரியனார்புத்தி
ஏவலாகும் மாதம்நால் நாளாறிற்கும்
பன்னவே யதின்பலனைப் பகரக்கேளும்
பாதையாம் மனைமக்கட் காகும்பீடை
வின்னமாம் வேந்தரால் பகையும்நேரும்
விளங்கிய சொற்பனங்க ளனேகங்காணும்
மன்னவே பகையதுவும் வந்துமூளும்
மாருதத் தலைவலியும் பல்நோயுண்டாம்

இ-ள். செவ்வாயின்மகாதிசையில் சூரியன்புத்தி மாதம் (4) நாள் (6) ற்கும் அதின்பலன் மனைய ளுக்கும்மக்கள்கட்கும்பீடை காட்டும். அரசர்களாலும். அமைச்சர்களாலும் பயம்வினையும் சொர்ப்பனங்கள்காண்பர்தலைவலியும் அநேகநோய்களுண்டாகும்எ-

அங்காரகன் திசையில் சந்திரனார்புத்தியின்பலாபலன்,

உண்டாகும்சேய்திசையில் சந்திரன்புத்தி
ஒரேழு மாதத்தின் பலனைக்கேளும்
பண்டாகும் மனைவியரால் செல்வமோங்கும்
பகைவர்களு வலியவந்து வணங்குவோர்கள்

விண்டிடவே குவலயத்தில் கீர்த்தியோங்கும்
விவாகமது தானாகும் புத்திரருண்டாம்
கொண்டிடவே குலதெய்வங் கிருபைநோக்கும்
கூறினோம் வாயுவாற் பீடையன்றே.

இ-ள். செவ்வாயின்திசையில் சந்திரனார்புத்தி மாதம் (7) ற்கும் அதின்பலன் மனையாளினால் செல்வம்வர்த்திக்கும் பகைவர்கள் வந்துவணங்குவார்கள். கீர்த்தியோங்கும் கல்லியாணங்கூடும். சந்ததியுண்டாகும் குலதெய்வந்துணையாகக்காக்கும் ஆனால்வாய்விலுண்டாகிய பீடைவிலகும் எ-று. 46

அங்காரகதிசையில் கிரகபலன்

முற்றிற்று.

இராகுநிலை.

அரையகேள் ராகுவுமே மூன்றாறேழும்
அஷ்டமத் தோடுபதி னொன் றில்நின்றால்
நிரையவே யதின்பலனை நிகழ்த்தக்கேளும்
நீடுமே ராஜயோகம மாதர்நேயம்
உரையவே வாகனங்கள் பூமியோடும்
உத்தமனே புத்திரரும் களத்திரமுண்டு
மறையவே தருமமொடுத் தானமோங்கும்
மணியமுடன் வர்த்தகங்கள் தானுண்டாமே.

இ-ள். இராகு (3) (6) (7) (8)(11) இந்தஸ்தானங்களில்நிற்க அதின்பலன் இராஜயோகமுண்டாகும் மாதர்கள்நேசமாகும்வாகனம்பூமிகிடைக்கும் புத்திரகளத்திரர்கள் பெருகிவாழ்வர் யாகம் தருமதானங்கள்செய்குவன். மணியம்பண்ணுவன். வர்த்தகயபலிதமாகும் எ-று. 47

தானாகும் ராகுவுமே வொன்றுரெண்டு
தனித்தநாலைந்தொன்பான் பத்தீராறில்
ஊனாக நின்றபலன் ஓதக்கேளும்
ஊருமே பிணிதுவ முடம்பிற்றானும்

வாகை வாய்வினால் வியாதிதோன்றி
  வரையக்கேள் கால்கரங்கள் வீங்கித்தானும்
பாகை நீரதில் வடிந்துத்தானும்
  பாக்கியங்கள் யாவும்போம் பழியாய்த்தானே.

இ-ள். இராகு (1) (2) (4) (5) (9) (10) (12) இந்த ஸ்தானங்களில்நிற்க அதின்பலன் திரேகத்தில் பிணியானதுகாணும். வாய்வினால்வியாதிதோன்றி வாதத்தினால் கால்கரங்கள்வீங்கி அதில் நீரானதுவடிந்து பாதையுண்டாக்கி சம்பத்துஅழிந்துபோகும் எ-று.

இராகு நட்பாட்சி யுச்சத்தில் நின்றபலன்.

காணவே ராகுநட் பாட்சியுச்சங்
  கருதியே நின்றிடிலோ பலனைக்கேளும்
பூணவே யோகமொடுப் பூமியுண்டாம்
  புகழாகும் மணங்கூடும் பயிர்செழிக்கும்
வேணவே பொன்பொருளு மாடையுண்டாம்
  விளங்கவே குடும்பமது செழித்துஓங்கும்
தோணவே மணியமுண்டாம் ராஜபேட்டி
  தொடுப்பாகக் கிடைக்குமெனத் தெரிந்துகூறே.

இ-ள். இராகுநட்பாட்சி யுச்சத்தில்நிற்க அதின்பலன் யோகமுண்டாம் பூமிகிடைக்கும். கல்யாணங்கூடும் பயிர்செழித்துவிளையும் பொன், பொருள், வஸ்திரலாபங்கள் கிடைக்கும் குடும்பமானது செழித்துஓங்கும். மணியமுண்டாம். இராஜபேட்டிகிடைக்கும் எ-று. 49

இராகு பகைநீசத்தில் நின்றபலன்.

கூரப்பா இராகுவுமே பகைநீசத்தில்
  குற்றமாய் நின்றிடிலோ பலனைக்கேளும்
பாரப்பா அகத்தைவிட் டப்பாலேக்கும
  பழியாகப் பாம்பதுவுங் கடிக்கும்பாரு
நேரப்பா யிராஜபயம் வழக்குமுண்டாம்
  நிந்தையாம் வெகுஜன விரோதியாக்கும்
சீரப்பா வயற்றுநோய் கழிச்சலோடு
  ஜென்மனுக்கு மரணமது நேரும்பாரே.

இ-ள். இராகுபகைக்ஷேத்திலிற்க அதின்பலன் வீட்டைவிட்டு அப்பால்துரத்தும் பாமபுகடிக்கும் இராஜாக்களால் பயம்நேரும் வழக்குண்டாகும் வெகுஜனங்களுக்கும் விரோதியாக்கி வைக்கும் வயற்றுவலியோடு பேதியுண்டாகும் அதினால்ஜாதகனுக்குமரணம் சம்பவிக்கும் எ-று. 50

இராகு மகாதிசைபலன்.

பார்க்கவே ராகுதிசைப் பதினெட்டாண்டும்
பகருகிறே னதன்பலனைப் பண்டாய்க்கேளு
பார்க்கவே தனச்சேதம் பிதுர்க்குக்கண்டம்
பழியாகச் சத்துருவாற் றுன்பமநேரும்
பார்க்கவே வாகனமு மனையுமநாசம்
பண்பான மனைவியரும் பகையுமாவாள்
பார்க்கவே சலிப்போடு வெறுப்புமுண்டாம்
பற்றிடும் வியாதியினல் பாதைசெய்யும்

இ-ள். இராகுவின்மகாதிசை வருடம் (18) க்கு அதின்பலன் தனச்சேதம்வரும். தகப்பனுக்குமரணகண்டம்நேரும் சத்துருக்களால் துன்பமவிளைவிக்கும். வாகனமும்வீடும நாசமாகும். பெண்சாதிப் பகையாகுவள். மனதில்கிலேசமுங் கோபமுந் தோன்றும். வியாதியினல் பாதையுண்டாம் எ-று. 51

இராகுதிசையில்இராகுவின்புத்தியின்பலாபலன்

செய்யவே பணிதிசையில் ராகுபுத்தி
செப்பிய வருடம்ரெண்டும் மாசமெட்டும்
கையவே நாளதுவும் பனிரெண்டாகும்
நவிலுகிறே னதின்பலனை நன்றாய்க்கேளு
துய்யவே யரசரொடு மிருகத்தாலும்
தொடுக்குமாயுதங்களினல் துன்பமுண்டாம்
ஐயமாம் மனையாட்கும் மரணம்நேரும்
அடுத்திடுமே மெய்தனிலே பிணியுந்தொந்தம்.

இ-ள். இராகுதிசையில் இராகுபுத்தி வருடம் (2) மாதம் (8) நாள் (12) க்கும் அரசர்களாலும் மிருகங்களினலும் ஆயுதங்களினலும் துன்பமுண்டாம பெண்சாதிக்கு மரணம்நேரும் திரேகத்தில பிணியானது அடுத்து வாதையுண்டாக்கும் எ-று. 52

இராகுதிசையில் குருபுத்தியின் பலாபலன்.

தொங்கமாம் ராகுதிசைக் குருவின்புத்தி
 கொடுத்திட்ட வருடம்ரெண்டு மாதம்நாலும்
அந்தமுற நாளதுவு மிருபத்தேழும்
 அடித்திடவே யவர்கொடுக்கும் பலனைக்கேளு
விந்தையா மரசர்களால் வருகுஞ்செல்வம்
 விளங்கிடுந் தனதான்னியம் பூஷணங்கள்
பந்தமருங் காலிகன்று பயிற்செழிக்கும்
 பரிவாக நினைந்தபொருள் வசங்களாமே.

இ-ள். இராகுமகாதிசையில் குருவின்புத்திவருடம் (2) மாதம் (4) நாள் (27) ற்கும் அதின்பலன். அரசர்களாலசெல்வங்கிடைக்கும். தனதான்னியங்கள்பெருகும். பந்தமென்னும்வினையகலும். கன்றுகாலிகள்சேரும் பயிர்செழிக்கும், நினைத்தபொருள் கைவசமாகும் எ-று. 53

இராகுதிசையில்சனிபுத்தியின்பலாபலன்.

ஆமெனவே ராகுதிசை சனியின்புச்தி
 ஆண்டுரெண்டு மாதம்பத்து நாளீறர்க்கும்
போமெனவே தேசாந்திரம் திரியச்செய்யும்
 பொல்லாங்காய் தந்தைக்குப் பீடையுண்டாம்
தாமெனவே மனைவியற்குப் பிணியுண்டாகும்
 தான்வருமே கொடும்பகையு மனையில்பாதை
நாமெனவே புத்திரரும் நாசமாவர்
 நடுக்கமாம் காலிகன்றுப் பொருளுந்தீதாம்

இ-ள். இராகுமகாதிசையில் சனிபுக்திவருடம் (2)மாதம்(10) நாள் (6) ற்கும் அதின்பலன் தேசாந்திரம் போகச்செய்யும் தகப்பனுக்குப் பீடைக்காட்டும் மனையாளுக்கு வியாதி தோன்றும், அநியாயமாகப்பகைநேரும் மனையில்தீயால்பாதையுண்டாகும்புத்ரர்கள் நாசமடைகுவர். காலிகன்றுபொருள் இவைகள்யாவும்தீதாக அழிந்துபோகும் எ-று. 54

இராகுதிசையில் புதனார்புத்தியின் பலாபலன்.

கேளப்பா ராகுதிசைப் புதனார்புத்தி
 கெணிதமுடன் வருடம்ரெண்டு மாதமாரும்

நாளப்பா பதினெட்டும் பலனைக்கேளு
நேர்டிவரும் பொன்பொருளு மகிழ்ச்சியுண்டாம்
தாளப்பா வெகுஜனப் பிரீதியாவன்
தழைத்திடுஞ் செட்டுவே ளாண்மைசெல்வம்
மீளப்பா பகைவர்களை ஜெயங்கள்செய்வன்
மிக்கவே யரசர்களால் உதவிநேரும்.

இ-ள். இராகுமகாதிசையில் புசனுர்புத்திவருடம் (2) மாதம் (6) நாள் (18) ற்கும் அதின்பலன் பொன் பொருள் வந்துசேரும் மனமகிழ்ச்சியுண்டாகும் வெகுஜனங்களுக்கும் பிரீதியுடையவனாக விருப்பன் செட்டுவேளாண்மைசெழிக்கும் செல்வமோங்கும்பகைவர்களை செயம்பண்ணுவன் அரசர்களால் உதவியுண்டாகுமௌ-று.

இராகுதிசையில் கேதுபுத்தியின் பலாபலன்

நேரவே ராகுதிசைக் கேதுபுத்தி
நிகழ்த்திய் வருடமொன்று நாளீரொன்பான்
பாரவே யதின்பலனைப் பகாக்கேளு
பதரிடவே மனைதனிலே கொள்ளைபோகும்
கூரவே மனைவிமக்க ளடிமையோடே
கொறறவரும் பகையாவர் மானம்போகும்
சீரவே போஜனங்க ளர்ப்பமாகும்
சிந்தனையாம் மனக்கவலை செப்பொணுதே,

இ-ள். இராகுமகாதிசையில் கேதுவின்புத்திவருடம் (1)நாள் (18) ற்கும் அதின்பலன் வீட்டில்கொள்ளைபோகும், தன்னுடைய மனைவிமக்கள் அடிமையாட்கள், அரசர்கள்பகையாகுவர். மானங்கெடும் அகாலபோஜனமாகும் மனக்கவலைநேரும் எ-று. 56

இராகுதிசையில் சுக்கிரன்புத்தியின் பலாபலன்

செப்பவே யிராகுதிசை சுக்கிரனர்புத்தி
சேர்ந்திட்ட மூவ்வாண்டின் பலனைக்கேளு
மெப்பவே பூமியொடுப் பொருளுஞ்சேரும்
மேலாகு மனைவிமைந்தர் மகிழ்ச்சியுண்டாம்
ஒப்பவே கோவுடனே யெருமைசேரும்
ஓங்கிடுந் தான்னியமுடன் மனையும்பூமி

தப்பவே பெரியோர்கள் நேயங்கூட்டும்
சம்பத்தாய் வாழ்ந்திடுவன் சாற்றக்கேளே.

இ-ள். இராகுமகாதிசையில் சுக்கிரன்புத்திவருடம் (3) க்கும் அதின்பலன் பூமிபொருள்சேரும். மனையாளுக்கும் மைந்தர்களுக்கும்மகிழ்ச்சியுண்டாம் பசுமாடு, எருமைமாடுகள் அதிகமாக விருத்தியாகும் தான்னியம்பலிதமாகும். மனையும் பூமியும் கிடைக்கும் பெரியோர்களின்நேயங்கூடும் சம்பத்துண்டாகும் எ-று. 57

இராகுதிசையில் சூரியனார்புத்தியின் பலாபலன்

சாற்றிடவேராகுதிசை சூரியனார்புத்தி
சதிராகுந்திங்கள்பத்தும் நான்மூவெட்டும்
தோற்றிடவே யதின்பலனை செப்பக்கேளு
தோஷமாம் பந்துபகைத் தாரம்பாழாம்
வேற்றிடவே யலைச்சலொடு வீடும்பாழாம்
வெகுபொருளும் பூமியொடு அடிமைசேதம்
நாற்றிசையும் பகைவிளையும் சிரநோயுண்டாம்
நாடுமே பிரமராட் சதையுமின்னே

இ-ள். இராகுமகாதிசையில் சூரியனார்புத்தி மாதம்(10)நாள் (18) க்கும் அதின்பலன் பந்துக்கள்யாவரும் பகையாகுவர். மனையாள்சேதமாகுவள் அலைச்சல்உண்டாம் வீடுப்பாழாகப் போகும் பொருளோடு அடிமையும்சேதமாகும் ஊர்முழுதும்பகைவிளைவிக்கும் தலையில்நோயுண்டாகும் அந்தமனையிலும் அந்தவீட்டுப்பெண்களிடத்தும் பேயிருந்து ஆடும் எ-று. 58

இராகுதிசையில் சந்திரனார்புத்தியின்பலன்

என்னவே ராகுதிசை சந்திரன்புத்தி
இயம்பிடும் வருடமொன்று மாதமெட்டும்
மின்னவே யதின்பலனை மொழியக்கேளு
மிகவிளைவாம் சென்னலுடன் பூமிலாபம்
தின்னவே வேந்தருட வாவியுண்டாம்
துலங்கிடும் வாணிபமு மைந்தர்கீர்த்தி
பன்னவே பாக்கியங்கள் பலிதமாகும்
பன்பாகுங் கிரகவலி யரிந்துபேசே.

இ-ள். இராகுமகாதிசையில் சந்திரனார்புத்திவருடம் (1) மாதம் (8) ற்கும அதின்பலன் தனதான்யம் அதிகமாகவிளையும் பூமிலாபங்கிடைக்கும் அரசர்களின் உதவியுண்டாம் வாணிபவிருத்தியாகும் மைந்தர்களினால் கீர்த்தியோங்கும் அதிகப்பொருள்கைகூடும் இவையெல்லாம் சந்திரனுடைய வலுவறிந்து சொல்லவும்எ-று

இராகுதிசையில் செவ்வாய்புத்தியின் பலாபலன்

பேசவே ராகுதிசை செவ்வாய்புத்தி
பேணிய வாண்டொன்று நாளீரொன்பான்
நேசமா யதின்பலனை நிகழ்த்தக்கேளும்
நேருமே சோரர்பயம் தீயால்வாதை
வாசமாம் தேவதையால் வாதைவுண்டாம்
வளமில்லை மங்கையரால் பலனுந்தீதாம்
கூசவே வயித்திய ரோகங்காட்டுங்
குற்றமாம் நிந்தையொடு வலைச்சல்பாரே.

இ-ள். இராகுமகாதிசையில் செவ்வாய்புத்தி வருடம்(1)நாள் (18) ற்கும அதின்பலன் சோரர்களால்பயம்நேரும் அக்கினியால் வாதையுண்டாகும். குலதெய்வத்தினால்பாதைநேரும் மனையாட்டினால்கெடுதியுண்டாக்கும் தீங்குசம்பவிக்கும் பலநழியும் பயித்தியரோகங்காட்டும் நிந்தையாகும அலைச்சல்படச்செய்யும் எ-று. 60

இராகுதிசையில் கிரகபலன்

முற்றிற்று.

வியாழன் நிலை.

பாரப்பா குருவேதான் ரெண்டுவைந்தேழ்
பரிவாகும் நவத்தோடு பதினொன்றில்தான்
சீரப்பா நின்றபலன் செப்பக்கேளும்
சிவிகையொடு கரிபரி கல்லியாணங்கூடும்
நேரப்பா பூஷணமும் மறையோர்நேயம்
நிலையாகு மரசருடப் பேட்டிகாணும்

கூரப்பா சுகமெல்லாங் கொடுக்கு மெத்தக்
குடும்பமது தான்செழிக்குங் கீர்த்தியோங்கும்.

இ-ள், குரு (2) (5) (7) (9) (11) இந்த ஸ்தானங்களில் நிற்க அதின்பலன் சிவிகைகிடைக்கும் யானை குதிரைகள் உண்டாகும். கல்லியாணங்கூடும் பூஷணாதிகள் அணிகுவன் பிராமணர்கள் நேயமுண்டாகும். சுகங்கள்யாவும் அனுபவிப்பன் குடும்பம்செயிக்கும் கீர்த்தியோங்கும் எ-று. 61

ஓங்கவே குருவேதா னொன்றுமூன்றும்
உகந்தநா லாறெட்டுப் பத்திராறில்
தீங்காக நின்றிடிலோப் பலனைக்கேளு
தேடியப் பொருள்பூமி சேதமாகும்
வாங்கவே யகத்தினிலே யலைச்சலோடு
வாதபித்த ரோகமது வந்துவாட்டும்
தேங்கவே தந்தையொடு புத்திரர்க்கும்
தேடிவரும் மரணமது திகிலுண்டாமே.

இ-ள், [illegible] 1) (3) (4) 6)(8)(10)(12) இந்தஸ்தானங்களில் நிற்க அதி[illegible] தேடியப்பொருளும் பூமியும்சேதமாகும் மனையாட்கும் பு[illegible]க்கும் அலைச்சல்[illegible]தும் வாதபித்தரோகம் சம்பவிக்கும் தந்தைக்கும் புத்திரர்களுக்கும் மரணம்நேரும் அதினால் மனதில் கிலேசமுண்டாகும் எ-று 62

குருநட்பாட்சியுச்சத்தில் நின்றபலன்.

ஆமெனவே குருநட்பு ஆட்சியுச்சம்
அமர்ந்துமே நின்றிடிலோ பலனைக்கேளு
தாமெனவே பூமிபொன் போகமோடுந்
தழைக்கவே புத்திரர்கள் விருத்தியுண்டாம்
சோமெனவே யாசாட்சி காரியமுண்டாம்
சூழ்ந்திடுமே சேனையொடு அநேகர்நேயம்
ராமெனவே கன்னியர்தம் போகமோங்கும்
நானிலமெ லாம்புகழு கீர்த்திதானே.

இ-ள். குரு நட்பாட்சி யுச்சத்திலிருக்க அதின்பலன் பூமி பொன்போகமுண்டாம் புத்திரவிருத்தியாகும் அரசுபுரிகுவன் சே

ணகள்சூழ யாவரும் சினேகமாகுவர். கன்னியரினால் யோகமுண்டாம் நானிலமெங்கும் புகழத்தக்க கீர்த்திபெருகும். ருசயோகசாதகமாகும் எ-று. 63

குருபகைநீசத்தில் நின்றபலன்,

தானுகுங் குருவுபகை நீசந்தன்னில்
தங்கியே நின்றிடிலோ பலனைக்கேளும்
தேனுகுந் தந்தையற்குப் பீடைக்காட்டும்
தேடிவருங் களத்திரபுத் திரர்க்குந்துன்பம்
ஊனுகும் பொன்பொருளுஞ் சேதமாகும்
ஓங்கியவா கனசேதங் கீர்த்திபோகும்
மானுகுஞ் செல்வம்போம் அரிட்டரோகம்
மன்னியே வந்தணுகு மகிழ்ந்துபேசே.

இ-ள். குருபகைநீசத்தில்நிற்க அதின்பலன் தகப்பனுக்குப் பீடைகாட்டும். மனையாளுக்கும் புத்திரர்களுக்கும் துன்பமானது அணுகும். பொன்பொருள்சேதமாகும் வாகனசேதமாகும். கீர்த்தியானதுஅழியும் செல்வம்போவதுமன்றி மரணத்து[illegible]நச் சமானமான வியாதியுண்டாகும் எ-று. 64

குருமகாதிசையின் பலாபலம்.

அரியவே குருதிசைதான் யீரெட்டாண்டும்
அன்பாகு மதின்பலனை அறையக்கேளும்
தெரியவே வாகனம்பொன் பூமிசேரும்
திகழாகு மாடையா பரணமுண்டாம்
நிறையவே பந்துகளும் நேயமாவர்
நிலையாரும் மனைவிமக்கள் நீடிவாழ்வர்
பிரியமா மாரோக்கியந் தேவபூஜை
பேசிய யிவையாவும் பலிக்கும்பாரே.

இ-ள். குருமகாதிசைவருடம் (16) ற்கும் அதின்பலன் வாகனம்பொன், பூமி இவைகள்கிடைக்கும் ஆடையாபரணாதிகள் பெருகும் பந்துஜனங்கள்நேயமாகுவர். மனையாளும், மக்களும் சுகமாகவாழ்வார்கள் ஆரோக்கியமுன்டாம் தேவபூஜைநடக்கும் புகழுண்டாம் எ-று. 65

குருமகாதிசையில் குருபுத்தியின் பலாபலன்

பாரப்பா குருதிசையில் குருவின்புத்தி
பன்பாகும் வருடம்ரெண்டு மாதமொன்றுஞ்
சீரப்பா நாளதுவும் பதினெட்டிற்குஞ்
செப்புகிறே னதின்பலனைச் சீராய்க்கேளு
தேரப்பா குருவரச ரருளுமுண்டாம்
தேடிவரும் திரவியங்கள் லாபமுண்டாம்
பேரப்பா பெண்கொடியாள் மகிழ்ச்சியுண்டாம்
புகழாகுஞ் சோபனங் கல்லியாணமாமே.

இ-ள். குருமகாதிசையில் குருபுத்திவருடம் (2) மாதம் (1) நாள் (18) ற்கும அதின்பலன் குருவருளும்அரசர்கள்அருளுமுண்டாம் திரவியலாபமுண்டாம் மனையாளுக்கு மகிழ்ச்சியுண்டாம்வீட்டில் சோபனகல்லியாணமும் நடக்கும் புகழுண்டாகும் எ-று. 66

குருதிசையில் சனியனுர்புத்தியின் பலாபலன்.

ஆமப்பா குருதிசையில் சனியின்புத்தி
ஆண்டுரெண்டு மாதமார் நாளீரார்க்கும்
நாமப்பா யதின்பலனை நவிலக்கேளும்
நாட்டில்மிகு கீர்த்தியொடு யோகசித்தி
தாமப்பா மனையாட்குங் கோபமுண்டாம்
தன்மையுடன் பூஷணந் திரவியங்கள்சேரும்
காமப்பா மன்னன்போல் வளரும்யோகம்
கருதியவா கனங்களெல்லாங் கிடைக்கும்பாரே.

இ-ள். குருமகாதிசையில் சனியனுர்புத்திவருடம் (2) மாதம் (6) நாள் (12) ற்கும அதின்பலன் யாவரும்புகழக் கீர்த்தியோங்கும் யோகசித்தியாகும். மனையாளுக்குகெர்ப்பந்தரிக்கும பூஷணம் திரவியங்கள்கிடைக்கும மன்னனைப்போல் ருசயோகம் அதிகரிக்கும் வினைந்த வாகனதிகள் கிடைக்கும் எ-று. 67

குருதிசையில் புதனுர்புத்தியின் பலாபலன்

எண்ணவே குருதிசையில் புதனுர்புத்தி
இயலாகும் மாண்டுரெண்டு மாதமூன்றும்

உண்ணவே நாளாற்கும் பலனைக்கேளு
  உண்டாகுங் கடல்போலே பெருகுஞ்செல்வம்
வண்ணமா மனைவியொடு மைந்தர் தாமும்
  வளம்பெரவே கட்டாகப் பொருந்திவாழ்வர்
பண்ணவே பாராளப் பட்டங்கட்டும்
  பதிதனிலே லட்சுமியும் வாழ்வாள்பாரே.

இ-ள். குருமகாதிசையில் புதனுர்புத்திவருடம் (2) மாதம்(3) நாள் (6) ற்கும அதின்பலன் செல்வமானது மலைப்போல் பெருகும் மனைவியர்மைந்தர்கள் பொருந்திவாழ்குவர் பாராளும்படிக்குச்செய்யும் தன்னுடையமனையில் லட்சுமிவாழ்குவள் எ-று. 68

குருதிசையில்கேதுவின்புத்தியின் பலாபலன்

பாரப்பா குருதிசையில் கேதுபுத்தி
  பதினொரு மாதமொடு நாளாறிற்கும்
கூரப்பா யதின்பலனைச் சொல்லக்கேளு
  குற்றமாம் வியாதியினல் மரணமாவர்
மாரப்பா சத்துருவால் பாதைநேரும்
  மனைவியினுல் பதிவிட்டுப் போகச்செய்யும்
வீரப்பா விளங்கியப்பாக் கியங்களெல்லாம்
  வெகுஜனமும் சணத்திலே யழிந்துபோமே.

இ-ள். குரு மகாதிசையில் கேதுவின் புத்தி மாதம் (1) நாள் (6) ற்கும் அதின்பலன் வியாதியானது சம்பவித்துக் கொலலும் சத்துருக்களால் பாதைநேரும் மனையாளினுலபதிவிட்டுப் போகச் செய்யும் பாக்கியங்கள்யாவும் பந்துக்களும் அழிந்துபோகும்எ-று

குருதிசையில் சுக்கிரனுர்புத்தியின் பலாபலன்

போமெனவே குருதிசையில் சுக்கிரன்புத்தி
  பொருந்திய ஆண்டிரெண்டு திங்களெட்டும்
சேமெனவே யதின்பலனைச் செப்பக்கேளும்
  செந்திருவும் பதிதனிலே சேர்ந்துவாழ்வள்
சோமெனவே சோபனமு மகிழ்ச்சியுண்டாம்
  சுந்தரமாம் கன்னியுடன் சேர்ந்துவாழ்வன்
தாமெனவே, நாடுநகர் கைவசமேயாகும்
  தரணிதனில் நன்மையுடன் வாழ்வான்சொல்லே,

இ-ள். குருமகாதிசையில் சுக்கிரனார்புத்திவருடம் (2) மாதம் (8) ற்கும் அதின்பலன் லட்சுமி கடாட்சமுண்டாகும் சோபனம் நடக்கும் மகிழ்ச்சியுண்டாகும் அழகுபொருந்திய பெண்ணாகிய மனையாளோடு கூடிவாழ்குவன் நாடுநகர்கைவசமாகும் பூமியின்கண் நன்மையாக வாழ்குவன் எ-று. 70

குருதிசையில் சூரியனார்புத்தியின்பலாபலன்

சொல்லவே குருதிசையில் சூரியனார்புத்தி
சூட்சமாந் திங்களொன்பான் நாளிரொன்பான்
புல்லவே யதின்பலனைப் புகலக்கேளும்
புவிதனிலே பரதேசி யாகச்செய்யும்
அவ்வலில்லா மடபதியில் குருவேயாவன்
அருளாகும் ஞானமதை யறிந்துதேர்வன்
தொல்லையிலா சிவனடியை தினமும்போற்றி
தொழுதுமே மறவாமல் நிற்பான்கண்ணே.

இ-ள். குருமகாதிசையில் சூரியனார்புத்திமாதம்(9)நாள்(18) ற்கும் அதின்பலன் தேசாந்திரத்திற்சென்று மடாதிபதியில் குருவாகவிருப்பன் ஞானங்கள்யாவு மறிகுவன் சிவபிரானடியையெந்நாளும் மறவாதவனாய்த் தொழுதுநிற்பன் எ-று. 71

குருதிசையில் சந்திரனார்புத்தியின்பலாபலன்

நிற்கவே குருதிசையில் சந்திரனார்புத்தி
நிலையான வருடமொன்று மாதம்நாலும்
மிக்கவே யதின்பலனைச் சொல்லக்கேளு
மேலாகுஞ் சோபனங் கல்லியாணங்கூடும்
புக்கவே யரசரால் பெருகுஞ்செல்வம்
புகழாகுந் தாய்தந்தை மனைவிபுத்திரர்
சிக்கவே வாழ்வுண்டுச் சிவிகையுண்டு
சீரான வெண்குடையுஞ் சேரும்பாரே.

இ-ள். குருமகாதிசையில் சந்திரனார்புத்தி வருடம்(1) மாதம்)4) ற்கும் அதின்பலன் மனையில்சோபனம் நடக்கும் கலியாணங் கூடும் அரசர்களால் செல்வம்பெருகும் தாய் தந்தை மனைவி புத்திரர்கள் சுகமாகவாழ்குவர் சிவிகையும் வெண்குடையுமுண்டு எ-று.

குருமகாதிசையில் செவ்வாய்புத்தியின் பலாபலன்

பாரப்பா குருதிசையில் செவ்வாயின்புத்தி
பதினொரு மாதமுடன் நாளாறிற்கும்
சீரப்பா யதின்பலனைச் செப்பக்கேளு
செய்யுமே ரணபாதை யக்கினிபாதை
கூறப்பா விளைவதுவு மற்பமாகும்
குற்றமா மாடாடு மங்கிச்சாகும்
நேரப்பா யெவ்விடத்தும சத்ருவுண்டு
நேருமே விலங்கதுவும் நிசஞ்சொன்னோமே.

இ-ள். குருமகாதிசையில் செவ்வாய்புத்திமாதம்(11)நாள் (6)ற்கும் அதின்பலன் பிளவையினாலும் அக்கினியினாலும் பாதைப்படும்படிச்செய்கும் பலதான்னியங்கள் விளையாவாம் மாடாடுகள்சாகும் எந்தவிடத்திற்கு ஏகினபோதிலும் சத்துருக்களால் துன்பம் நேரும் விலங்குவரும் எ-று. 73

குருமகாதிசையில் இராகுவின்புத்தியின் பலாபலன்

சொன்னோமே குருதிசையில் ராகுபுத்தி
சூழ்ந்திடுமே வருடம்ரெண்டு மாதம்நாலும்
வின்னமாம நாளதுயிரு பத்திநாலும்
விளங்கிடு மதின்பலனை விளம்பக்கேளு
பன்னவே வியாதிப்பீ டிக்கும்பாரு
பழியாக மனைவிபுத்திரர் சேதமாவர்
அன்னிதமாய் சத்துருவா லிடஞ்சலுண்டாம்
அலச்சலமிகப் படுத்துமென வரைந்திடாயே

இ-ள். குருமகாதிசையில் இராகுபுத்திவருடம் (2) மாதம்(4) நாள் (24) ற்கும் அதின்பலன் திரேகத்தில் வியாதியானதுப்பீடிக்கும் மனையாளுக்கும் புத்திரர்களுக்கும் மரணம்சம்பவிக்கும் சத்துருக்களால் யிடைஞ்சலானதுநேரும் அலைச்சல்படுத்தும எ-று. 74

குருதிசையின் கிரகபலன்

முற்றிற்று.

சனியின் நிலை.

கேளப்பா சனியனுமே மூன்றைந்தாறு
கெணுதமுடன் பதினொன்றில் நிற்கக்கேளும்
தாளப்பா யதின் பலனை சொல்லக்கேளு
தரித்திடுமே போகமொடு ஆயுள்விருத்தி
வேளப்பா விவாகமது மனையிலாகும்
வென்றிடுவன் சத்துருவை வெகுவாய்தானும்
நாளப்பா யாடையா பரணமுண்டாம்
நலமிருக்கும் மனைவிபுத்திரர் சுகமுண்டாமே.

இ-ள். சனி (3) (5) (6) (11) இந்தஸ்தானங்களில் நிற்க அதின்பலன் போகமுண்டாம். ஆயுள்விருத்தியாகும்விவாகம்கூடும்சத்துருக்களை செயம்பண்ணுவான் ஆடையாபரணாதிகள் கிடைக்கும் மனையாளும் புத்திரர்களும் சுகமடைகுவர் எ-று. 75

ஆமெனவே சனியொன்று ரெண்டுநான்கு
ஐந்தேழு யெட்டொன்பான் பத்தீராறில்
நாமெனவே நின்றபல நவிலக்கேளு
நாடிவரும் பகையோடு அலைச்சலுண்டாம்
போமெனவே தனதான்யச் சேதமாகும்
பொல்லாதப் பீடையுடன் வழக்குநேரும்
ஆமெனவே ஆயுள்து குறைந்துபோகும்
அடுத்திடுமே யினப்பகையுஞ் சண்டைதானே.

இ-ள். சனி (1) (2) (4) (7) (8) (9) (10) (12) இந்த ஸ்தானங்களில்நிற்க அதின்பலன்பகைநேரும அலைச்சல்படுத்தும் தனதான்னியஞ்சேதமாகும் பீடைக்காட்டும்வழக்குநேரும துன்பம்உண்டாகும் ஆயுசுக்ஷீணமாகும் இனத்தில்கலகம்நேரும் பந்துக்களில் சண்டையாகும எ-று. 76

சனி நட்பாட்சி யுச்சத்தில் நின்றபலன்.

தாணுகுஞ் சனிநட்பு ஆட்சியுச்சஞ்
தனில்நிற்க வதின்பலனைச் சாற்றக்கேளு
கோணுகு மாயுளது விருத்தியாகும்
கூடிவரும தனலாபம் பூமிலாபம்

தேனுது மித்திரர் புத்திருமுண்டாம்
 நீங்காக வந்தநோய் பகையுந்தீரும்
ஊனுது மரசருட நேசமுண்டாம்
 உத்தமனே வீடுடனே சம்பத்துண்டாம்.

இ-ள். சனி நட்பு ஆட்சிஉச்சத்தில் நிற்க அதின்பலன் ஆயு ள்விருத்தியாகும் தனதான்னியம் பூமிலாபமுண்டாம் மித்திர்க ளும் புத்திரர்களுமுண்டாம்தேகத்தில் நீங்கசெய்யும்படியாகவந் தப்பிணியானது தீரும் பகை தொலையும் புவியாளப்பட்ட அரசர்களு டைய நேயங்கூடும் வீடுகிடைக்கும் சம்பத்துண்டாகும் எ-று. 77

சனி பகைநீசத்தில் நின்றபலன்.

உண்டாகுஞ் சனிபகைநீ சத்திற்னிற்க
 உத்தமனே யதின்பலனை யோதக்கேளும்
தெண்டம்வரும் தேசாந்திரம் போகச்செய்யும்
 தேடியபொன் பொருள்மா டாடுஞ்சேதம்
கொண்டிடுமே பெண்ணாலே கலகஞ்சண்டை
 கொடிதான சத்துருவால் கெர்ப்பநஷ்டம்
மிண்டாகு மரசர்பயம் விலங்குபூணும்
 மிடியாகுந் தெண்டனைகள் செய்வர்தானே.

இ-ள். சனி பகைநீசத்தில்நிற்க அதின்பலன் தெண்டம்வரும் தேசாந்திரம்போகச்செய்யும் தேடிய பொன் பொருள் மாடு ஆடு இவைகள்சேதமாகும் கன்னியர்களால் கலகமுஞ் சண்டையும் மூ ளும் சத்துருவினால் துன்பம்நேரும் கெர்ப்பநஷ்டமாகும் அரசர்க ளால் பயம்நேரும் விலங்குபூட்டிவைக்கும் இடத்தில் இடிவிழுகும் தெண்டனைபடச்செய்யும் எ-று. 78

சனி மகாதிசைபலன்

செய்யவே சனிதிசைபத் தொன்பானுண்டும்
 செப்புகிறே னதின்பலனைச் சீராய்க்கேளும்
வெய்யவே பூமியொடு வீடும்பொன்னும்
 விளங்கிடுமே குறைவிலா வாயுளுண்டாம்
பெய்யவே பெரியோர்கள் நேயங்கூடும்
 பொல்லாத சத்துருவை வெல்லலாகும்

ஐயமிலா பண்டுமுன்னாள் தனங்கிடைக்கும்
அடியார்கள் தானுமுண்டா மறிந்துசொல்லே.

இ-ள். சனிமகாதிசையில் சனியின்பலன் பூமி, வீடு, பொன் கிடைக்கும் ஆயுசுவிருத்தியாகும் பெரியோர்களின் நேயங்கூடும். தனக்குவிரோதமாகிய சத்துருக்களை செயம்பண்ணுவன் சந்தேகமில்லாமல் முன்னோர்கள்தேடிய பொருள்கிட்டும் அடியார்களுண்டாம் எ-று. 79

சனிதிசையில்சனியனார்புத்தியின்பலாபலன்.

சொல்லவே சனிதிசையில் சனியின்புத்தி
சூழுகின்ற வருடமூண் நாள்மூன்றிற்கும்
புல்லவே பொருளுடனே பத்திரர்நாசம்
பொல்லாத சத்துருவோடுப் பிணியுமுண்டாம்
அல்லலாம வாணிபமும் கேடதாகும்
அரையுமொழி நிஜமேனும் பொய்யேயென்பர்
தொல்லையாம் முதுகினிலே பிணியுண்டாகும்
தொடுத்ததோர் காரியமும் பலித்திடாதே.

இ-ள் சனிமகாதிசையில் சனிபுத்திவருடம் (3) நாள் (3) ற்கும் அதின்பலன் பொருளும் புத்திரரும்நாசமடைகுவர் சத்துருக்களுண்டாம் பித்தரோகவியாதி உண்டாகும் மனதில் கிலேசமும அதிகமாகும் வாணிபங்கெடும் தான்சொல்லுமவார்த்தை நிஜமாகவிருக்கினும் பொய்யென்றுச் சொல்குவர் முதுகில் பிணியானது பாதிக்கும் எந்தகாரியஞ் செய்தபோதினும பலிதமாகாது நஷ்டம்வரும் எ-று. 80

சனிதிசையில் புதனார்புந்தியின் பலாபலன்.

ஆமெனவே சனிதிசையில் புதனார்புத்தி
ஆண்டுரெண்டு மாதமெட்டு நாளொன்பானில்
போமெனவே பூமியொடு க்ஷேத்திரமுண்டாம்
புகழாகும் குருசேவை தான்னியமுண்டாம்
ஏதனவே தனலாபம வெற்றியுண்டாம்
இபலாகுங் கன்றுடனே காலிசேரும்
ஓதனவே பகைவர்வந்து உறவேயாவார்
உத்தமனே வித்தையுண்டா முகந்துபேசே.

இ-ள். சனிமகாதிசையில் புதனார்புத்திவருடம்(2) மாதம்(8) நாள் (9) ற்கும் அதின்பலன் பூமிகிடைக்கும் க்ஷேத்திர மூண்டாகும் குருசேவைகிடைக்கும் தான்னியம்பெருகும் தனலாபங்கிடைக்கும் வெற்றியுண்டாகும் கன்றுகாலிகள்சேரும்பகைவர்கள்வந்து உறவாடுவார்கள் ஓ! உத்தமபுருஷனே வித்தைபலிதமாகும் எ-று.

சனிதிசையில் கேதுபுத்தியின் பலாபலன்

பேசவே சனிதிசையிற் கேதுபுத்தி
பிடிக்கும் வருடமொன்று திங்களொன்றும்
வீசிய நாளொன்பான் பலனைக்கேளும்
வெகுபாதை யலச்சல்சொற் பனங்கள்ரோகம்
கூசவே மனைவிமைந்தர் வேரதாகும்
குற்றமாம் காரியங்கள் யாவுஞ்சேதம்
வாசமாம் போஜனங்க ளர்ப்பமாகும்
வரும்பீடை நோயுண்டாம் வகுத்துக்கூறே.

இ-ள். சனிமகாதிசையில் கேதுவின்புத்திவருடம் (1) மாதம் (1) நாள் (9) ற்கும் அதின்பலன்பாதைபடுகதும் அலச்சலுண்டாகும் சொற்பனங்காணும் ரோகம்சம்பவிக்கும் மனையாளும்மைந்தர்களும் வேறுகுவர் குற்றப்பட்டு காரியங்கள் யாவுஞ் சேதமாகும் அகாலபோஜனங்கிடைக்கும் பீடையுண்டாம் எ-று. 82

சனிதிசையில் சுக்கிரனார்புத்தியின் பலாபலன்

கூறப்பா சனிதிசையில் சுக்கிரனார்புத்தி
குலவிய வருடமூன்றும் மாதம்ரெண்டும்
சீரப்பா யதின்பலனைச் செப்பக்கேளு
சிந்தையது மகிழ்கல் லியாணங்கூடும்
பேரப்பா புத்திரருஞ் செல்வமுண்டாம்
பெருகிடுங் காலியுடன் வேளான்மைதானும்
தேரப்பா வாய்த்தபிணி துலைந்துபோகும்
தெய்வத்தி னருள்கூடுந் தெரிந்துகொள்ளே.

இ-ள். சனிமகாதிசையில் சுக்கிரனார்புத்திவருடம் (2)மாதம் (2) ற்கும் அதின்பலன்மனமகிழ்ச்சியுண்டாம் மணங்கூடும்புத்திர

ருண்டாம் செல்வம்ஓங்கும் கன்றுகாலி வேளாண்மைப் பலிதமா கும் திரேகத்தில் தங்கிநின்ற பிணியானது விலகிப்போகும் தெய்வ த்தின் அருள்பெருகும் கீர்த்தியுண்டாம் எ-று. 83

சனிதிசையில் சூரியனார்புத்தியின் பலாபலன்.

தெரிந்திடவே சனிதிசையில் சூரியனார்புத்தி
 திங்கள்பதி னொன்றோடு நாளீராரக்கும்
அறிந்திடவே யதின்பலனை யறையக்கேளு
 அரசர்பகை மனஸ்தாபம் தேகபீடை
பிரிந்திடவே யுற்றாரும் பகையுமாவர்
 பீடிக்குங் கலகமில்லாள் வேறதாவள்
திரிந்திடவே பரதேச வாசமுண்டாம்
 தீங்காகுஞ் சோரர்பயந் திகிலுண்டாமே.

இ-ள். சனிமகாதிசையில் சூரியனார் புக்திமாதம் (11) நாள் (12) ற்கும் அதின்பலன் அரசர்களால்பகைவரும்சிநேகிதர்களால் மனஸ்தாபம்உண்டாகும் திரேகததில்பீடையுண்டாகும் உறவின் முறையார்யாவரும்பகையாகுவர் கலகத்தினால்மனையாளும் வேறா குவள் ப்ரதேசம்போகச்செய்யும் சோரர்களால்பயம்நேரும்எ-று.

சனிதிசையில் சந்திரனார்புத்தியின் பலாபலன்.

உண்டாகுஞ் சனிதிசையில் சந்திரனார்புத்தி
 உத்தமனே யோராண்டுந் திங்களேழும்
பண்டாகு மதின்பலனைப் பகரக்கேளும்
 பாக்கியங்கள் மிகப்பெருகுஞ் சம்பத்துண்டாம்
கொண்டாடுங் குருபக்தி தெய்வபக்தி
 குலவியிடும் மனையாட்கு மகிழ்ச்சியுண்டாம்
விண்டிடுஞ் சத்துருக்கள் வணங்குவார்கள்
 விளங்கிடும் பந்துக்கள் மிகவுண்டாமே.

இ-ள். சனிமகாதிசையில் சந்திரனார்புத்திவருடம் (1) மாதம் (7) ற்கும் அதின்பலன் சகலசெல்வமும் பெருகும் சம்பத்துண்டு குருபக்தி தெய்வபக்தியுண்டு மனையாளுக்கும் மகிழ்ச்சியுண்டா கும் சத்துருக்கள்வந்து வணங்குவார்கள் பந்துஜனங்கள் மிகவும் பெருகவுண்டாகும் எ-று. 85

சனி திசையில் செவ்வாய்புத்தியின்பலாபலன்.

ஆமப்பா சனிதிசையில் செவ்வாய்புத்தி
  ஆண்டொன்று திங்களொன்று நாளொன்பானில்
தாமப்பா யதின்பலனைச் சாற்றக்கேளு
  தரிக்குமந் தணர்பகையும் நேத்திரரோகம்
வேமப்பா தியாலுங் கல்வினாலும்
  விரணம்வரும் கால்கரங்கள் தன்னில்நோயாம்
போமப்பா பயிற்சேதம் நடுக்கமுண்டாம்
  பொல்லாத கள்ளறினால் பொருளும்போமே.

இ-ள் சனிதிசையில் செவ்வாயின்புத்தி வருடம்(1; மாதம் (9) நாள் (9) ற்கும் அதின்பலன் சம்பத்திலிருக்கிற பிராமணர்களால்பகைநேரும் நேத்திரத்தில்ரோகங்காணும் தீயினாலும்கல்லெறிதலினாலும் விரணமுண்டாகும் கால்கரங்களில்நோயணுகும்பயிர் தொழிலில்பலன்குறையும் நடுக்கமுண்டாகும் கள்ளர்களால் பொருள்போகும் எ-று. 86

சனிதிசையில் இராகுபுத்தியின் பலாபலன்

பொரிந்திடவே சனிதிசையில் ராகுபுத்தி
  புகன்றிட்ட வருடம்ரெண்டு மாதமாறும்
திரந்திடவே யதினோடு நாளாறிர்க்கும்
  தீண்டுமோர் பலன்யாவுஞ் செப்பக்கேளு
குறைந்திடுங் குட்டமுடன் நேத்திரரோகம்
  கூடிய பொருள்போகுஞ் சோம்பல்காணும்
பிரிந்திட பிராணசங் கடங்கள்நேரும்
  பீடிக்கும் விஷபயமு மிடிவிலங்கே.

இ-ள். சனிதிசையில் இராகுவின்புத்திவருடம் (2) மாதம்(6) நாள் (7) ற்கும் அதின்பலன் குட்டரோகமணுகும் நேத்திரநோயாகும் பொருள்சேதமாகும் சோம்பல்காணும் பிராணசங்கடம் நேரும் விஷபயமும் மிடியும்விலங்கும்வரும் எ-று. 87

சனிமகாதிசையில் குருபுத்தியின்பலாபலன்,

விலகவே சனிதிசையில் குருவின்புத்தி
  விண்டிடும் வருடம்ரெண்டு மாதமாறும்

இலகவே நாளதுவும் பனிரெண்டிற்கும்
  இட்டமா மதின்பலனை யியம்பக்கேளு
பிலகவே மனைவியொடு புத்திரருண்டாம்
  பெருகிடும் மாடையா பரணம்பொன்னும்
திலகவே வாகனமுஞ் சீருமோங்கும்
  திடமாகுமரசருட னேயமாமே.

இ-ள். சனிமகாதிசையில் குருவின்புக்தி வருடம் (2) மாதம் (6) நாள் (12) ற்கும் அதின்பலன் மனைவிபுக்திரருண்டாம ஆடையாபரணம் பொன்னுண்டாம் வாகநாதிகள்கிடைக்கும் சீர்வோங்கும் அரசர்களுடைய சிநேகங்கூடும் எ-று. 88

சனிமகாதிசையில் கிரகபலன்

முற்றிற்று.

புதன் நிலையின் பலன்.

கணக்கனுமே யொன்றுரெண்டு ஆறோடொன்பான்
  கருதிய பத்துபதி னொன்றில்நின்றால்
இணக்கமா யதின்பலனை யியம்பக்கேளு
  இஷ்டசித்தி யாகும்வித்தை மந்திரங்கள்
வணக்கமாம் சுகம்சுத்தம புத்திரர் சினேகர்
  வளம்பெருகும் பசுபாலும் விருத்தியாகும்
துணக்கமாந் தருமதா னங்கள்செய்வன்
  துலங்கிடும்வர்த் தகமணிய முண்டாஞ்சொல்லே.

இ-ள். புதன் (1) (2) (6) (9) (10) (11) இந்தஸ்தானங்களில் நிற்க அதின்பலன் இஷ்டசித்தியாகும் வித்தைபலிக்கும் மந்திரவாதியாவான் சுகமுண்டு சுத்தமும்புக்திரரும் சிநேகிதரும் பெருகும் பசுபால்விருத்தியாகும் தானதருமம்பண்ணுவன் வர்த்தகவிருத்தியாகும் மணியஞ்செய்குவன் எ-று. 89

உண்டாகும் புதன்மூன்று நாலைந்தேழும்
  உற்றதோ ரெண்பதுடன் பீரறில்நிற்க

மீண்டாகு மதின்பலனை மொழியக்கேளு
 மிகுந்தபயம் பொருள்சேத முயிருஞ்சேதம்
கொண்டதோர் மனைவியாற் துன்பமநேரும்
 கூறுமொழி யீனமுடனே உற்றார்சேதம்
பண்டாகும் பயிர்சேதங் கீர்த்திபோகும்
 பலவிதத்துங் கெடுதிவரும் பழியாமபாரே.

இ-ள். புதன் (3) (4) (5) (7) (9) (12) இந்தஸ்தானங்களில் நிற்க அதின்பலன் பயமவிளைவிக்கும் பொருள்சேதம் உயிர்சேதம் நேரும் மனைவியரால் துன்பம்நேரும் மொழியீனமாகும் உற்றார் சேதமாகுவர் பயிர்சேதமாகும் கீர்த்தியழியும் பலவிதமான கெடுதிசம்பவிக்கும் எ-று. 90

புதன்நட்பாட்சியுச்சத்தில் நின்றபலன்.

பாரப்பா புதனுநட் பாட்சியுச்சம்
 பண்பாக நின்றிடிலோ பலனைக்கேளு
கூறப்பா வையகந் தன்னையாள்வர்
 குறைவில்லா பூமியோடுச் சிவிகையுண்டாம்
சீரப்பா வீடுடனே காலிசேரும்
 சிரப்பாக மணம்புரிவன் புத்திருண்டாம்
பேரப்பா மாதுலர்க்கும் நன்மையாகும்
 பெருங்கீர்த்தி ஒங்கியதோர் புலவராவர்.

இ-ள். புதன்நட்பாட்சி யுச்சத்தில்நிற்க அதின்பலன் புவியாளவைக்கும் அளவற்ற பூமிகிடைக்கும் சிவிகையுண்டாகும் வீடுகிடைக்கும காலிகன்றுகள்விருத்தியாகும் மணங்கூடும் புத்திரரைப் பெருகுவன் மாமன்வர்த்தகத்துக்கு நன்மையுண்டாகும் புவியின்கண் யாவரும் புகழும்படியானப் புலவனாகுவன் எ-று. 91

புதன்பகைநீசத்தில் நின்றபலன்,

நாமெனவே புத்திபகை நீசந்தன்னில்
 நாடியே நின்றிடிலோ பலனைக்கேளு
போமெனவே புத்திரர்க்கு மீனமுண்டாம்
 பொல்லாதக் கலகம்வருந் தொழிலும்போகும்
தாமெனவே பொன்பொருளு மாடாடும்போம்
 தாங்கியே மாதுலர்க்கு கெண்டம்சேரும்

ஆமெனவே சத்துருபகை யடுத்துவாட்டும்
அவகேடாம் புலவர்பகை யனத்துஞ்சொல்லே

இ-ள். புதன்பகைநீசத்தில் நிற்க அதின்பலன் புத்திராயீனமு ண்டு பொல்லாங்கானக் கலகத்தினால் தொழில்கெடும் பொன்பொ ருள் மாடுஆடு இவைகள்சேதமாகும் தாயுடன்பிறந்த மாமன்மார் களுக்கு கெண்டம்சம்பவிக்கும் சத்துருக்களால் பகையுண்டாகும் அர்ப்பர்களாலும் விரோதம்நேரும் எ-று. 92

புதன் மகாதிசையின் பலன்.

சொல்லவே புதன்திசையில் பலனைக்கேளு
சுகமாகு மாண்டுபதி னேழினிற்கும்
வெல்லவே வர்த்தகம்பொன் பூமிசேரும்
வேந்தருட நேயமுண்டாம் வதுவைகூடும்
புல்லவே வீணைபிர சங்கஞ்செய்வன்
போகவான் சுத்தவான் புத்திருள்ளான்
அல்லவே பகைநீசக் கோள்நோக்கத்தை
ஆராய்ந்து இப்பலனை யரைகுவாயே.

இ-ள். புதன்மகாதிசை வருஷம் (17) ற்கும் அதின்பலன்வர் த்தகவிருத்தியாகும் பொன் பூமிசேரும் அரசர்கள் உதவியுண்டா கும் கல்லியாணங்கூடும் வீணைபிரசங்கஞ் செய்குவன் போகவானு கவும், சுத்தவானுகவும் புத்திரவிருத்தி யடைகுவன் இவைகளெல் லாம் பகைநீசக்கோள்களின் நோக்கமறிந்து பலனைச்சொல்ல வே ண்டும் எ-று. 93

புதன்திசையில் புதனுர்புத்தியின் பலாபலன்

அரையவே புதன்திசையிற் புதனுர்புத்தி
ஆண்டுரெண்டு மாதம்நால் நாளிருயத்தேழு
நிரையவே யதின்பலனை நிகழ்த்தக்கேளு
நீடிய பழையதனம் நிலையாய்கிட்டும்
பிரியமுடன் பாவையரும் வந்துசேர்வள்
பிரபலமுடன் சோபனங்கள் மனையிலாகும்
தெரியவே குலதெய்வந் திடமாய்காற்குந்
திகழாகும் புத்திரரும் உண்டாங்காணே.

இ-ள். புதன்மகாதிசையில் புதனார்புத்தி வருடம் (2) மாதம் (4) நாள் (27) ற்கும் அதின்பலன் பழையதனங்கிடைக்கும் ஸ்திரீ சேர்க்கையுண்டு மனையில் சுபசோபனங்கள்நடக்கும் தன்னுடைய வீட்டுக் குலதெய்வம்காற்றுவரும் புத்திரர்கள் புகழாக விருத்தியடைகுவர் எ-று. 94

புதன்திசையில் கேதுபுத்தியின் பலாபலன்

காணவே புதன்திசையில் கேதுபுத்தி
கருதிய மாதம்பதி னொன்றிநேடு
தோணும்நாள் மூவொன்பதிற்கும பலனைக்கேளு
தொந்திரவாம் பகையோடு வுத்தார்நாசம்
நாணவே வியாதியது நாடிக்கொல்லும்
நஷ்டமுடன் திரவியங்கள் சேதமாகும்
பூணுவே தினந்தோறுஞ் சத்ருவாதை
பொல்லாங்கெல்லாம் பெருகும் புகலுவாயே.

இ-ள். பகைநேரும் உத்தார்நாசமாகுவர் வியாதியானதுசம்பவித்துக்கொல்லும் நஷ்டம்வரும் திரவியசேதமாகும் நாள்தோறும் சத்துருவால் வாதைநேரும் பொல்லாங்குயாவும் பெருகிநாசப்படுத்தும் எ-று. 95

புதன்திசையில் சுக்கிரனார்புத்தியின் பலாபலன்

புகலுவாய் புதந்திசையில் சுக்கிரனார்புத்தி
பொருந்திய வருடம்ரெண்டும் மாதம்பத்து
தகலவே யதின்பலனைச் சாற்றக்கேளும்
தழைத்திடுஞ் செல்வமா பரணமாடை
இகலவே புத்திரருங் கீர்த்தியுண்டாம்
எத்தொழிலும் லாபமுண்டாங் கடனுந்தீரும்
பகலவே கல்வியுடன் பெண்டீர்தீர்க்கம்
பகைவர்களு முறவாவார் பண்பாய்தானே.

இ-ள். புதன்மகாதிசையில சுக்கிரனார்புத்திவருடம் (2) மாதம் (10) ற்கும் அதின்பலன் செல்வமோங்கும் ஆடையாபரணங்கிடைக்கும் புத்திரருண்டாகும் கீர்த்தியோங்கும் எந்ததொழில்செய்பினும லாபங்கிடைக்கும் கடன்தீரும் கல்வியதிகரிக்கும் பெண்டீர்க்குச் சுகமுந் தீர்க்கமுமுண்டாகும் பகைவர்கள் உறவாகுவர் எ-று. 96

புதன்திசையில் சூரியனார்புத்தியின் பலாபலன்

தானெனவே புதன்திசையில் சூரியனார்புத்தி
தங்கியமா தம்பத்து நாளாறிற்கும்
ஊனெனவே யதின்பலனை யுரைக்கக்கேளு
உத்திடும் பித்தமொடு சன்னிரோகம்
கானெனவே கன்றுகாலி போங்கண்ணோயாம்
கனத்தபகை யோடுதெய்வ குற்றங்காட்டுங்
தேனெனவே சொர்ப்பனங்கள் தீங்காய்காணுந்
தேடிய பூமிபோம் தெரிந்துகொள்ளே

இ-ள். புதன்மகாதிசையில் சூரியனார்புத்தி மாதம் (10)நாள் (6)ற்கும் அதின்பலன் பித்தமதிகரிக்கும் சன்னி ரோகங்காணும் கன்றுகாலிசேதமாகும் கண்ணோயணுகும் பகைநேரும் தெய்வகுற்றமுண்டாகும் சொர்ப்பனங்காணும் பூமிபோகும் எ-று. 97

புதன்திசையில் சந்திரனார்புத்தியின் பலாபலன்

கொள்ளெனவே புதனார்திசையில் சந்திரபுத்தி
கூறியதோர் ரோண்டுந் திங்களைந்தும்
விள்ளெனவே யதின்பலனை விளம்பக்கேளு
விளங்கிடுஞ் செல்வமொடு தேவபூஜை
தள்ளெனவே யெதிரிகளை தானேவெல்லும்
தக்கமனை பூமியொடு யாவுஞ்சித்தி
மெள்ளெனவெ யெதிரிகளு முறவேயாவார்
மேலாகுங் கீர்த்தியென மகிழ்ந்துபேசே

இ-ள். புதன்மகாதிசையில் சந்திரனார் புத்திவருடம் (1) மாதம் (5)ற்கும அதின்பலன் செல்வம் அதிகரிக்கும் தேவபூஜையுண்டு சதுருக்களைஜெயம்பண்ணுவன் வீடுபூமியுங்கிடைக்கும் யாவுஞ் சித்தியாகும எதிரிகள்உறவாவார்கள் மேலாகக் கீர்த்தியோங்கும் எ-று. 98

புதன்திசையில் செவ்வாய்புத்தியின் பலாபலன்

பாசவே புதன்திசையில் செவ்வாய்புத்தி
பதினொரு மாதம்நா ளிருபத்தேழும்

கூசவே யதின்பலனைக் கூறக்கேளும்
குற்றமாந் தனநாசஞ் சத்துருபீடை
ஏசவே தீபாதை சுரத்தால்கண்டம்
இடுக்கமுடன் சிரரோகம் விரணமுண்டாம்
வாசமாம் வாகனமபொன் பூமியோடு
வாணிபமும் மனைவியரும் வாடுமாதே.

இ-ள். புதன்மகாதிசையில்செவ்வாயின்புத்திமாதம்(11)நாள் (27) ற்கும் அதின்பலன் தனநாசமாகும் சத்துருக்களால் பீடையணுகும் தீயினல்பாதைவிளையும் சுரத்தினல்கண்டம்நேரும் இடுக்கமுண்டாகும் சிரரோகமும் விரணமும்நேரும் சுபக்கிரகம் பார்வையுண்டாகில் வாகனம் பொன் பூமி வாணிபம் மனையாள் வாய்க்கும் எ-று. 99

புதன் திசையில் இராகுபுத்தியின் பலாபலன்

பாரப்பா புதனர்திசையில் ராகுபுத்தி
பரவிய வருடம்ரெண்டு மாதமாறும்
நேரப்பா நாளுபதி னெட்டுக்குந்தான்
நிகழ்த்தியதோர் வதின்பலனை நேருய்கேளு
கூரப்பா வாணிபம்போம் விஷத்தாலபீடை
குற்றமாங் கள்ளர்பயம் களத்திரதோஷம்
சீரப்பா சம்பத்துந் தொழிலும்போகும்
ஜெகத்தரசர் தன்னுலே யணுகுந்துன்பம்

இ-ள். புதன்மகாதிசையில் இராகு புத்தி வருடம் (2) மாதம் (6) நாள் (18) ற்கும் அதின்பலன் வாணிபம்போகும் விஷத்தினல் பீடையணுகும் கள்ளர்களால்பயம்நேரும் தன்னுடையமனையாளுக்கு தோஷங்காட்டும் சம்பத்துஅழிந்துபோகும் தொழிலும் நாசமாகும் அரசர்கோபமுண்டாம் 100

புதன் திசையில் குருபுத்தியின் பலாபலன்

அணுகவே புதன்திசையில் குருவின்புத்தி
ஆண்டுரெண்டு மாதம்மூன் நாளாறிற்கும்
இணங்கவே வேளாண்மை செல்வமோங்கும்
இஷ்டபோ சனஞ்சித்தி புகழுமுண்டாம்
வணங்கவே யெதிரிகளை செயிப்பதோடு
வாணிபமும் தான்பலிக்கும் பொருள்கைகூடும்

நணுகவே மனைவிபுத்திரர் நன்மையோங்கும்
நானில மெலாம்புகழுங் கீர்த்திதானே

இ-ள். புதன்மகாதிசையில் குருபுத்திவருடம் (2) மாதம் (3) நாள் (6) ற்கும் அதின்பலன் வேளாண்மைப் பலிதமாகும் இஷ்டபோஜனமும், சித்தியும்உண்டாகும். எதிரிகளைஜெயம்பண்ணுவன் வாணிபமபலிதமாகும் பொருள்கைகூடும் மனையாளுக்கு புத்திரர் களுக்கும் நன்மையுண்டாகும் இந்தபூமியின்கண் எங்குமகீர்த்தியானதுப்பெருகும எ-று. 101

புதன்திசையில் சனிபுத்தியின் பலாபலன்.

ஓங்கிய புதனார்திசையில் சனியின்புத்தி
ஓதியதோர் நாலெட்டுத் திங்களோடுந்
தீங்காகும் நாளொன்பான் பலனைக்கேளு
தேடியதோர் பொன்பொருளும் பூமிபோகும்
வாங்கியே இருப்பிடம்விட் டேகச்செய்யும்
வரும்பிணியும் மெய்தனிலே வந்துவாட்டும்
பாங்காகும் பந்துகளும் பகையையாகும்
பாரமாம் வீக்கமுடன் குடச்சல்காணும்

இ-ள். புதன்மகாதிசையில் சனிபுத்திவருடம் (2) மாதம் (3) நாள் (9) ற்கும் அதின்பலன் தேடியப்பொன் பொருள் பூமி போகும் தேசாந்திரம் போகச்செய்யும் திரேகத்தில் வியாதிதோன்றி பாதைப்படுத்தும் இஷ்டமான பந்துக்களைப் பகைபடுத்தி வைக்கும் காலுங்கையும் வீக்கமுண்டாகிக் குடச்சல்காணும் எ-று. 102

புதன்மகாதிசையின் கிரகபலன்

மூற்றிற்று.

கேதுவின் நிலை.

பார்க்கவே கேதுவுமே மூன்றாறோடு
    டதினொன்று மீராறு தன்னில்நின்றால்
தீர்க்கமாம வாழுண்டு விளவுமுண்டு
    தீங்குசெய்யுஞ் சத்துருவும நாசமாவர்
பூர்க்கவே லட்சுமியு னருளுமுண்டாம்
    புகழாகுந் தீர்த்தமொடு மெஞ்ஞானங்கிட்டும்
ஏர்க்கவே யெத்திசையுங் கீர்த்திபோங்கும்
    இயலாகு மருந்தவமு மோட்சமுண்டே.

இ-ள். கேது (3) (6) (11) (12) இந்தஸ்தானங்களில் நிற்க மிகுத்தாகிய வாழுண்டாம் விளைவுண்டாம் சத்துருக்கள் நாசமாகுவர் லட்சுமிகடாட்சமுண்டு தீர்த்தயாத்திரைசெய்குவன் மெஞ்ஞானங்கிட்டும கீர்த்தியானது எத்திசையுமோங்கும் அருந்தவங்கிட்டும் மோட்சமுண்டாகும் எ-று. 103

உண்டாகுங் கேதுவொன்று ரெண்டுநாலில்
    உற்றவைந் தேழெட்டு வொன்பான்பத்தில்
திண்டாக நின்றிடிலோப் பலனைக்கேளு
    தேடிவரும் ஊர்வழக்கும் புத்திரநஷ்டம்
மிண்டாகும் விஷத்தினால் பயங்கள்தோணு
    மீரிவரு மெதிரியால் பீடைதானுந்
தெண்டமாம் பிதுர்த்கலம் வீடும்போகுந்
    தீங்காகும் பாதையெல்லாம் விளையும்பாரே.

இ-ள். கேது (1) (2) (4) (5) (7) (8) (9) (10) இந்தஸ்தானங்களில்நிற்க அதின்பலன் ஊர்வழக்குநேரும புத்திரநஷ்டமடையும் விஷபயம்நேரும் எதிரிகளால் பீடைசம்பவிக்குமதகப்பன்தேடிய வீடுமுதலானதும்போகும் பாதைவிளைவிக்கும் எ-று. 104

கேது னட்பாட்சி யுச்சத்தில் நின்றபலன்.

விளையவே கேதுநட் பாட்சியுச்சம்
    வீற்றிடிலோ யதின்பலனை விளம்பக்கேளு
களையவே கல்வியொடு ஞானமுண்டாம்
    காலியொடு தனதான்யம் வீடுங்கிட்டும்

வளையவே சுகங்களொடு வதுவைசேரும்
வர்த்தகங்கள் பலிதமுடன் வருகுஞ்செல்வம்
தளையவே தீர்த்தயாத் திரைகள்செய்வன்
தனையெதிர்த்த சத்துருவை செயிப்பானென்னே.

இ-ள். கேதுநட்புஆட்சி உச்சத்தில்நிற்க அதின்பலன் கலவி ஞானமுண்டாம் கன்றுகாலி தனதான்யம் வீடுஇவைகள் கிடைக்கும் சுகமுண்டாகும் கல்யாணங்கூடும் வர்த்தகம்பலிதமாகும்செல்வம்பெருகும் தீர்த்தயாத்திரைகள்செய்குவன் தன்னையெதிர்த்தசத்துருக்களை செயம்பண்ணுவன் எ-று. 105

கேது பகைநீசத்தில் நின்றபலன்.

என்னவே கேதுபகை நீசந்தன்னில்
இருந்திடிலோ யதின்பலனை யியம்பக்கேளு
வின்னமாந் தலபேதம் நலியால்கெண்டம்
விஷபயமுங் கோளுடன் மனையாள்தீங்கு
பின்னமாம் குறித்தபெண் கிடைப்பதில்லை
பேசிய பந்துகளில் வருகுஞ்சேதம்
மன்னிய வுறவில்லூ தகம்வழக்கும்
மடுத்திடும் பகையுமென வரிகுவாயே.

இ-ள். கேது பகைநீசத்தில் நிற்க அதின்பலன் தேசாந்திரம் போகச்செய்யும் நலியினால்கெண்டம்நேரும் விஷபயம்பூணும்கோளினால் மனையாளுக்குத் தீங்குசம்பவிக்கும் குறித்தபெண் கிடைக்கமாட்டாது பந்துக்களில்சேதம்வரும் உறவில்கருமம்நடக்கும் வழக்குத்தொடரும் பகைநேரும் எ-று. 106

கேது மகாதிசைபலன்.

அரியவே கேதுதிசை யேழாண்டிற்கும்
ஆகாதத் துன்பமெல்லா மணுகச்செய்யும்
பிரியவே விடமுண்டல் பிருத்திசோரம்
பீடையுடன் அரசரால் யாத்திரைநேரும்
தெரிகுவாய் தாய்கெண்டம் பூமிபோகும்
தேடியப் பொருளோடுக் காலிசேதம்
நெரியாக நெல்லோர்கள் பார்வைகாணில்
நீடியப் பலன்யாவும் நன்மையாமே.

இ-ள், கேது மகாதிசைவருடம் (7) ற்கும் அதின்பலன் விஷ பானம் பண்ணல் அடிக்கடிவியாதியும் திருடர்பயமு முண்டாகும் பீடைசம்பவிக்கும் அரசர்களால் யாத்திரைநேரும் தாயாருக்கு கெண்டமும் பூமியும்போகும் பொருளோடுக் காலி சேதமாகும் இவைநீங்க சுபக்கிரகம் பார்வையுண்டாகில் நன்மையானப் பலன் தருகுமென்பதாம எ-று. 107

கேது திசையில்கேதுபுத்தியின் பலாபலன்

ஆமெனவே கேதுதிசை கேதுபுத்தி
அரைகின்ற மாதம்நால் நாள்மூவொன்பான்
நாமெனவே யதின்பலனை சாற்றக்கேளு
நஞ்சாலுந் தீயாலும் பயங்கள்நேரும்
தாமெனவே வைசூரி யாலுங்கெண்டம்
தான்படுமே கால்கரங்கள் தன்னில்காயம்
போமெனவே வாணிபமும் பூமிபோகும்
பெரியோர்கள் பகையதுவு மாகும்பாரே.

இ-ள். கேதுமகாதிசையில் கேதுபுத்திமாதம் (4) நாள் (27) ற்கும் அதின்பலன் நஞ்சினாலும்தீயினாலும் பயங்கள்நேரும் அம்மைபூட்டி அதனாலகண்டம்நேரும் கால்கரங்களில் காயப்படும் வாணிபமும் பூமியும்போகும் பெரியோர்கள் பகையாவர் எ-று. 108

கேதுதிசையில் சுக்கிரனார்புத்தியின்பலாபலன்.

பாரப்பா கேதுதிசை சுக்கிரனார்புத்தி
கெணிதமுடன் வருடமொன்று திங்கள்ரெண்டும்
நேரப்பா யதின்பலனை நிகழ்த்தக்கேளு
நீடிடும் பொன்பொருளுங் கன்றுகாலி
சீரப்பா தாரமொடு புத்திரர்சேமம்
ஜெனவசியம் மிகவுண்டாம் பூமிகிட்டும்
பேரப்பா தொடுத்தகா ரியங்கள்சித்தி
பெரிகிடுங் கோள்வலி யறிந்துகூறே.

இ-ள். கேதுமகாதிசையில் சுக்கிரனார்புத்தி வருடம் (1) மாதம் (2) ற்கும் அதின்பலன் பொன்பொருள் கன்றுகாலி வர்த்திக்கும் தாரபுத்திரருக்குக்ஷேமமுண்டாகும் ஜனங்கள் வசியமாவார்

கள் பூமிகிடைக்கும் தொகுக்குங்காரியங்கள் யாவுஞ்சித்தியாகும், இவையாவும் கிரகவலியறிந்துச் சொல்லவேண்டும் எ-று. 109

கேதுதிசையில் சூரியனார்புத்தியின் பலாபலன்.

கூறப்பா கேதுதிசை சூரியன்புத்தி
  குறித்திட்ட மாதம்நால் நாளாறிற்கும்
சீறப்பா யதின்பலனைச் செப்பக்கேளு
  சிறையோடு விலங்குவரும் பகையும்நேரும்
பாரப்பா பந்துவொடு மனைவிமைந்தர்
  படுஞ்சுரத்தால் மிகுபயமும் படுகுவார்கள்
நேரப்பா பிதாவினிற்கு மரிட்டம்நேரும்
  நிந்தையாஞ் சாதகற்கு நிகழ்த்துவாயே.

இ-ள். கேதுமகாதிசையில் சூரியனார் புத்தி மாதம் (4) நாள் ஆறிற்கும் அதின்பலன் சிறையுண்டு விலங்குவரும் பகைநேரும். பந்துக்களுக்கும் மனைவிமக்களுக்கும் சுரபயமாகும் தகப்பனுக்கு மரிட்டம்நேரும் ஜாதகனுக்கு நிந்தையான கெடுதிகள் சம்பவிக்கும் எ-று. 110

கேதுதிசையில் சந்திரனார்புத்தியின் பலாபலன்.

நிகழ்த்திய கேதுதிசை சந்திரனார்புத்தி
  நேராகு மாதமது யேழுனிற்கும்
வழுத்திய யதின்பலனை வகையாய்க்கேளு
  வாய்த்தபிணி தான்தொலையும் போர்செயிக்கும்
திகைத்திடவே பொருளதுவுங் கைவிட்டேகும்
  தீண்டியதோர் பெண்களினால் வழக்குநேரும்
பகைத்திடவே வாணிபமும் பாழதாகும்
  பகைநீசக் கோளறிந்துப் பகருவாயே.

இ-ள். கேதுமகாதிசையில் சந்திரனார் புத்திமாதம் (7) ற்கும் அதின்பலன் தேகத்தினிடமாகத் தோன்றியிருந்தப் பிணியானது தீரும் போர்செயிப்பன் பொருள் கைவிட்டுப்போகும் ஸ்திரீகளினால் வழக்குநேரும் வாணிபங்கெடும் இவைகளைப் பகைநீசத்திலிருந்தால் மேல்சொல்லியபலன் நடக்காவாம் எ-று. 111

கேதுதிசையில் செவ்வாய்புத்தியின்பலாபலன்.

பகரக்கேள் கேதுதிசை செவ்வாய்புத்தி
  பண்பாகும் மாதம்நால் நாள்மூவொன்பான்

பகாக்கேள் யதின்பலனைப் பந்துநாசம்
பொல்லாங்கு தான்வளையுஞ் சத்துருவாலே
தகரக்கேள் பரதாரந் தன்னால்பொன்போம்
தான்கெடுமே வாணிபமும் துக்கமுண்டாம்
இயமங்கேள் மனைவிமைந்தர் காலிவேறும்
எவ்விடத்துங் கலகமது நேருந்தானே

இ-ள். கேதுமகாதிசையில் செவ்வாய்புத்திமாதம் (4) நாள் (27) ற்கும் அதின்பலன் பந்துக்கள் நாசமடைகுவர்பொல்லாங்கு விளையும் சத்துருவுநேரும் பர்தாரத்தினால் பொருள் சேதம்வரும் வாணிபங்கெடும் துக்கமுண்டாகும் மனைவிமைந்தர் கன்றுகாலி இவைகள்வேறாகும் எவ்விடத்திலும் பகையானதுநேரும் எ-று. 112

கேதுதிசையில் இராகுபுத்தியின் பலாபலன்

நேர்ந்திடவே கேதுதிசை யிராகுபுத்தி
நேராகும் வருடமொன்று நாளீரொன்பான்
ஓர்ந்திடவே யதின்பலனை யோதக்கேளு
உள்ளபொருள் சேதமொடு மனையாள்நாசம்
பேர்ந்திடவே வேந்தர்சத் துருவால்பீடை
பெருப்பகையாம் சிறையோடு விலங்குபூணும்
தேர்ந்திடவே வாதபித்த சூலைரோகம்
தீங்காக நேருமென வுரைத்திட்டோமே.

இ-ள். கேதுமகாதிசையில் இராகுவின்புத்திவருடம்(1) நாள் (18) ற்கும் அதின்பலன் பொருள்சேதமாகும் மனையாளுக்கு கெண்டம் சம்பவிக்கும் வேந்தர்களாலும் சத்துருக்களாலும, பீடையணுகும் பகைநேரும் சிறைபடவிக்கும் விலங்குபூணும் வாதபித்த சூலைரோகங்கள் அணுகும அதினால்கெடுதியுண்டாம எ-று. 113

கேதுதிசையில் குருபுத்தியின் பலாபலன்,

உரையவே கேதுதிசை குருவின்புத்தி
உற்றதிங்கள் பதினொன்று நாளாறிற்கும்
அரையவே யதின்பலனை யன்பாய்கேளு
அடுத்திடும் பூமியொடு கல்லியாணமாகும்
நிரையவே சம்பத்துங் கீர்த்தியோங்கும்
நேராகுஞ் சத்துருக்கள் நாசமாவர்

பவே சென்னலும் பலிதமாகும்
தேவயர்ச் சனைகளது மிகவாம்பாரே.

இ-ள். கேதுமகாதிசையில் குருவின்புத்தி மாதம் (11) நாள் ஆறிற்கும் அதின்பலன் பூமிகிடைக்கும் கலியாணங்கூடும் சம்பத்துண்டாகும் கீர்த்தியோங்கும் சத்துருக்கள் நாசமாகுவர் சிவந்த தான்யம் விருத்தியாகவிளையும் தேவபூஜைநடக்கும் எ-று. 114

கேதுதிசையில்சனிபுத்தியின்பலாபலன்.

பாரப்பா கேதுதிசை சனியின்புத்தி
பகருகின்ற வருடமொன்று நாளொன்பானும்
வேரப்பா யதின்பலனை விளம்பக்கேளு
வெகுநஷ்டம் சஞ்சாரம் மனையாள்வேறும்
சிரப்பா மருந்தாலுங் கருவியாலும்
ஜெகத்தரச ராலும்வெகு பீடையுண்டாம்
கூரப்பா வீடுடனே காலிசெட்டும்
குற்றமாஞ் சேதமென குறித்துசொல்லே.

இ-ள். கேதுமகாதிசையில் சனியனார்புத்திவருடம் (1) நாள் (9) ற்கும் அதின்பலன் நஷ்டப்படுத்தும் சஞ்சாரம் பண்ணிவைக்கும் மனையாளைபகையாக்கிவேறுபடுத்தும் மருந்தினாலும் ஆயுதங்களினாலும் அரசர்களினாலும் பீடையுண்டாம் வீடுகன்றுகாலி செட்டு கெடுதியுண்டாகி அழியும் எ-று. 115

கேதுதிசையில் புதனார்புத்தியின் பலாபலன்.

சொல்லவே கேதுதிசை புதனார்புத்தி
சுகமாகுந் திங்கள்பதி னொன்றினோடு
நல்லதோர் நாளாகு மிருபத்தேழ்க்கும்
நவிலுகின்ற யதின்பலனை நன்றாய்கேளு
வெல்லவே பகைவர்களு முறவேயாவசர்
விளங்கிடுமே சம்பத்துங் காலிபூமி
புல்லலே வித்தையதுப் பெருக்குமுண்டாம்
புகழாகுங் குருவருளுங் கிடைக்குமின்னே.

இ-ள். கேதுமகாதிசையில் புதனார்புத்திமாதம்(11)நாள்(27) ற்கும் அதின்பலன் பகைவர்கள்யாவரும் உரவாகுவார்கள் சம்பத்

துண்டாகும் காலிபூமிகிடைக்கும் வித்தைபெருகும் குரு... அரு ளானது மிகவும் பெருகவுண்டாகும் எ-று. 116

கேதுமகாதிசைப்பலன்

முற்றிற்று.

சுக்கிரன் நிலை.

சுக்கிரனும் நாலைந்து யேழொன்பானும்
சுகமாகும் பத்துபதி னொன்றில்நல்லாய்
சிருக்கவே யதின்பலனைச் செப்பக்கேளும்
சின்மையுள்ள மாதர்களு மோகியார்கள்
மிக்கவே வாகனம்பொன் பூமிசேரும்
மேலாகு மாடையா பரணமுண்டாம்
புக்கவே வீணைவாத்தி யங்களுண்டாம்
பொருந்திடுந் தனலாபங் கிடைக்கும்பாரே.

இ-ள். சுக்கிரன் (4)(5)(7)(9) (1o) (11) இந்தஸ்தானங்களில் நிற்க, பகைநீசமற்றுயிருந்தால் மாதர்மோக முண்டாம் வாகனம் பொன் பூமிசேரும் ஆடையாபரணாதிகள் கிடைக்கும் வீணைவாத் தியம்பெருகும் தனலாபங்கிடைக்கும் எ-று. 117

பாரப்பா புதனுமொன்று ரெண்டுமூன்றூர்
பண்பில்லா யெட்டீரார் தன்னில்நின்றால்
வீரப்பா யதின்பலனை விளம்பக்கேளும்
விரையமாம் பொன்பூமி காலிமாதர்
சீரப்பா தான்போகும் வரும்கிஷ்டோம்
சிக்குமே விலைமாதரால் துன்பம்நேரும்
நேருமே சோம்பலொடு நேத்திரநோயுஞ்
சிந்தையாந் துக்கமொடு வலிவும்போமே.

இ-ள். புதன் (1) (2) (3) (6) (8) (12) இந்தஸ் தானங்களில் நிற்க அதின்பலன் பொன்பூமி கன்றுகாலி மாதர் இவைகள்சேத மாகும் கிஷ்டோம்நேரும் பெண்ணால்பகைநேரும் புண்ணால் கெண்

டம்சம்பவிக்கும் சோம்பலுண்டாகும்நேத்திரத்தில்நோய்காணும
துக்கமுண்டாகும் வலிவானதகுறையும் எ-று. 118

சுக்கிரன் நட்பாட்சி யுச்சத்தில் நின்றபலன்.

வலிவான சுக்கிரநட் பாட்சியுச்சம்
வந்துமே நிற்கிலதின் பலனைக்கேளும்
பவிக்குமே மாடாடு யடிமைபூமி
பண்பாகுந் தண்டிகையுங் குடைதீவட்டி
நிலைக்கவே மனையாளும் பெருவள்பிள்ளை
நிடுமுறவு கலியாணம் நேசர்போகம்
மலைக்கவே செல்வமொடு கீர்த்தியோங்கும்
மன்னவரால் மகிடசியுண்டு மகிழ்ந்துபேசே.

இ-ள். சுக்கிரன்நட்பு ஆட்சிஉச்சம் இந்தஸ்தானங்களில்நிற்க அதின்பலன் மாடு ஆடு பூமி அடிமை இவைகள் பலிதமுண்டாகும் குடை தீவட்டி தண்டிகை கிடைக்கும் மனையாள் பிள்ளை பெருகுவள் கலியாணங்கூடும் நேசபோக பாக்கியமுண்டாகும் செல்வமுடன் கீர்த்தியோங்கும் அரசர்களால் மகிழ்ச்சியுண்டாம் எ-று.

சுக்கிரன் பகைநீசத்தில் நின்றபலன்.

பேசவே சுக்கிரனும் பகைநீசத்தில்
பழியாக நின்றிடிலோ பலனைக்கேளு
கூசிட கண்ணூனம் மாதர்பீடை
குற்றமாம் மாடாடு செல்வம்போகும்
தோசமா மெண்ணமுடி யாதுசண்டை
தொல்லையாம் தலபேதம் போகவைக்கும்
நாசமாம் மண்மனை வழக்குசோரம்
நங்கையெனு மனையாளும் பிரிகுவாளே.

இ-ள். சுக்கிரன் பகைநீசத்தில்நிற்க அதின்பலன் கண் ஊனமாகும் மாதருக்குப் பீடைகாட்டும் கன்றுகாலிஉடமை பொன் இவைகள்சேதமாகும் நினைத்தஎண்ணம்முடியாது சண்டைநேரும் இருப்பிடம் விட்டேகச்செய்யும் மண்,மனை,சோரம், இவைகளால் வழக்குநேரும் விவாகப்பெண்ணனவள் வேறொருவனைநாடிப் பிறிந்துபோவாள் எ-று. 120

சுக்கிரன் மகாதிசை பலன்.

பிரியமாம் சுக்கிரதிசை யிருபதாண்டும்
பேராரு மதின்பலனைப் புகலக்கேளு
நிரையுமாம் பொன்பூமி மணமுங்கூடும்
நீடுஞ் சோபனமுடனே மன்னர்நேயம்
பரியுமாம் வஸ்திரா பரணமுண்டாம்
பண்பாகும் வாத்தியமொடு யோகங்கூடும்
அரையவே யதிகமாம் மேன்மையுண்டாம்
அடுத்திடும் தொடுத்ததோர் தொழிலும்பாரே.

இ-ள். சுக்கிரன் மகாதிசை வருடம் (20) ற்கும் அதின்பலன் பொன்பூமியுடன்மணங்கூடும் சோபனம்நடக்கும் அரசர் நேயமாகும் ஆடையாபரணங்கிடைக்கும் சங்கீதவித்தையுண்டாகும் யோகந்தரும் மேன்மையுண்டாகும் தொழில்பலிதமாகும் எ-று. 121

சுக்கிரன்திசையில் சுக்கிரபுத்தியின் பலாபலன்

பாரப்பா சுக்கிரதிசை சுக்கிரன்புத்தி
பண்பாகும் வருடமூன்று மாதம்நாலும்
சிரப்பா யதின்பலனைச் செப்பக்கேளுஞ்
சித்தியாம் பூஷணமும் புத்திரவிருத்தி
கூரப்பா பழையநிலக் தான்பஞ்சேரும்
கோதையருங் கூடிடுவாள் மனமகிழ்ச்சி
நேரப்பா வரசர்களின் நேயங்கூடும்
நேரிழைக்குஞ் சுகமுண்டாம் நீட்டுவாயே.

இ-ள். சுக்கிரன்மகாதிசையில் சுக்கிரன்புத்திவருடம் (3) மாதம் (4) ற்கும் அதின்பலன் பூஷணாதிகள்கிடைக்கும் புத்திரவிருத்தியாகும் பழையநிலங்கிடைக்கும் தனதான்னியம் வருத்திக்கும். செரியுண்டாகும் அரசர்கள்நேயமுண்டாகும் மனையாளுக்கும் சுகமுண்டாகும் ஒருபெண் கைவசமாவாள் எ-று. 122

சுக்கிர திசையில் சூரியனார்புத்தியின் பலாபலன்

நீட்டிய சுக்கிரதிசை சூரியன்புத்தி
நிலையாகும் வருடமொன்றின் பலனைக்கேளு

நீட்டிடுஞ் சிரோபாரம் கண்கள்நோயும்
நிலைதவருங் காரியங்கள் கெடுதியாகும்
மாட்டிய மன்னரொடுப் பகையுமாகும்
மாடுமனை யடிமையுமே தீயால்வேகும்
பூட்டிடுஞ் சோரர்பயம் பொருளும்போகும்
பொல்லாங்கு தான்விளையும் புகலுவாயே

இ-ள். சுக்கிரன்திசையில் சூரியனார் புத்திவருடம் (1) ற்கும் அதின்பலன் சிரசில்வியாதி யுமுண்டாகும் நேத்திரத்தில் நோய்காணும் நிலையானதுதவரும் காரியங்கள் கெடுதியாகும் அரசர்கள்பகைநேரும் மாடு, வீடுஅடிமையாள் இவைகள்தீயால் வெந்துபோகும் சோரர்களால் பயமநேரும் பொருளும்போகும் யாவரிடத்துப்பேசினும் பழியும்பொல்லாங்கும் வந்தணுகும் எ-று. 123

சுக்கிரதிசையில் சந்திரனார்புத்தியின் பலாபலன்

புகலவே சுக்கிரதிசை சந்திரன்புத்தி
பொருந்திய வருடமொன்று மாதமெட்டும்
தகலவே யதின்பலனைச் சொல்லக்கேளு
தாங்கிடுமே தரித்திரமுந் தொழிலும்நஷ்டம்
இகலவே வஸ்திரா பரணம்போகும்
இன்பமா மிவர்புத்தி கடையில்தானும்
பகலவே செல்வமதுப் பலித்துஓங்கும்
பார்புகழக் கீர்த்தியது கொள்வான்பாரே.

இ-ள். சுக்கிரன்திசையில் சந்திரனார்புத்திவருடம் (1) மாதம் (8) ற்கும் அதின்பலன் தரித்திரம்சம்பவிக்கும் செய்தொழில் நஷ்டமாகும் வஸ்திராபரணம்களவுபோகும்இவைகள்நீங்கிபுத்திகடையில்செல்வம் பலித்துஓங்கும் உலகத்தார்புகழ்ந்து கொண்டாடகீர்த்தியோங்கும் எ-று. 124

சுக்கிரதிசையில் செவ்வாய்புத்தியின் பலாபலன்

பாரப்பா சுக்கிரதிசை செவ்வாய்புத்தி
பகருகின்ற வருடமொன்றும் மாதம்ரெண்டும்
காரப்பா யதின்பலனைக் கூறக்கேளும்
கனக்குலையுந் துணைவருடன் பந்துநாசம்

வீரப்பா மன்னருடப் பகையுநேரும்
விளையுமே பீடையுடன் மனைவிவேறும்
சீரப்பா செட்டோடுதெ தொழிலுங்கேடாம்
சிக்குமே பலவழக்குஞ் சோதத்தானே.

இ-ள். சுக்கிரன்மகாதிசையில் செவ்வாய்புத்திவருடம் (1)மாதம் (2)ற்கும் அதின்பலன் ஈனமான தக்குலையும் சகோதிரர்களுடனே பந்துக்களும்நாசமடைகுவர் அரசர்களுடையப் பகைநேரும் பீடைவிளையும் மனையாளை வேறுபடச்செய்யும் செட்டுபலியாது தொழில்கெடும் பற்பலவழக்குகள்வந்து சம்பவிக்கும் எ-று.

சுக்கிரதிசையில் இராகுபுத்தியின் பலாபலன்

சேரவே சுக்கிரதிசை ராகுபுத்தி
செப்பிய மூவாண்டின் பலனைக்கேளு
நேரவே தனதான்னியம் மனைவிபுத்திரர்
நிலையாகுஞ் செட்டோடுப் பசுவுஞ்சேதம்
கூரவே துர்ச்சனரின் சேர்க்கையுண்டாம்
கொடுமபகையாம் பில்லியேவல் பீடையுண்டாம்
பேரவே பண்புளார் நாசமாவார்
பிழையாகும் பழிநேருங் கண்டுவிள்ளே.

இ-ள். சுக்கிரன் மகாதிசையில் இராகுபுத்திவருடம் (3)ற்கும் அதில் பலன் தனதான்னியம் மனையாள்புத்திரர் செட்டுபசிஇவை முதலானதுபசேதமாகும் துர்ச்சனர்களின் சவகாச முண்டாகும் பகைநேரும் பில்லியேவலினால் பீடைசம்பவிக்கும் நன்மையாகிய சிநேகிதர்கள் நாசமடைகுவர் பிழைநேரும் எ-று. 126

சுக்கிரதிசையில் குருபுத்தியின் பலாபலன்

கண்டிடவே சுக்கிரதிசை குருவின்புத்தி
கனமான வருடம்ரெண்டு மாதமெட்டும்
விண்டிடவே யதின்பலனை விளம்பக்கேளு
வெகுசுகமாம் வித்தையொடு புத்திரர்தீர்க்கம்
பண்டாகு மரசர்களின் நேயங்கூடும்
பாக்கியமும் பொன்பொருளுங் காலிசேரும்
உண்டாகும் வாணிபமும் பலிதமாகும்
உகந்திடுந் தந்தைக்குங் கீர்த்தியென்னே.

இ-ள். சுக்கிரன்மகாதிசையில் குருபுத்திவருடம் (2) மாதம் (8)ற்கும் அதின்பலன் சுகமுண்டாகும் வித்தைபலிதமாகும் புத்திரர்பலிதமுண்டு அரசர்கள்நேயங்கூடும் பொன் பொருள் கன்று, காலிகள்சேரும் வாணிபம்பலிதமாகும் தந்தைக்கு கீர்த்தி பெருகும் எ-று. 127

சுக்கிரதிசையில் சனிபுத்தியின் பலாபலன்

என்னவே சுக்கிரதிசை சனியின்புத்தி
  இயம்பிய வருடமூன்று மாதம்ரெண்டும்
மன்னிய வதின்பலனை யுரைக்கக்கேளு
  மகாதிங்கு பிராணசங் கடமேயாகும்
வின்னமாம் விலங்குவரும் துக்கமுண்டாம்
  வீணாகப் பலபொருளுஞ் சேதமாகும்
துன்னவே யிவர்புத்திக் கடையில்தானும்
  துலங்கிடுமே செல்வமென்று தொகுத்திடாயே.

இ-ள். சுக்கிரன்மகாதிசையில் சனிபுத்திவருடம் (3) மாதம் (2)ற்கும் அதின்பலன் தீங்குகள்சம்பவிக்கும் பிராணசங்கடம்நேரும்விலங்குவரும் பலபொருளுஞ் சேதமாகும் இவைகள் புத்திமுதலில்நடக்கும் கடையில் அதிகச்செல்வத்தை கொடுக்குமென்று சொல்லவேண்டும் எ-று. 128

சுக்கிரதிசையில் புதனார்புத்தியின் பலாபலன்

தொகுத்திடவே சுக்கிரதிசை புதனார்புத்தி
  துலங்கியதோர் வருடம்ரெண்டும் மாதம்பத்தும்
பகுத்துமே யதின்பலனைப் பகரக்கேளு
  பலவிதத்தும் லாபம்வரும் பயிர்செழிக்கும்
மிகுத்திடுமே யரசருடன் பெரியோர்நேயம்
  மேலாகுந் தனதான்னியங் கன்றுகாலி
வகுத்திடவே வாணிபமும் பலிதமாகும்
  வளம்பெறவே வித்தையுடன் வாழ்வார்பாரே.

இ-ள். சுக்கிரன்மகாதிசையில் புதனார்புத்திவருடம்(2)மாதம் (10)ற்கும் அதின்பலன் பலவிதத்திலும் இலாபங்கிடைக்கும்பயிர்த்தொழில்செழிக்கும் அரசர்கள்நேயமும்,பெரியோர்களுதவியுமு

ண்டாகும் தனதான்யங்கிடைக்கும் கன்றுகாலிப்பெருகும் வாணி பம் பலிதமாகும் வித்தையுண்டாம் எ-று. 129

சுக்கிரதிசையில் கேதுபுத்தியின் பலாபலன்

கூறப்பா சுக்கிரதிசை கேதுபுத்தி
குறித்திட்ட வருடம்மொன்று மாதம்ரெண்டும்
நேரப்பா விடபயமும் நிந்தையுண்டாம்
நெடியகன்று காலிகளும் நட்டமாகும்
பாரப்பா பலிதமுண்டாம் விகடவித்தை
பழியாக சாஸ்திரத்தை நிந்தைசெய்வன்
வீரப்பா பந்துவோடு குருக்கள்தன்னை
விளைவ நிந்திப்ப னென்றுபேசே.

இ-ள். சுக்கிரன்மகாதிசையில் கேதுபுத்திவருடம் (1)மாதம் (2) ற்கும் அதின்பலன்விஷபயம் நிந்தையான சொல்வரும் கன்று காலிகள் நஷ்டம்வரும் விகடமானவித்தைகள்பலிதமாகும்சாஸ்தி ரங்களை தூஷிப்பன் பந்துக்களையும் குருமார்களையும் நிந்திப்பான வார்த்தைகள் சொல்லுவன் எ-று. 130

சுக்கிரன் திசையின் கிரகபலன்

முற்றிற்று.

கோசாரவேதையறியும்படி.

சந்திரலக்கினத்திற்கு சூரியன் (4) லும், சந்திரன் (8) லும், செவ்வாய் (7) லும, புதன (4) லும், குரு (3) லும், சுக்கிரன் (6) லும், சனி (1) லும், ராகு (9) லும், கேது (2)லும் இருந்தால்கோசாரத்தில் நல்லபலனைக் கொடுக்கமாட்டார்கள். இதுவும்சந்திரலக்கினத்திற்கு (11) (3) (10) (6) ல்-சூரியனிருக்க, முறையே (5) (9) (4) (12) ல்-கிரகமில்லாதிருந்தால் தானிருந்த இராசிபலனைக் கொடுப்பான்.

(1) (3) (6) (7) (10) (11) ல்-சந்திரனிருக்க முறையே (5)(9) (12) (2) (4) (8)ல்-கிரகமிலலாதிருந்தால் ராசிபலனைத்தருவன்.

(3) (6) (11)ல்-செவ்வாய்-சனி-இராகு இவர்களிருக்க முறையே (2)(9)(5)ல் கிரகமில்லாதிருந்தால் ராசிபலனைகொடுப்பான்.

(2)(4)(6)(8) (10) (11)ல் புதனிருக்க, முறையே (5) (3) (6) (1) (8) (12)ல் கிரகமில்லாதிருந்தால் அவர்கள்நின்ற ராசிபலனைக் கொடுக்கும்.

(11)(9)(7)(5)(2)ல்-குருவிருக்க முறையே (8) 1o)(3)(4)(12) ல்-கிரகமில்லாதிருந்தால் தானிருந்தராசிபலனைக் கொடுப்பான்.

(11) (12)(2)(8)(1)(4)(3)(5)(9) ல்-சுக்கிரனிருக்க, முறையே (1) (3),(6) (7) (5) (8) (9) (10) (11) ல்-கிரகமில்லா திருந்தால் அவர்நின்ற ராசிபலனைத் தருவன்.

விபரீதவேதையறியும்படி

சந்திர லக்கினத்திற்கு (5) (2)(15) (12) ல்-சூரியனிருக்க, முறையே (11) (3) (10) (9) ல்-வேறு கிரகமிருந்தால் சூரியன்நல்ல பலனைக் கொடுப்பான் இவ்வாறே மற்றகிரகங்களுக்கும் கோசார விபரீதவேதை பார்த்துக்கொள்ளவும.

சூரியனும், செவ்வாயும், முற்பக்கிலும் குருவுஞ், சுக்கிரனும் நடுபக்கிலும் சனியுஞ், சந்திரனும், கடைபக்கிலும் புதனும் ராகு கேதுகளும் எப்போதும் பலன் தருகுவர்.

கோசாரப்பலனறியும் நுட்பம்

சூரியன்.	சந்திரன்	குஜ-சனி-ராகு-கேது
1. வியாதி	1. தேகசௌக்கியம்	1. புத்திக்குறைவு
2. வியாகூலம்	2. தனஹானி	2. வியாதி-சத்துரு
3. நன்மை	3. திரவியலாபம்	3. திரவியலாபம்
4. சத்துருபயம்	4. ரோகபயம்	4. விரோதம்-ஜ்வரம்
5. ரோகம்	5. காரியவிகல்பம்	5. பலநஷ்டம்
6. திரவியலாபம்	6. சந்தோஷம்	6. சந்தோஷம்
7. ஸ்தானசலனம்	7. சவுக்கியவிருத்தி	7. சிறைபயம்-கலகம்
8. சரீரபீடை	8. ரோகவிருத்தி	8. மரணபயம்-கஷ்டம்
9. பயம்	9. காரியதாமஷம்	9. காரியநஷ்டம
10. தனலாபம்	10. உத்தியோகவிருத்தி	10. பயம-விரையம்
11. நன்மைவிருத்தி	11. நன்மைவிருதது	11. திரவியலாபம்
12. தனவிரையம்	12. தனவிரையம்	12. வியாதிசத்துருவிரை

புதன்	வியாழன்	சுக்கிரன்
1. பிராணபயம்	1. பிராணபயம்-திரவியசேதம்	1. திரவியலாபம்
2. சுச்குணம்	2. திரவியலாபம்	2. லட்சுமீகரம்
3. புத்திக்குறையும்	3. வியாதிநஷ்டம்	3. சௌக்கியம்
4. புத்திரவி[illegible]த்தி	4. சிநேகவிரோதம்	4. பந்துசங்கமம்
5. அபகீர்த்தி	5. திரவியலாபம்	5. திரவியலாபம்
6. திரவியலாபம்	6. கஷ்டம்	6. ஸ்தானசலனம்
7. சோகம்	7. ஸ்திரீசங்கம் சுகம்	7. வியாதி
8. அனுகூலம்	8. மரணவியாகூலம்	8. இஷ்டசித்தி
9. மாதி	9. வஸ்திரம் சம்பத்து	9. திரவியதருமம்
10. லட்சுமீகரம்	10. ஸ்தானசலனம்	10. திரவியநஷ்டம்
11. சந்தோஷம்	11. பொன்வஸ்திரம்	11. சுகபோஜனம்
12. பலநஷ்டம்	12. திரவியநாசம் வியா	12. சுபம் லாபம்.

(விசேஷகோசாரம்) சந்திரன் சுக்கிலபட்சமாயிருந்தால் 3, 5, 9-ம் கிருஷ்ணபட்சமாயிருந்தால் 4, 8, 2-ம் உத்தமமாகும்.

இதல்லாமலும், 1-ல்-சனி, 2-ல்-கேது, 3-ல்-குரு, 4-ல்-புதன், 5-ல்-சூரியன், 6-ல்-சுக்கிரன், 7-ல்-குஜன். 8-ல்-சந்திரன், 9-ல்-ராகு, ஆனாலும் சரீரபீடை திரவியச்சேதமுண்டாம்.

யோகினிநிலை.			பூமி-சுக்கிரன்
சுக்கிலபட்சம்	கிருஷ்ணபட்சம்.		
பிரதமை-ஏகாதசி	ஸஷ்டி	கிழக்கு	கிழக்கு
துவிதியைதுவாதசி	ஸப்தமி	வடக்கு	தென்கிழக்கு
திரிதியை திரையோதசி	அஷ்டமி	தென்கிழக்கு	தெற்கு
சதுர்த்திசதுர்த்தசி	நவமி	தென்மேற்கு	தென்மேற்கு
பஞ்சமி-பூர்ணிமா	தசமி	தெற்கு	மேற்கு
ஸஷ்டி	பிரதமை-ஏகாதசி	மேற்கு	வடமேற்கு
ஸப்தமி	துவிதிரைதுவாதசி	வடமேற்கு	வடக்கு
அஷ்டமி	திரிதியை - திரையோதசி	வடகிழக்கு	வடகிழக்கு
நவமி	சதுர்த்திசதுர்த்தசி	ஆகாசம்	ஆகாசம்
தசமி	பஞ்சமி அமாவாசி	பாதாளம்	பாதாளம்

யோகினியும் பூமிசுக்கிரனும் பிரயாணத்துக்குப்பின்னும்வலமும்நல்லது முன்னும்இடமும்தீயது ஆகாசமும்பூமியும்மத்யம் நித்தியயோகினியின்னும் இடமும்நல்லது முன்னும்வலமும் தீயது மேலும் வாரசூலங்களில் கண்டதிக்குகளில் குறித்தமணிக்குமேல்ப்யாத்திரை செய்யலாம்.

வாரசூலம்.	திக்கு	மணி	பஞ்சசலாகாவேதை		சப்தசலாகாவேதை	
ஞாயறு வெள்	மேற்கு	11	கிருத-விசாக ரோ-அபீஜி	மக-ஸ்ரீவணம் பூரம்-அசு	கிருஸ்ரீவணம் ரோக-அபிஜி	மக-பரணி பூரம்-அசு
திங்கள் சனி	கிழக்கு	$9\frac{1}{4}$	மிரு-உத்தா ஆரு-பூராட	உ.த்தி-ரேவ அஸ்-உத்திர	மிரு-உத்ரா ஆரு-பூரா	உத்-ரேவ அஸ்-உத்ர
செவ்வாய் புதன்	வடக்கு	$12\frac{1}{2}$	புனர்-மூலம் பூசம்-கேட்	சித்தி-பூராட் சுவா-சதய	புன-மூல பூசம-கேட்	சித்தி-பூரா சுவாசதை
வியாழம்	தெற்கு	$2\frac{1}{4}$	ஆயி-அவிட்	அனு-பரணி	ஆயி-அனு	விசாஅவி

வேதையறிதல்.

வேதாசக்கரங்களிற்கண்ட இருவகைசலாகாவேதைகளின் உபயநக்ஷத்திரங்களில் ஒன்றுதினநக்ஷத்திரமாயும் மற்றொன்று கிரகங்களிருக்கும் நக்ஷத்திரமாயும் இருந்தால் அதின் நக்ஷத்திரத்திற்கு அக்கிரகத்தின் வேதையென்றுப்பெயர்.

லப்தையறிதல்.

சூரியனிருக்கும்நட்சத்திரத்திற்கு 12-வதுநக்ஷத்திரமும், குஜனுக்கு 3-வதுநக்ஷத்திரமும், சனிக்கு 8-வதுநக்ஷத்திரமும், இராகுகேதுகளுக்கு 22-வதுதினநக்ஷத்திரமாயிருந்தால், அத்தின நக்ஷத்திரத்திற்கு அக்கிரஹத்தின் லப்தையென்றுபெயர்.

ஆக்ராந்தமறிதல்.

கிரகங்களிருக்கும்நக்ஷத்திரமே தினநக்ஷத்திரமா யிருந்தால் அத்தினநக்ஷத்திரத்திற்கு அக்கிரகத்தின் ஆக்கிராந்தமென்று பெயர் சூரியன், குஜன், சனி, இராகு,கேது இவர்களுடைய லப்தை ஆககிராந்தம், வேதை இவைகளைத்தள்ளிச் சுபகாரியஞ் செய்தத்தக்கன.

சகலசுபங்களுக்கும் நிக்ஷயத்தகாலம் அறிதல்.

நக்ஷத்திரங்களில் பரணி, கார்த்திகை, திருவாதிரை ஆயிலியம் பூரம்,கேட்டை, பூராடம், பூரட்டாதி திதிகளில் பிரதமை,சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி,நவமி,ஏகாதசி, துவாதசி,சதுர்த்தசி,பூர்ணிமா அமாவாசியை, வாரங்களில்செவ்வாய்,சனி, தேதிகளில் வருஷக்கடசியில் 15-ந்தாம்நாளும், மாதக்கடைசியில் 3-ம்நாளும் நட்சத்திரமுடிவில் 48-மினிட்டும் சுபகாரியங்களுக்காகாவாம்.

(மாசத்தியாஜ்ஜியம் அல்லதுகரிநாள்) சித்திரை 6 - 15, வைகாசி 7-16-17, ஆனி 1-6, ஆடி 1-10-20, ஆவணி 2-9 - 28, புரட்டாசி 17-29, அற்பிசி 6-20, கார்த்திகை 1-10-17, முதற்சோமவாரம் மார்கழி 6-9-11, தை 1-2-3-17, மாசி 15-16-17, பங்குனி 6-15-19, மேற்கண்ட தேதிகளின் பகலிலும், பூர்வாத்திரியிலும் சுபகாரியங்களை வர்ஜிக்கவும்.

கௌரிபஞ்சாங்கம்.

வாரம்.	காலம்.	ம. மி. 7 30	ம. மி. 9 0	ம. மி. 10 30	ம. மி. 12 0	ம. மி. 1 30	ம. மி. 3 0	ம. மி. 4 30	ஸந்தி காலம்
ஞாயர்	பகல்	உத்யோக	லாபம்	விஷம்	அமிர்தம்	சுபம்	தனம்	அமிர்தம்	ரோகம்
	இரவு	தனம்	சுபம்	சோரம்	விஷம்	கலகம்	அமிர்தம்	லாபம்	ரோகம்
திங்கள்	பகல்	அமிர்தம்	விஷம்	உத்யோக	லாபம்	சோரம்	சுபம்	லாபம்	தனம்
	இரவு	ரோகம்	லாபம்	உத்யோக	தனம்	ரோகம்	அமிர்தம்	விஷம்	சோரம்
செவ்வாய்	பகல்	ரோகம்	உத்யோக	சோரம்	லாபம்	அமிர்தம்	உத்யோக	விஷம்	தனம்
	இரவு	சோரம்	உத்யோக	விஷம்	லாபம்	சோரம்	தனம்	சுபம்	அமிர்த
புதன்	பகல்	விஷம்	அமிர்தம்	சுபம்	உத்யோக	சோரம்	லாபம்	தனம்	அமிர்த
	இரவு	லாபம்	ரோகம்	விஷம்	உத்யோக	சுபம்	அமிர்தம்	தனம்	லாபம
வியாழம்	பகல்	உத்யோக	விஷம்	சோரம்	லாபம்	அமிர்தம்	ரோகம்	கலகம்	சோரம
	இரவு	சுபம்	ரோகம்	கலகம்	லாபம்	உத்யோக	சோரம்	தனம்	உத்யே
வெள்ளி	பகல்	ரோகம்	சோரம்	அமிர்தம்	விஷம்	லாபம்	சுபம்	தனம்	அமிர்த
	இரவு	அமிர்தம்	சோரம்	விஷம்	லாபம்	சுபம்	தனம்	உத்யோக	ரோகம்
சனி	பகல்	விஷம்	அமிர்தம்	ரோகம்	உத்யோக	சுபம்	லாபம்	தனம்	லாபம்
	இரவு	விஷம்	உத்யோக	சுபம்	அமிர்தம்	கலகம்	ரோகம்	அமிர்தம்	லாபம

மேற்கண்ட சக்கரங்களைப் பார்க்கும் அடைவு.

இராகு குளிகாதிக் காலங்களையும் கௌரிபஞ்சாங்கக் காலத்தையும் சுத்தமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின் மேற்கண்ட சக்கரங்களில் சுமாராய்க்காட்டிய மணிகளுக்குத் தக்கபடிமுற்பக்கத்தில் இருக்கிற்பதகத்தில் அதேவரியிலிருக்கும் துருவகாலமணி மினிட்டில அன்றையசூரியோதய மணியை சூரிய அஸ்த மணியிற் கழித்துவந்தமணி (12-0) க்கும் அதிகமாய் அல்லது குறைந்துமவருகிற மினுட்டுகளுக்கு 1-வது சங்கையிலும், 2-வது அஷ்டாம்சத்திலும், ஏற்படுகிறமினிட்டுகளை பகற்காலமணி (12-0)க்கு அதிகமாயிற்கூட்டியும் குறைந்தால்கழித்தும் ஏற்பட்டமணி மினிட்டை அன்றைய சூரியோதயகால மணியிற்கூட்டிக்கொள்கஇதிலமணி(12)க்கு அதிகப்பட்டால் (12) கழித்துக்கொள்க.

உதாரணம்.

ஆனிமீ 10உக்கு வியாழக்கிழமை இராகுகாலம்மணி சுமார் 1-30. இதற்குப்பதகத்தில் அதேவரியிலிருக்கும் துருவகால மணி 7-40. அன்றுசூரியோதயமணி 5-39. அச்சூரியாஸ்தமய மணி 6-25-ல்கழித்து மிகுந்தமணி 12-46 இது 12-0 மணிக்கு மினிட் 46. அதிகமாகையால் 40-க்கு 1-வதுசங்கையில் மினிட் 25. 2-வது அஷ்டாம்சத்தில் 6-க்கு மினிட் 4. இந்தமினிட் 29-யும் ஷை துருவமணி 7-30ல் பகற்காலம 12-0-க்கு அதிகமானதால் கூட்ட 7-59 இதை அன்றுசூரியோதயமணி 5-39ல்கூட்டமணி 13-38, இதில் 12-க்கழிக்க மணி 1-38. இதுவே அன்று இராகுகால ஆரம்பமாகும் முடிவையும் துருவகாலத்தில்மணி 1-30-ஐக்கூட்டி மேற்சொல்லியபிரமமாகப் பார்த்துக்கொள்க அதுமணி 3 - 14. ஆகும் இதுவே சுத்தம்.

வருஷமகாதிசை அறியும்வகை.

ஜெனனநட்சத்திரமுதல், பங்குனிபூர்வபட்சம் பிரதமைஅன்றைய நட்சத்திரம்வரை எண்ணி 5-ல்பெருக்கி 9 - ல்கொடுத்த மிச்சம்.

1-க்குச் சூரிய	திசைநாள்	20
2-க்குச் செவ்வாய்	,,	28
3-க்குச் குரு	,,	58

4-க்குக் கேது	திசைநாள்	21
5-க்குப் புதன்	,,	56
6-க்குச் சுக்கிரன்	,,	70
7-க்குச் சனி	,,	36
8-க்குச் சந்திரன்	,,	50
9-க்கு இராகு	,,	21

ஆகநாள் 360-இதில் எந்ததிசைமுதல் தோன்றுகின்றதோ அதுமுதலாக மேற்சொன்ன முறைப்படி வருஷமகா திசையைப் பார்ப்பது மகாதிசைப்போல் பலன்கொள்கவும்.

மாதமகா திசைபலன்

ஜெனனநட்சத்திரமுதல் மாதம்பிறந்தநட்சத்திரம்வரைக்கும் எண்ணிக்கண்ட தொகையை 7-ல்பெருக்கி 9-ஞல் வகுத்த மிச்சம் கண்டு பலனறியவும்

1-க்கு	சூரியன்	திசை நாள்	$1\frac{1}{2}$	அலச்சல் பலநோய்
2 ,,	புதன்	,,	$4\frac{1}{4}$	இலாபம் பந்துதரிசனம்
3 ,,	இராகு	,,	$4\frac{1}{2}$	நீச்சச்சினேகம்
4 ,,	குரு	,,	4	போஜனசவுக்கியம்தனலாபம்
5 ,,	கேது	,,	$1\frac{3}{4}$	தேகபீடை
6 ,,	சந்திரன்	,,	$2\frac{1}{2}$	பூர்வதனம் அமர தனநஷ்டம்
7 ,,	சனி	,,	$4\frac{1}{2}$	விரோதம் குடும்பகலகம்
8 ,,	சுக்கிர	,,	$5\frac{1}{2}$	ரத்திநாபரணலாபம்
9 ,,	செவ்வாய்	,,	$1\frac{1}{2}$	போஜனசவுக்கியம் கலகம்

இவ்விதமாகக் கிரகங்களின் மகாதிசைவருடம் 1 - க்கு நாள் கால்லாக கொள்கவும்.

மாதபலன்

ஜென்மநட்சத்திரமுதல் மாசப்பிரவேச நட்சத்திரம்வரையில் எண்ணி எழில்பெரிக்கி எட்டிஞல் வகுத்தமிச்சம்.

1	ஆனுல்	ரோகம்	5	ஆனுல்	தனம்
2	,,	லாபம்	6	,,	ஐயிஸ்வரியம்
3	,,	அத்துவானம்	7	,,	திரவியசேதம்
4	,,	பந்தனம்	8	,,	தீதுண்டாம்

திசைபலன் அறியும்வகை.

ஜன்மநட்சத்திரமுதல் தற்காலநட்சத்திரம்வரையில்எண்ணிக் கண்டதொகையுடன் ஞாயறுமுதல் அன்றையவாரம் வரையிலும் பிரதமைமுதல் அன்றையதிதிவரையிலும் கூட்டிக்கண்ட தொகையைச்சேர்த்து ஒன்பதினால் வகுத்தமிச்சம்.

1	ஆனல்	வியாகூலம்	6	ஆனல்	சுபம்
2	,,	சுபம்	7	,,	கலகம்
3	,,	நீசவார்த்தை	8	,,	ரோகம்
4	,,	பந்துதரிசனம்	9	,,	ஞானவாக்கியம்
5	,,	ஸ்திரீபோகம	(இவ்விதமறிகவும்)		

தாரபலன் அரியும்வகை.

ஜென்ம நட்சத்திரமுதல் தற்கால நட்சத்திரம்வரையில் எண்ணி ஒன்பதினல் வகுத்தமிச்சம்.

1 ஆனல் ஜென்ம கிலேசமுண்டாகும்
2 ,, சம்பத்து சம்பத்துண்டாகும்
3 ,, விபத்து ஆபத்துண்டாகும்
4 ,, க்ஷேமம் க்ஷேமமுண்டாகும்
5 ,, பிரத்தியர்க்கு காரிய நாசமுண்டாகும்
6 ,, சாதனம் தெய்வானுகூல முண்டாகும்
7 ,, நைதனம் துக்கமுண்டாகும்
8 ,, மைத்திரம் சுபங்களுண்டாகும்
9 ,, பரமைத்திரம் அதிக சுபமுண்டாகும்

9-3-ம் பரியாயத்தில் அசுபம்.

சிலர் 9-வது தாரை சுபமென்பர் சிலர் முதற் பரியாயத்தில் ஜென்மதாரையும் இரெண்டாம்ரியயாயத்தில் விபத்துதாரையும் மூன்றும்பரியாயத்தில் பிரத்தியக்குதாரையும் மூன்றும் பரியாயத்தி லும் வாதைதாரையும் ஆகாவென்பர் மற்றவைகூடுமென்பர்.

1-க்கு சூரியனும் 2-க்கு புதனும் 3-க்கு இராகுவும் 4-க்கு குருவும் 5-க்கு கேதுவும் 6-க்குச் சந்திரனும் 7-க்கு குஜனும் 8-க்கு சுக்கிரனும 9-க்கு செவ்வாயும் அதிபதியாகக் கொள்வது பலறும் முறையே தாமதம் லாபம் நாசம் தைரியம் கீர்த்தி லயம் ஹானி பிரமோதம் மிருத்தியு.

1-க்கு 7-ம் 3-ம் 2-ம்- 5-க்கும் 7-க்கும் ஆக நாழிகையை நீக்கிய மற்றயநாழிகை சுபமாம்.

மயில், குதிரை, ஆடு, யானை, காக்கை, நரி, சிங்கம், கருடன் அன்னம் இவைமுறையே தாரவாகனங்களாகுமெனவறிக,

சந்திரபலன் அறியும்வகை.

ஜென்மராசிமுதல் அன்றையதினஞ் சந்திரனிருக்கின்ற இராசிவரைக்கும் எண்ணிக்கொண்டுவந்த தொகையில் பலனறியும் விபம்.

1-க்கு	தேகசவுக்கியம்	7-க்கு	சவுக்கியவிருத்தி
2 ,,	தனஹானி	8 ,,	ரோகவிருத்தி
3 ,,	திரவியலாபம்	9 ,,	காரியதாமசம்
4 ,,	ரோகபயம்	10 ,,	உத்தியோகவிருத்தி
5 ,,	காரியவிக்கினம்	11 ,,	இஷ்டார்த்தசித்தி
6 ,,	சத்துருநாசம்	12 ,,	தனவிரயம்

சிலர் சுக்கிலபட்சத்தில் (2) (5) (9) ம் உத்தமமென்றும் கிருஷ்ண பட்சத்தில (4) (8) (12) ம உத்த மென்றும் சொல்லுவார்கள்

மனைநூல் பார்க்கும்வகை.

மனையை தச்சுமுழத்தால் அளந்துகுழியாக்கி அந்தக்குழியை (8)ல் பெருக்கி (2)ல் கழித்தமிச்சம் ஆகாயாம் (9)ல்பெருக்கி(10) ல்கழித்தமிச்சம் சிலவு (4)ல்பெருக்கி (40)ல் கழித்தமிச்சம் வயது (8)ல்பெருக்கி (27)ல் கழிக்கமிச்சம யோனி (9)ல்பெருக்கி (7) ல் கழித்தமிச்சம வாரம் (9)ல்பெருக்கி (4)ல் கழித்தமிச்சம ஜாதி(4) ல்பெருக்கி (8)லகழிந்தமிச்சம அம்சம (9)லபெருக்கி (30)ல் கழித்தமிச்சம் திதி இதில (15)க்கு உள்பட்டால் வளர்பிறை யாகவும் (15)க்கு மேற்பட்டால் தேய்பிறையாகவும கொள்கவும இவற்றுள் யோனி.

1-க்கு	கருடன்	5-க்கு	பாம்பாகும்
2 ,,	பூனையாகும்	6 ,,	எலியாகும்
3 ,,	சிங்கமாகும்	7 ,,	யானையாகும்
4 ,,	நாயாகும்	8 ,,	முசலமாகும்

இவ்விதமாகக் கண்டுக்கொள்கவும் இவற்றுள் பூனை, எலி, மூசல், ஆகாவாமெனவறிக அவ்விற்றின்பலன் அமிசம்.

1-க்கு	சோரம்	5-க்கு	இராஜியம்
2 ,,	புத்தி	6 ,,	கிலீபம்
3 ,,	சத்தி	7 ,,	வருத்தம்
4 ,,	தானியம்	8 ,,	சோரம் (9) சுபம்.

இவற்றுள் (1) (7) (8) (9) ஆகாவாம் இதற்குச் சூத்திரம் (1) க்கும் பாலன் (2) க்குகுமரன் (3) ராஜன் (4)க்கு கிழவன் (5) க்கு மரணம் இவற்றுள் (4)(5) ஆகாவாம் வீட்டின் அகலத்தை (9) பங்காககி வலத்தில் (3) பங்கும் இடத்தில் (5) பங்கும் தள்ளி நின்ற பங்கில் தெருவாசற்படிவைக்கவும வலத்தில் (2) பங்கும்இடத்தில் (3) பங்குந்தள்ளி நின்றயங்கு (4) க்குள்முற்றமாக்கவும் அல்லது பிராமணனுக்கு தெற்குவடக்கு நீளமாகிய சந்திரபத்தியாகவும்மற்றவர்களுக்குக் கிழக்கு மேற்கு நீளமாகிய சூரியபத்தியாகவும் முற்ற மிருக்கவேண்டும்.

வீடு அடி கணக்குகளைக்கொண்டு பலனறியும்வகை.

௭	அடி இருந்தால்	தனநாசமடைகுவன்
௮	,,	இடையூறுநீங்கும்
௯	,,	திருவோடு கையிலேந்துவன்
௰	,,	பாலுமன்னமுண்டு
௧௧	,,	புத்திரஹானி
௧௨	,,	புத்திருண்டாகும்
௧௩	,,	பகைநோய்குடிநீங்கும்
௧௪	,,	பாக்கியமுண்டாகும்
௧௫	,,	பொருளும் உயிரும்நீங்கும்
௧௬	,,	மத்தியமாகவிருக்கும்
௧௭	,,	மத்தியபலன் தருகும்
௧௮	,,	குடியானதுநிலைக்காது
௧௯	,,	பொருளழிவுண்டாகும்
௨௰	,,	வீடுவிட்டு வெழிப்பிவிடும்
௨௧	,,	ஆடுமாடு யிரந்துபோகும்
௨௨	,,	கல்வியாணமுடியும்
௨௩	,,	நஷ்டமுண்டாகும்

௨௪	,,	கள்ளராலேகொள்ளைபோகும்
௨௫	,,	நன்றாகவாழ்ந்து கொண்டேயிருப்பான்
௨௬	,,	காணிநன்மையும் சம்பத்துண்டாகும்
௨௭	,,	தெண்டமுங் கேடும்வரும
௨௮	,,	ஆயுசுவானாகவிருப்பன்.
௨௯	,,	பிள்ளைகள்யிறந்துபோகும்
௩௰	,,	வேலைமுடிகிறதுக்குள்ளே விட்டோடிப் போவான்
௩௧	,,	தரித்திரவானாகவிருப்பான்
௩௨	,,	திரவியமெடுப்பன்
௩௩	,,	மனைவியர்கள் ரெண்டுண்டு
௩௪	,,	குதிரையுடன்வாழ்குவன்
௩௫	,,	திரிச்சலலச்சல்படுகுவன்
௩௬	,,	அலைகுலைந்துபோகும்
௩௭	,,	ஆண்பிள்ளைகளைப் பெருகுவன்
௩௮	,,	வியாதியாயிருப்பான்
௩௯	,,	இராஜாக்களிடத்திலிருந்துவெகுமானம் வரும்
௪௰	,,	பெண்ஜாதி வாழமாட்டாள்
௪௧	,,	பால்பாக்கியமுண்டாகும்
௪௨	,,	நாலுபேர் மனுடருடன்வாழ்வன்
௪௩	,,	தெண்டத்திற்குள்ளாகுவான்
௪௪	,,	கண்தெரியாமற்போகும்
௪௫	,,	நல்லகுதிரையைப்பெருகுவன்
௪௬	,,	பிசாசுவாசஞ்செய்யும்
௪௭	,,	நிலத்தைவிட்டுப்போவான்
௪௮	,,	நெருப்புப்பட்டுவேகும்

(4) மேற்கண்டபலனுக்குள் (6) அடிவரக் கூடாவாம் ஆகையால் (8) அடிவரும்படியாகச் செய்துக்கொள்கவேண்டும் தச்சுமுழம் ஒன்றுக்குகைமுழம் இரண்டு இதுவீட்டெஜமானுடைய கைகளால் கொள்கவேண்டும்

வெண்பா.

மதியுதிக்கக்கால்நாட்டி மானுதிக்கக்கட்டி
விதிவெள்ளி தானுதிக்க வெய்து-பதிதனிலே

மந்திரிதானுதிக்க மாடங்குடிபுகுந்தால்
இந்திரனைப்போல் வாழ்வரென்றும்

இதின்பொருள்.

சந்திரன் நின்றலக்கினத்தில் அஸ்திபாரஞ்செய்து புதன்னின்றலக்கினத்தில் வீட்டைக்கட்டிமுடித்து சுக்கிரனின்ற லக்கினத்தில் ஒடுமூடி குருநின்றலக்கினத்தில் கிரகப்பிரவேசஞ்செய்ய இப்பூமியின்கண் இந்திரபோக முண்டாகும் எ-று

துளைமுதலிய விபரம்.

வீட்டின்துளையானது வெட்டித்தும் கைதூலம் முதலியனவொற்றையாயும் தூண்குத்து உண்டானவீடு எஜமானுக்குக் கெடுதிதருகும்.

வீட்டிற்கு எஜமானுடைய லக்கினத்திற்குக் கிரகப்பிரவேசலக்கினமும் அஸ்திபாரலக்கினமும் வலமாய் (6) இராசிக்குள்ளிருக்கின் நன்மைதருகும் இடமாகவிருக்கில் ஆகாவாம்.

விருத்தம்.

நன்னுளினிலமனேகோலிடநரனுளிடாசி
மூன்னுகியவலமாகுதல் முத்தித்தனுவென்றும்
பின்னுகியவிடமாகுதல் பேதித்தனுவென்றும்
பொன்னுவது முயிராவதும் போமாரிது திண்ணம்.

இ-ள். வலமாகவுள்ள (6) விராசிக்கும்முத்தித்தனுவென்றும் இடமாகிய (6) விராசிக்கும் பேதித்தனு வென்றும் பெயராகும் எ-று.

வாசற்படிவைக்க வெண்பா.

வீட்டினளவை விளக்கொன்பான் கூருசெய்து
நீட்டியளந்த நிலக்கோலால்-கூட்டிடுவாய்
வாமத்தேயைந்தும் வலத்தேயொருமூன்றாய்
சேமத்தே வாசலிடச் செப்பு.

இ-ள். வீட்டின் அகலத்தை (9) கூருசெய்து வாமத்தில் (5) பங்கும்வலத்தில் (3) பங்கும் வீட்டின் வாசப்படி வைக்கவேண்டும்

கிழக்கு மேற்குவீதிக்கு வலம்கிழக்காகவும் இடம்மேற்காகவும் தெற்கு வடக்கு வீதிக்கு வலம்வடக்காகவும் இடம்தெற்காகவும் கொள்கவேண்டும்.

குடிபுக ஆகாமாதங்கள் விருத்தம்.

ஆடித்திங்களில் ராவணன்பட்டதும்
   ஆலமெய்ப்பெரும் பாரதம்மார்கழி
வீடிட்டான் புரட்டாசி யிரணியன்
   மேவிமீசனஞ் சுண்டது மாசியில்
பாடிக்காம னெறிந்ததும்பங்குனி
   பார்க்குளெகினன் மாபிலியானியில்
வீடிட்டல் லங்குடிபுக வேண்டினே
   ரூேடிட்டே யிரக்துண்பருலகினே.

இ-ள். ஆடிமாதம் இராவணன் மாண்டதினாலும் பாரதப் போர்நடந்தது மார்கழிமாதமானதினாலும் இரணியசம்மாரம்பண்ணது புரட்டாசிமாதமானதினாலும் பரமேசுரன்நஞ்சுண்டது மாசிமாசமானதினாலும் காமன்யெரிந்தது பங்குனிமாத மானதினாலும் மாபேலசக்கரவர்த்தி பூமிக்குள் அழுந்தினது ஆனிமாதமானதினாலும் இந்தமாதங்களில் குடிபோகில் யெரந்துண்பரும இதை நீக்கவும்.

பீரகசமயம் அரியும்வகை.

மேஷமுதல் ஜாதகனுடையஜென்மலக்கினம் வரையிலும்எண்ணினதொகைக்கும் இலக்கினமுதல் அந்தக்கிரகமிருக்கும் இலக்கினம்வரை எண்ணினதொகைக்கும் பெருக்கி 27-ல் கழித்து நின்றமிச்சத்தையும் அவரவர்கள் திசாவருஷத்தையும் பெருக்கி 27 - ல் கழித்துநின்ற மிச்சம் சமையமாம்

கிரகங்களின் சமையபலன்.

க-க்கு	ஸ்தானம்	மத்திபம்
உ-க்கு	அலங்காரம்	உத்தமம்
௩-க்கு	விபூதிசந்தனமிடல்	உத்தமம்
ச-க்கு	சேமம்	உத்தமம்
ரு-க்கு	சிவபூசை	மத்திபம்
சா-க்கு	அவுபாஷணம்	சமயம்

எ-க்கு	விஷ்ணுபூஜை	சமயம்
அ-க்கு	பிராமணபூஜை	மத்திபம்
கூ-க்கு	நமஸ்கா	சமயம்
ய-க்கு	பிரதட்சணம்	உத்தமம்
கக-க்கு	வைசுவதேயம்	உத்தமம்
கஉ-க்கு	அதிதிபூஜை	சமயம்
கங-க்கு	போஜனம்	உத்தமம்
கச-க்கு	புராணபிரசங்கம்	உத்தமம்
கரு-க்கு	கோபம்	சமயம்
கசா-க்கு	தாம்பூலம்	உத்தமம்
கஎ-க்கு	இராஜசங்கம்	உத்தமம்
கஅ-க்கு	கிரீடம்பூனல்	உத்தமம்
ககூ-க்கு	சலபானம்	மத்திபம்
உய-க்கு	ஆலிங்கனம்	உத்தமம்
உக-க்கு	சயனம்	மத்திபம்
உஉ-க்கு	அமுதபானம்	உத்தமம்
உங-க்கு	மதனலங்காரம்	உத்தமம்
உச-க்கு	லீலை	உத்தமம்
உரு-க்கு	போகம்	சமயம்
உசா-க்கு	நித்திரை	மத்திபம்
உஎ-க்கு	ரத்தினபரிட்சை	உத்தமம்

சல்லிய நிர்ணய ஸஞ்சீவியென்னும்
பூமிக்குட்பட்ட பொருள்களையுங் கூப
முதலியவலங்கர்சுத வஸ்துக்களையுங்
கூறுகின்றனவாம்

இந்நூலின்பயன்.

இந்நூலினால் ஒவ்வொருவர்களுக்குந் தாங்களிருக்குங் கிரகங்களிற் பூமியுள்ளிருக்கும் பொருட்கூபம் முதலியவஸ்துக்களை யறியும்பொருட்டும அவ்விதம்அறியாவிடின் அவர்கள்வாசஞ்செய்யும் கிரகமிடங்களாற் றனக்குண்டாகுஞ் சுகதுக்கங்களையறிந்து அதற்குரியபரிகார உபசாந்திகளைச்செய்து சுகமடையும்பொருட்டுமின்னூலியற்றப்பட்டன.

குடியிருக்கும் மனைகளிலாவது நூதனமாகக் கட்டவேண்டிய இடங்களிலாவது இந்நூற்படிநோக்கிக் கட்டிடங்கள் கட்டாவிடினும் அம்மனையைப்பரிசோதனைசெய்யாது குடிபுகுதல் பழயகட்டிடங்களை வாங்குதல்முதலியதால் அவ்வெசமான் முதலியவர்களுக்கும் அவ்விதசல்லியமிருக்கும் மனைகளிற் குடியிருக்குஞ் சனம் முதலியபிரஜைகளுக்கும் அவ்விதமனைகளை யடைந்தகாலமுதல் அந்தமனை வீட்டிற்கேடுமுதலான சல்லியங்களினால் உயிற்சேதமும் அவ்விதமவாங்கினவன் பலதொந்தரை யடைந்து உயிர்ச்சேதாதி குடும்பபீடைகளையும் லக்ஷப்பொருள்களையிழந்து நசித்தலும் அவ்விதமனைகளுங் கைசோருதலும் எவ்வளவுமேன்மையான கிரகங்கட்டினாலும் அல்லதுகட்டிடமாகவேவாங்கினாலும் அதிற்குடியிருக்கவிடமன்றி யலைதலும் பிணிக்கொள்ளுதலும் அவ்வித சல்லியங்களிருக்குமனைகள் அவ்வெசமானன் வாங்கிக்கட்டும்பொழுதே முடிவுபெறாது போகுதலும் புத்திரபாக்கியாதி செல்வமின்றி விசனத்தைக்கொடுத்த இப்படிக்கொத்தவின்னும்பலவிததொந்திரவுகிலேசங்களை மனுக்கள் அடைவதாலவ்வித துக்காதிசோகங்கள் தொலைதற்பொருட்டுமிந்நூலின் ஞானேந்திரத்தாலறிந்து அவ்விதகெடுதற் சல்லியங்களை வாராய்ந்தெடுத்து சுகம்பெறுதற்பொருட்டும் நூதனமாகவாங்கும் கட்டடம்முதலிய் மனைபூமிகளில் நற்சல்லிய மிருப்பதாகத்தெரிந்து வாங்குதற்பொருட்டும மிந்நூலாவச்யக மாகையாலும் இந்நூலுரைக்கத் தொடங்கினம்.

நற்சல்லியமிருக்குமனை முதலிய பூமிகளும் வாசஸ்தலங்களும் மிகவும் ஐச்சுவரியவதிகனச் செல்வத்துடனும் பெரும்பிரபல விருத்திகளுடனும் புத்திராதி சுபசோபன முதலிய மங்களவிருத்திகளுடன் இருந்துவாழ்ந்து வரப்படுமென்றறியவேண்டியது.

இவ்விரண்டுசல்லியங்களு மில்லாவிடத்துத் தேவாலயம்முதலியதும் பலபெயர்கூடுகின்ற பொதுவிடங்களும் அமையுமென்றும் அவ்வெல்லைகயான இடங்களிற்கெடுதற் சல்லியமிருக்கிற் சிலநாளந்த இடமானது பிரபலம்போலக் காண்பித்து வரவர நசிந்துவிடுமென்றும் அவ்வெல்லைப்பாகங்களில் நற்சல்லியமிருக்கில் சிலகாலம்பாழ்போன்றுமியாதொருவிருத்திகளு மில்லாததுபோற் றோன்றி ஆகாரணமாயும் அத்தியாச்சரியமான வைபவங்களவ்விடங்களிலுண்டாகி மேன்மைப்பெருதலும் இப்படிக்கொற்ற பலவிதவிகற்ப விவரங்களைக் கீழேகூறப்படுங் காண்க.

பதினாறுவகை சல்லியங்களின்
விபரம்.

நற்சல்லியமாவது தான்னியங்கள் பொன்மிருகங்களின்கொம்பு இம்மூன்றுமாம். மற்றயப்பதின்மூன்றுவஸ்துக்களும் கெடுதற் சல்லியமெனப் பார்த்துக்கொள்ள வேண்டியது.

தனக்குத்தானே பார்த்துக்கொள்ளும்
விபரம்.

தாம்பார்த்துக்கொள்ளவேண்டில் மனதிற்குவிசைந்த வெண் ஒன்பதுதுகைகளை ஓரிடத்திற்போட்டு அத்துகையுடன் 28-என்னும் ஓர்துகையையும் ஆசப்பத்துவிதத்துகைகளையும் ஒன்றுசேர்த்துக்கொண்டு அத்துகையை 12-ற்பெருக்கி 16-ற்கழித்துக் கண்டமிச்சம் க-முதற் பதினைந்துவரையிலுமுள்ள துகை எதுவாய்வரினும் தான்நினைத்தமனை முதலியவிடத்திற்சல்லியம் உண்டென்றும மிச்சமேயில்லாமற் போகுமாகிற் சல்லியசாமானங்கள் ளம்மனைமுதலியவிடத்திலில்லை என்றும் சொல்லவேண்டியதெனவறிக.

மேற்கூறியவண்ணம் தன்மனதிற்குவரும ஒன்பதுதுகைகளைப்போடவேண்டுமென்றுசொல்லப்பட்டனவே அந்தந்ததுகைகளை ஒன்றுகூட்டிப் பனிரெண்டிற்கழித்த சேஷத்தைமேஷமுதல் எண்ணிக்கண்ட இராசியை உதயலக்கினமாகப்பார்க்கவும் அவ்விதம்

பார்க்கின்றதினத்தில் நவக்கிரகங்கள் பஞ்சாங்கரீத்திப்படி யிருப்பதைப் போட்டுக்கொண்டு ஒவ்வொருகிரகங்களும் எந்தநட்சத்திரத்திலிருக்கிறதென்பதையுங் குறிப்பிட்டு சுத்தமானப் பஞ்சாங்கம்மூலமாக அறிந்துக்கொண்டு குறித்துக்கொள்ளவேண்டியதெனவறிக.

பிரர்களுக்குப் பார்க்கும்

விபரம்.

பிரர்களுக்குப்பார்க்கவேண்டில் அவர்கள்வந்த நாழிகைக்கு என்ன உதயலக்கினமாகிறதோ அவ்விலக்கினத்தை 12-பாகஞ்செய்து அப்பனிரெண்டுபாகத்துள் அப்படிக்கேட்டுங் காலத்து அந்த உதயலக்கினத்தில் இத்தனையதுபாகமென்றறிந்து அத்தொகையை அவ்வுதயலக்கினத்தைத் தொட்டெண்ணினால் எந்தவிலக்கினம்வருகிறதோ அதைமய உதயலக்கினமாகவும் பார்த்துக்கொண்டு அக்காலத்திற் பஞ்சாங்க ஸ்புடப்படிக்குள்ளகிரகங்களையும் போட்டுக்கொள் வேண்டியதெனவறிக.

முதலாவது ஒருவன்வந்திருக்கும்பொழுதே அவன்கேட்குமிடத்தில் சல்லியமுண்டா இல்லையாவென்று நோக்கவேண்டியதெப்படியெனில் ஒருவன்வந்துகேட்டுங் காலத்துடனே அடியளந்து அவச்சாயை பாதச்சாயைத்தள்ளி நின்றவடிவுடனே 28-ஒருதொகையையும் மேஷந்தொடங்கி உதையம்வரையிலுள்ள ஒருதொகையையும் ஆகமூன்றுவிதத்தொகைகளையும் ஒன்றுசேர்த்து 12-ற்பெருக்கி 16-க்கீய்ந்த சேஷமறிந்து சேஷமில்லாவிடிற் சல்லியமில்லையென்றும் சேஷமிரிக்குங்காலத்திற் சல்லியமுண்டென்றறிய வேண்டியது.

சல்லியங்கேட்டமனையிலோ கட்டிடம்பூமிஇவைகளிலோ

இன்னபாகத்தி லிருக்கின்றதென்று காண

வேண்டியதர்க்கு ஆதாரங்களாவன.

எந்தவிடத்திற் சல்லியமிருப்பதாக எண்ணிக் கேட்கப்படுகிறதோ அந்தயிடத்தின் அகலத்தை நான்குபாகமும் நீளத்தை ஏழுபாகமுஞ் செய்துக்கொள்ளவேண்டிய ஒவ்வொருபாகமொன்றுக்கு இத்தனையடி யென்றாவது தெசமென்றாவது தெரிந்துக்கொள்ளவேண்டும்.

அப்படித் தெரிந்துகொண்டபின் தனக்காகுலும் பார்களுக்காகுலும் பார்க்கநேரிடுந்தினத்தில என்னநட்சத்திரமே வகைத்தெரிந்து அந்தநட்சத்திரத்தை மேற்சொல்லிய அகலத்தின்நான்குபாகம் நீளத்தின்ஏழுபாகம் ஆகபாகம் இருபத்தியெட்டினுள் அவ்விடத்தின்பாகம் எழுவெனறவரிசையில் வலமாகவிருக்கும இடம மூன்ருவது பாகத்திலன்றைய நட்சத்திரத்தைவைத்தும அந்தநான் நட்சத்திரம்தொடங்கி 27-வது நட்சத்திரத்தை வலமுறையான முதற்பாகத்திலு போட்டு 2-வதுபாகத்தில் 28-வது நட்சத்திரத்திரதத்தையும் 4-வதுபாகத்தில் 2-வதுநட்சத்திரமும் 5-வதுபாகத்தில் 3-வதுநட்சத்திரமும் 6-வதுபாகத்தில் 14-வது நட்சக்திரமும் 7-வதுபாகத்தில் 15-வது நட்சத்திரத்தையும் 8-வதுபாகத்தில் 26 வது நட்சத்திரத்தையும் 9-லதுபாகததில 7-வது நட்சத்திரத்தையும் 10-வதுபாகத்தில் 6-வதுநட்சத்திரத்தையும 11-பாகக்தில் 5-வதுநட்சத்திரத்தையும் 12-வதுபாகத்தில 4-வது நட்சத்திரத்தையும் 14-வதுபாகத்தில் 16-வதுநட்சத்திரத்தையும் 15-வது பாகத்தில் 25-வது நட்சத்திரத்தையும 16-வதுபாகத்தில் 8-வது நட்சத்திரத்தையும 17-வதுபாகத்தில் 9-வதுநட்சத்திரத்தையும் 18-வது பாகத்தில 10-வதுநட்சத்திரத்தையும 19-வதுபாகத்தில் 11-வது நட்சத்திரத்தையும 20-வதுபாகத்தில் 12-வது நட்சத்திரத்தையும் 21-வதுபாகத்தில் 17-வது நட்சத்திரத்தையும 22-வது பாகத்தில் 24-வது நட்சத்திரத்தையும் 23-வதுபாகத்தில் 23-வதுநட்சத்திரத்தையும் 24-வதுபாகததில் 22-வது நட்சக்திரத்தையும் 25-வது பாகத்தில் 21-வது நட்சத்திரத்தையும 26-வதுபாகத்தில் 20-வது நட்சத்திரத்தையும் 27-வதுபாகத்தில் 19-வதுநட்சத்திரத்தையும் 28-வதுபாதத்தில் 18-வதுநட்சத்திரத்தையும் போடவேண்டியது

இதைக்குறித்துக்கொண்டபின் அன்றையதினத்தில்கிரகங்கள் ஒவ்வொன்றினுடைய சஞ்சரிப்பு நட்சததிரங்களையும காணவேண்டியது.

நட்சத்திரம் 28 என்றுகூறப்பட்டதே நட்சத்திரம் 27தானே உலகத்தில் வழங்கப்படுகிறதென்று சந்தேகிக்கவேண்டுவதில்லை ஏனெனில் அபிசித்தென்னும்நட்சத்திரங்கூடல் ஆக 28 எனக்காண்க அபிசித்துநட்சத்திரமாவது உத்திராடத்தின்கடைசி 15 நாழிகையும் திருவோணததில 4-நாழிகையும் நான்குவினாடி கொண்டகாலமும் அபிசித்துநட்சத்திரமாகும் ஆகையால் உத்திராடம் எந்த

நாளில் வருகிறதோ வன்னுளில்முன் கூறியக்கணக்கின்படி நாழிகையெடுத்து அபிசித்துநட்சத்திரம் ஒன்றுசப்போட்டுக்கொண்டு அதற்குயிணையான பாகத்திலடைத்துப் பார்க்கவேண்டியது.

முன்கூறிய பாகசக்கிரமாவது.

1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28

இன்னுமோர்விதமறியும் விபரம்

மேற்கூறிபபடி யாவும் பார்த்துக்கொண்டு இவ்விதகின நட்சத்திரத்தைப் பாகத்திலடைப்பதற்காக நாழிகை-2 விநாடிகை - 8, கலை-45 வீதம் மாரி மேலேகண்ட விதிபின்படி அந்தந்த பாகங்களிலும் நம்பர்வாரிப்படி ஒருவன்வந்து எத்தனுவது நாழிகையிற் கேட்கப்படுகிறுனே அல்லது தனக்கே எந்தக்கடிகையிற் பார்க்கவெண்ணமுண்டாகப் படுகிறதோ குறியவுதையமுதல் அந்தக் கடிகைவரையிற் சென்றநாழிகையை 2-விநாடி 8¾ ஆகப் பாகித்துப் பார்க்க உத்தேசிக்குங்கடிகை எததனுவது பாகமென்றறிந்து அந்தப்பாகத் துகைக்குச்சரியாக அன்றையநக்ஷத்திரந்துடங்கி எண்ணிவந்த நட்சத்திரத்தை மேற்காட்டியபடி மூன்றுவதுமுதலியபாகங்களிற் போட்டுக்கொண்டு அப்படிபார்க்குந்தினத்திற்குசென்ற நாழிகைவரையில் துருவபஞ்சாங்கங்களி லிருக்கும் நவக்கோட்களுடைய நிலையான நட்சத்திரப்பாதசாரத்தையும் எடுத்துப்போட்டும் பின்வருமாறு பலன்களையும் இஷ்டசித்திகளையுந் தெரிந்துக்கொள்ளவேண்டியது.

சல்லியமென்னும் பூமிக்குட்பட்ட பொருள்

௧௬-க்கும் விபரம்.

முதல் தலைமண்டை 2-வது எலும்பு 3-வது செங்கல் 4-வது ஓடு 5-வது இறகு 6-வது அங்கிரகம் 7-வது சாம்பல் 8-வது கரி 9-வது பிணம் 10-வது தானியம் 11-வது பொன் ரத்தினதிபொருள் 12-வது கல்நவமணி 13-வது மீசை 14-வது மிருகக் கொம்புகள் 15-வது செத்தநாய் 16-வது சாடி பொருளில்லாமை யெனக்காண்க.

பூமிக்குட்பட்டப் பொருளானது சந்திரன் அன்றையத்தினத்தில் எந்தநக்ஷத்திரத்தில் இருக்கின்றானோ அந்தநக்ஷத்திரம எந்த பாகமான விடத்திலிருக்கின்றதோ அதேபாகத்தில் அதற்குஏற்ற பொருளிருக்குமென அறியவேண்டும்.

பாம்பு. சனி, குஜன், இருக்குமிடங்களிலும் சனிபாம்பு குஜனிவர்கள் அந்தகாலத்திலெந்த நக்ஷத்திரத்திலிருக்கின்றார்களோ அந்தநக்ஷத்திரம் எத்தனையது பாகத்திலிருக்கப் படுகின்றதோ அதேபாகத்தி லந்தந்தகிரகங்களுக்குக் கீழ்காட்டப்படும்பொருள்களிருப்பதாகவும் அதனாலுண்டாகும பலன்முதலிய பயன்களையுந் தெளிவுறத் தெரியலாகும்.

கண்டங்களிலேநின்ற சுபக்கோட்களைப்பாபக்கோட்கள்கூடிநிற்கினும்நோக்கினும் சல்லியமுண்டென்றும் கூடிநிற்றலும் நோக்கலுமில்லையாகில் சல்லிய இல்லையென்றும கண்டங்களிலேநின்றசந்திரனை அங்காரகன் கூடிநிற்கினும் நோக்கினும் அங்காரகன் நின்றநாளறையிலே ஆட்டெலும்பு உண்டென்றுஞ்சொல்லப்படும்

கண்டங்களிலேநின்ற சந்திரனைக் குருகூடிநிற்கினும் நோக்கினும குருநின்றநாளறையிலே பாப்பாரெலும்பு பசுவெலும்பு அல்லது செங்கல் பொன் இவற்றுள் 1-உண்டென்று சொல்லப்படும்.

அவ்விதகுருவிற்கு இருபுறமும் சுபராகி குருகோணகேந்திர உச்சவீட்டிலிருக்கினும பாபசம்பந்த மில்லாதிருக்கில் அவ்வறையென்றபாகத்தில புராதனதனம பொன்னாபரண முண்டென்றும அவை யிவனுக்கு சித்திக்குமெனக்காண்க.

கண்டங்களிலேநின்ற சந்திரனைச் சூரியன்கூடிநிற்கினும் நோக்கினும் சூரியனின்ற நாளவறையிலே விக்கிரகம் உண்டென்றுஞ் சொல்லப்படும் சனிகூடினும் நோக்கினும் சனிநின்றநாளவறையிலே எருமையின் எலும்புண்டென்றுஞ் சொல்லப்படும் சூரியனின்ற பாகத்திலே தலைமண்டையோடு உண்டென்றறியவேண்டியது மேற்கூறிய சூரியன் உதயலக்கினத்திற்றுபாபனானால் தலைமண்டையும் சுபாதிபதிசுபனானால் விக்கிரகம் பஞ்சலோகத்தாற்செய்தவை இவனுக்கண்டமென்ன வறியவேண்டியது.

கண்டங்களிலேநின்ற சந்திரனைப்பாம்பு கூடிநிற்கினும் நோக்கினும் பாம்புநின்ற நாளறையிலே பாம்பாதல் புற்றாதல் பாம்பினெலும்பாதல் உண்டென்றுமறிக.

கண்டங்களிலேநின்ற சந்திரனைப் புதன்கூடிநிற்கினும்நோக்கினும் புதனின்ற நாளறையிலே நாயெலும்பு உண்டென்று சொல்லப்படும் சுக்கிரன்கூடிநிற்கினும் சுக்கிரனின்ற நாளறையிலே வெள்ளிமுதலிய வாபரணம் உருக்குகளும் உண்டென்றும் அச்சுக்கிரன் சுபபலன்பெறில் அப்பொருள் இவனுக்குக் கிடைக்குமென வறிக.

கண்டங்களிலேநின்ற சுபக்கோட்களைப் பாபக்கோட்கள் கூடிநிற்கினும் சல்லியம்வினை மனையை உடையானுக்கு நினைத்த கருமம் முடியாது அந்தமனையின் ஆட்சியும் இல்லாமையாய்போம் அவன்வறுமையினாலே துன்பப்படுவன் என்றுமறிக.

கண்டங்களிலே சுபக்கோட்களன்றிப் பாபக்கோட்கள் நிற்கினும் அவற்றைநோக்கினும் தீமையுண்டாகும்.

கண்டங்களிலே பாபக்கோட்களன்றிச் சுபக்கோட்கள் நிற்கினும் அவற்றைநோக்கினும் நன்மையுண்டாம் சுபக்கோட்களன்றிப் பாபக்கோட்கள் நிற்கில என்றமையால் சுபக்கோட்களுமாகக் கூடிநிற்கில நன்மையுந்தீமையும் விரவிநடக்கும் அல்லது நன்மை சிலகாலமும் தீமைசிலகாலமுமாக நடக்குமெனவறிக.

கண்டங்களிலே பாபக்கோட்களன்றிச் சுபக்கோட்கள் நிற்கினும் அவற்றைநோக்கினும் மனைவசப்படும் செல்வமும் அதிகரிக்கும் மனையும் ஆக்ஷியுண்டாம் சுபக்கோட்கள் பார்க்கில் சிலகாலம் மிகுதியான வளப்பமும் செல்வமும் பிரபவித்துஞ்சிலகாலம் அதிகக்கீர்த்தியின்றி தாழ்மையடைந்து பின்விசேஷமின்றி அல்பமேன்மையையடைந்து வருவதேயாமெனவறிக.

(உச்சிக்) கண்டத்திலே சுபக்கோட்கள்நிற்கினும் அதனைநோக்கினும் அம்மனையைத்தானே அனுபவிப்பன்பாபக்கோட்கள்நிற்கினும் அதனைநோக்கினும் பிறர்அனுபவிப்பர் அல்லது தெய்வம் பாசசம் இராக்ஷஸம இவைகள் அனுபவிக்கும் என்றமையால்பாபக்கோட்களுக்குப் பிறரனுபவிப்பரென்பதிற்று பெற்றாம் 'இதிற்கூறியவிதி உச்சிகண்டத்திற்குச் சிறப்புவிதியாகவும் முன்னர்க்கூறியவிதிகள் பொதுவிதியாகவுங் கொள்வதெனவறிக.

வீட்டின் சொந்தபாத்தியதையாம்.

சல்லியம் எவக்கோட்களால் நியமிக்கப்பட்டனவோ அக்கோட்களின் கதிர்எத்தனையுண்டோ அத்தனையும்காணுகலால் சாண் - 2 கொண்டது முழமாமென்கிறவகையிலே எண்ணியவட்டம்முழமாகவும் சேவித்துநின்றது உள்ளபடியே சாணாகவுங்கொண்டுநட்பாட்சியுச்சம்·பகைநீசத்திலே ஏறுவனகுறைவன அறுந்துஇத்தனைமுழம் இத்தனைசாண் ஆழத்திலேயிருக்கிறதென்று சல்லியம்"இருக்கவின்ஆழம் குறிக்கப்படும் உச்சக்கோட்களின் கதிர்சாணாகவும் ஆக்ஷிக்கோட்களின் கதிர்முழமாகவும் நட்புக்கோட்களின் கதிர் ஆண்மக்கட்காகவும் பகைநீசக்கோளின் கதிர்பாதாளமாகவும்வருவித்துரைத்துக்கொள்வதெனவறிக (உதையமுதற் பத்தாமிடமாம்.)

கிரகங்களுக்குரிய கதிரின்விபரம்.

சூரியனுக்குக்	கதிர்	5	சுக்கிரனுக்குக்	கதிர்	16
சந்திரனுக்குக்	கதிர்	21	சனிக்கும	கதிர்	4
குஜனுக்குக்	கதிர்	7	இராகுவிற்குக்	கதிர்	4
புதனுக்குக்	கதிர்	9	கேதுவிற்குக்	கதிர்	4
குருவிற்குக்	கதிர்	10	ஆக	கதிர்	80

சல்லியம் வினவிவமனையின் அகலநீளங்களைத் தனித்தனியே சிறுகோலால்அளர்ந்து அத்தொகை 2-யும்ஒன்றிலேஒன்றாகப்பெருக்கி 28-க்கு ஈந்தவட்டம்முழமாம மீந்தசேஷத்தை 12-ற் பெருக்கி 28-க்கு ஈந்தவட்டம்சாணும் மீந்த சேஷத்தை 4-ற் பெருக்கி 2-க்கு ஈந்தவட்டம் அங்குலமாம இவ்வகையைக் கொண்டு முழம் காணும் சாணும் அங்குலமும் எத்தனையாமென்றறிந்துஇத்தனைமுழம் இத்தனைசாண் இத்தனை அங்குலம்என்று சல்லியமஇருத்தலின் ஆழம் குறிக்கப்படும் அகலம்நீளம என்றறகிழக்கு மேற்கும் வட

க்குகெற்குமாம் கோலென்றது பௌத்திரவிரல் மட்டமாக அளந்தாகிய முழம்-2 கொண்டதாக ரிஷபம்முதல் விருச்சிகம்வரையினும் ஆனதரிக்கால் 28-ஆனபடியால் இருபத்தெட்டிற் கழிக்கப்பட்டதென வறிக.

உதையம் நீர்கீழ் ஆனவை ரிஷபம் கடகம் துலாம் விருச்சிகம் மகரம் கும்பம் மீனம் இவைகளாகில் நீர்உண்டென்றும் அவற்றிற் சந்திரன் சுக்கிரன் இவைகள் நிற்கினும் அவற்றைநோக்கினும் மடங்காநீர் உண்டென்றும் புதன் குரு இவைகள் நிற்கினும் அவற்றை நோக்கினும் கீழ்நீர் உண்டென்று மறிக

அடங்காநீராவது வடிக்கவடிக்க வடிதலின்றிய நீராமென வறிக.

கீழ்நீராவது வடித்தவளவிலே வடிகின்ற நீராமெனவறிக

உதையம் நீர்கீழ்களிற் பாபநிற்கினும் அவற்றைநோக்கினும் மடங்காநீர் உண்டென்றும் பழகியகிணறு சூரியன் அங்காரகன் சனி இவைகள்நிற்கினும் அவற்றைநோக்கினும் நீர்இல்லையென்றும் நீர்க்கோட்கள் உதையததிலநின்று நீரில்லாதக்கோட்கள் 7-ல் நிற்கில் கீழூற்றென்றும் நீர்க்கோட்கள் -7-லும் நீரில்லாதக்கோட்கள் உதையத்தில்நிற்கில் மேலூற்றென்றும் சொல்லப்படும்கீழூற்றுமேலூற்றுயென்பது கீழ்நீரென்பது கீழ்நீர்தானென்றும் மேனீர்தானென்பது மேனீர்தானென்றும் வாதிப்பாருமுளர் மேனீராவது தோன்றி மறைகின்றநீராம்.

பாம்பு உதையத்தில்நின்றவிடத்து நீர்க்கோட்கள் நான்கிலாவது 7-லாவது நின்று நீரில்லாக்கோட்கள் ஏழில்நிற்கில் மேலூற்றென்றும் நீர்க்கோட்கள் ஏழில்நான்கில்நின்று நீரில்லாதக்கோட்கள் ஆருடத்தில்நிற்கில் கீழூற்றென்றும் இங்ஙனமமாறிக் கோட்கள் பாம்பு உதையலக்கினத்தில் நிற்கின் கீழூற்று மேலூற்றாகவும் மேலூற்று கீழூற்றாகவும் மாறுபடுமெனவறிக.

உதையம் 4-7 அவை நீர்ராசிகளாய் அவற்றில் நீர்க்கோட்கள் நிற்கில் மேலூற்றென்றும் நீரில்லாதகோட்கள் நிற்கிற் கீழூற்றென்றும்சொல்லப்படும் இடையிலேயூறுகின்ற ஊற்றையும் மேலூற்றென்றே சொல்வதுவிதி என்றது தெரிவிக்கற்பொருட்டு மேலூற்றென்றுக்கூறி அதனையே மருதவித்து இடையூற் றென்றும்

கூறினம் நீர்க்கிழென்பது உதையத்திற்கு நாலாமிடமாகு மென வறிக.

கண்டங்களிலேநின்ற சந்திரனைக்குரு கூடிநிற்கினும் நோக்கினும் மடங்காநீர் உண்டென்றும் சுக்கிரன்கூடி நிற்கனும் நோக்கி கீழ்நீர்உண்டென்றும் குருநின்றநாளறையிலேகீழ்நீருண்டென்றும் தெரிந்துக்கொள்வதெனவறிக கடகம்மகரம் கும்பமீனமரிஷபம் துலாம், விருச்சிகம் பாம்பு குரு மதிசுக்கிரன்

கண்டங்களிலேநின்ற சந்திரனை சுக்கிரன் அல்லது பாம்புகூடி நிற்கினும மடங்காநீர்உண்டென்றும், புதன்கூடிநிற்கினும் நோக்கினும பழையக்கிணறு உண்டென்றும் சொல்லப்படும குருவுக்கு மடங்காநீர் உண்டென்றும் முன்கூறிய இங்கேபழைய கிணறுண்டென்றார் பவதுட்சம கூறியவதனால் இவ் 2 யுமே சொல்லப்படும் குருபுதனசனி இவர்கள் 4-7-லாவது சந்திரன சுக்கிரனில விருவோர உதையத்திற்கு கேந்திரகோண ஜலவிராசிகளில் பலத்துநிற்கு மவருடனேகூடின் வாதசம்பந்தமுள கனத்தும சவுக்களித்து வறிசியில்லாநீராம் பரிவிருத்தியடையும் குஜன் சூரியன் பாம்புகள்கூடில் உப்புநீர் உவர்நீர் பித்தத்தை யுண்டாக்குமநீராம் சுக்கிரன் சந்திரனுகில் அதிசீதளமும சிலேற்பன ரோகமுண்டாக்கும். உருசியுள்ள நீராகுமெனவறிக.

கண்டங்களிலே சந்திரனாதல் சுக்கிரனாதல் நிற்கினும் அவற்றை நோக்கினும் மடங்காநீர்வுண்டென்றும புதன்சனி இவைகள்நிற்கினும அல்லதுகிருஷ்ண சந்திரனுகினும் அவற்றைநோக்கினும பழங்குழிகளாதல் ஓடையாதல் உண்டென்றும் அறியவேண்டும்

கண்டங்களிலே சூரியன்நிற்கினும நோக்கினும உப்புவரிஎன்றும் புதன்சனிநிற்கினும நோக்கினும கனைவழிவுபென்றும சந்திரனை சுக்கிரன இவைகள்நிற்கினும நோக்கினும நீர்தெளிவுபென்றும சந்திரன் சுக்கிரன் அல்லாத மற்றக்கோட்கள் நிற்கினும நோக்கினும நீர்தெளிவின்மை என்றுமறிக.

கண்டங்களிலே அங்காரகன்நிற்கினும் நோக்கினும் வெள்ளுவரிஎன்றும் புதன்நிற்கினும நோக்கினும கனைவழிவுயென்றும அக் கண்டா [illegible] கன்னி [illegible] இவைகளாகில் இடையூறு யென்றும் கீழ்மேயானா யென்றுமறிக.

கரைவழிவுயென்று விரித்துக்கூறினமையால் புதனல்லாதக் கோட்கள் நிற்கினுமநோக்கினும் கரைவழிவு என்று வருவித்துரைத்துக்கொள்க அறியென்றுகினைப்பிக்கவதனால் எவ்வெவக்கோட்களின் நின்றலும்நோக்கலும் ஆகியசம்பந்தம் உளவோ, அவ்வக்கோட்களின் சுவைகளையும் பூசித்துக்கொள்க.

கண்டங்களிலே சனிபாம்பு இவைகள் நிற்கினும்நோக்கினும் பெருநீர் மோளையென்றும் குருநிற்கினும்நோக்கினும் கல்லுண்டென்றும மற்றயக்கோட்கள் நிற்கினும்நோக்கினும் எலும்பு உண்டென்று மறிக.

கிணத்திறுழக்குறிப்பிற் சந்திரனுக்கு முதற்பங்கில் நீரும்சந்திரனும்புதனும அல்லாதக்கோட்களுக்கு நடுபங்கில்நீரும் புதனுக்குக்கடைபங்கில் நீரும் சூரியனுக்கு 8-முழத்தில்நீரும கன்னியில் நிற்பபாம்பிற்குப் பாரையடியில்நீருபசனிக்குகுப்பையடியில்நீரும் சொலலப்படுமென வறிக.

கீழ்நீரை எவ்வெவக்கோட்களால் நியமிக்கப்பட்டனவோ அவ்வக்கோட்களின் கதிர்களும மேற்படிகோட்கள் நினறுள்ளவை எவ்வெவ்ராசிகளோ அவ்வவ்ராசிகளின் கதிர்களும் எத்தனையோ அத்தனையும் சாண்களாதலால் சாண்களைமுழமாக்கி நின்றதைச் சாணைக்கொண்டு இத்தனைமுழம் இத்தனைசாண் என்றுகிணத்திறுழம பார்த்துக் குறிக்கப்படும என்றும்இதற்கும் சல்லியததின் ஆழமும உறித்தாமயென்பதுவும் கண்டுகொள்க.

சூரியனிக்குக்சாடாம்அங்காரகன்சனிஇவைகட்குமுற்களாம் பாம்பிற்குத்தாழை புதல்புத்து இவைகளாம் சந்திரனுக்குவாழையாம் புதனுக்குப்பலாவாம் குருவிற்குத்தென்னை பனைகமுகுஇவைகளாய சுக்கிரனுக்குக் கொடிகளாமெனவறிக.

கீழ்நீர்க்காக இதுவரையிற்கூறிய இடங்களிற் சுபக்கோட்கள் நட்பாட்சியுச்சக் கோட்களாகநிற்கினும் அவற்றை நோக்கினும் கிணற்றைவுடையான் அனுபவிப்பன் பாபக்கோட்கள் பகைநீசக் கோட்களாய்நிற்கினும் அவற்றைநோக்கினும் பிரர் அனுபவிப்பாரெனவறிக.

மேல்உணர்த்தியயிடங்கள் சரவிராசிகளும் உபயவிராசிகளுமாகவேநேரிடினும் அவற்றைநட்பாட்சியுச்சம்பெற்ற சுபக்கோட்களதுநோக்கம் உள்ளவிடத்து உடையான்நன்மையுடையவன் எ

ன்றும் கிணத்தைத்தானே அனுபவிப்பனென்றும் நோக்கமில்லா விடத்துதீமை அடைகுவனென்றும் கிணத்தைபிறர் அனுபவிப்பர் என்றுங்காண்க சரவிராசிகளையும் உபயவிராசிகளையும் பொல்லாங்கு கூறியவதனால் அவ்விடங்கள் ஸ்திரவிராசிகளாக இருந்தால் முக்கியமாகக் கொள்வதெனவறிக.

உடையான் இருக்கும் ஊருக்கும் மனைக்கும் கிணறுஇருக்குந் திசைகிழக்கு தென்கிழக்காகில் மக்களழிவாம் தெற்காகின் அதுபயம் தென்மேற்காகில் அடிமைகளுண்டாம் மேற்காகில்பயிர்கள்நோய்க்கொள்ளும் வடமேற்காகில் குடும்பவிருத்தியாம் வடக்காகில் தானியவிருத்தியாம் வடகிழக்காகில் தனப்பிராப்தி யுண்டாம் பிர்மஸ்தானமாகில் லட்சுமிகடாட்சமுண்டாம்.

கீழ்நீர்விழுவினை அன்னிலத்தைக் கீரிக்காட்டெடன்றளவிற் சிறுவிரலாற் கீறிற் பெண்பெருண்டாம். அணிவிரலாற்கீறிற் சம்பத்துண்டாம் நடுவிரலாற்கீறில் தேசசஞ்சாரம்வரும் சுட்டுவிரலாற்கீறிற் பொல்லாங்குவிளையும் பெருவிரலாற்கீறிற் அதுவும்பொல்லாங்குவிளையுமெனவறிக.

கிணற்றின் றுவக்கமாதங்கள் சித்திரை, வைகாசி, இனிஇவைகளாகிற் பெருனீருண்டாம் உத்தமமாம் ஆடி, ஆவணி இவைகளாகில் அற்பனீருண்டாம் மத்திபமாம் மற்றயமாதங்களாகி னீரின்மையாம அதமமாம். இப்படிக்கோட்களின் அமைவும் உண்டாதல் கண்டு அறுதியறிக மாதங்களைபோலக் கோட்களின் அமைபும் இல்லாதவிடத்து அறுதிச்சொல்லக்கூடாவாம கிணர்பார்க்கக்கூடியவிடங்களில் முளைத்தெழும்பிய நிலக்கருவிகளாலும் அறிந்துகொள்ளுவதற்குக் கீழ்காட்டப்படும். மூலிகைகள் எந்தபாகத்திலடர்த்தியுடனிருக்கப்படுகிறதோ அவ்விடத்தி லூற்றிருத்தலாகக் கொள்ளவேண்டியது.

நிலக்கருவென்னும் மூலிகைகளாவன.

அருகு பீளை கீழ்காய்நெல்லி பொடுதலை கரிப்பான் பொன்னாங்கணி பிரமி வேப்பூலா நாயுருவி சாரணை நாட்டொருக்கபுளி இலுப்பை எருக்கலைச்செடி பாலை நெஞ்சி நொச்சி வஞ்சி புங்குஇவ்விருவதுவிதகருக்களில எருக்கு புளி பிரமிபாலை இந்தநான்குவித மூலங்களிருக்கும் இடங்களிற் திரவியம்முதலிய புதைபொருளுள்ளவிடங்களென்றுங் காணவேண்டியது

பூமிக்குட்பட்ட பொருட்களானவை கிட்டுங் கர்த்தாவடைவன் அல்லது பிறர்க்கடைவர்களென்ற காலங்களும் பொருட்களின் விபரங்களும் கூறப்படும்

உதயத்துக்கு இரண்டு பதினொண்டாமிடம் அதிபதி இவர்களும் மேற்படி ஸ்தானங்களிலும் குருதஜன் இவர்கூடி கோசேஷத்திர உச்சமாகவிருக்கில பார்வீக்ஷணிய சம்பந்தங்களின்றியறில் பொன்முதலிய நாணயங்கள் பழமையருமில வைக்கப்பட்டிருக்கிறதென்றும் வெண்கலஞ் செம்புப்பாத்திரங்களிலிருக்கப்படுமென்றும் உச்சசோக்ஷேத்திரமாகில் ஏராளமான பொருளும் இவனுக்கடைவன் நட்புமித்திரு இடமாகில் இவன்பின்னோர் குடும்பத்தைப்படுமென்றும் பகையாகில் பிரர்கைப்பற்றுகலாகுமென்றும் நீசமாகிற் கரிஉமிமுதலிய சாமான்களுள்ளதேதவிர பொருளிருக்காதென்றும் காணல்வேண்டியது மேற்கூறிய இடம் கிரகம் இவைகளுடனே சூரியன்கூடிற் செம்பு பஞ்சலோகப்பொருளும் சந்திரனாகில் ஈயம் செவ்வாயாகில்செம்பு புதனாகில் பித்தளை குருவாகில் பொன் சுக்கிரனாகில்வெள்ளி சனியாகில் இரும்பு இராகு கேதுவாகில் ஓடு கல செங்கல் என்றும் உச்சமாட்சி நீங்கியகிரகமாயினும் சனிபார்ப்பு குஜனகினும் அந்தவஸ்துக்கள்உபயோகமின்றியும் அந்தரமான மண் கல் சாம்பல் முதலிய உபயோகமில்லாத பொருளாகி விடுமென்றும் அவைகளாற் பலவிருத்தமும் அதிலடையும் பொருட்களை பற்றனுபவிப்பனே யல்லாது இவ்வுடையான் அனுபவிக்க மாட்டானெனக்காண்க.

மேற்கூறியவதிபதிக்கோட்கள் இவர்கள்பகை நீசாதியோராகவிருக்கி லவர்களுக்குக்கூறிய கிரணகாலங்கொண்ட கதிகளிலிவனுக்கு அப்பொருளின்றி பரனனுபவிப்பனென்றும் ஆக்ஷி உச்சம் நட்பானால் அவர்களுக்கேற்பட்ட கிரணகால வருடங்களில் கர்த்தாவாவது வம்மசபுத்திரர் முதலியோராவது அனுபவிப்பார்களெனக்காண்க.

———

பெண்களின் ஜெனன இருதுபலன்கள்.

பொதுலக்ஷணம்.

வசனம்.

பெண்களின் ஜாதகங்களுக்கு பார்க்கவேண்டிய முறைமையென்னவெனில் சுக்கிரனுடையவுஞ் சந்திரனுடையவும் ஜெனன இலக்கணத்தினுடையவும் பலாபலன்களை முதன்மையாகப்பார்க்கவேண்டுவனவாம்.

பெண்களின் உருவமும் வடிவமும் பார்க்கவேண்டில் ஜென்மலக்கினத்தையும் சந்திரலக்கினத்தையுங் கொண்டும் ஜெனனலக்கினத்திற்கு ஏழாமிடத்தைக்கொண்டும் அவளுடைய குணாகுணங்களையும் புருஷனுடைய நற்குணங்களையும் பார்க்கவேண்டும்.

எட்டாமிடத்தைக்கொண்டு அமங்கிலியத்துவத்தையும் ஏழாமிடத்தினற் சுகதுக்கத்தையும் பர்த்தாவினுடைய பலாபலன்களையும் இலக்கினத்தைக்கொண்டு அழகுசிகளையும் ஒன்பதாமிடத்தைக்கொண்டு புத்திரபாவ விருத்திமுதலானவைகளையுங் கூறவேண்டுவதாகுமென வறிக.

வாரபலாபலன்களாவன.

ஞாயற்றுக்கிழமையின் பலன்.

ஞாயிறில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள் உஷ்ண சரீரமுடையவளாகியுங் காமாதுரியாகிக் கணவனுக்குந் தனக்குங் கீர்த்தியுடையவளாகியும் புத்திசாலியாகி படபடக்கவாக்குடையவளாய் தேகம் மாநிறமுடையவளாகியும் சரீரத்திற்சிரசு முக மண்டலங்களின்மேலும் நேத்திரத்தின்மேலும் ஓர் மருவடு வடையாளமுடையவளாவள், முகனுங்கையும் அற்பகஷ்டம் வருந்து தலையுடையவள் புத்திரதோஷமுண்டாகும் பின்விருத்தி யடைவாளென வறிக.

திங்கட்கிழமையின் பலன்.

திங்கட்கிழமையில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள்காந்தியானசரீரமும் உரோமக்ஷியும் யார்பேரினுமபிமானி

யாகியும் கணவன்வகை சுகபத்தையும் இவள்சென்றபின் கணவனு
க்குச் சிலயோகவிருத்திகளையுங் கொடுக்கும் தேகதிடமடையாள்
கபஜெல உரோகபாதைகள் சிலசிலகாலங்களி லறிஷ்டிக்கு மென்
றும் மெ ண்பிர்ஸஜுயதிகமாயும் புத்திரசந்ததிதோஷமடைவள் என்
றும பின்விருத்தி அற்பமாகும் வெண்மைநிறமான ஆபரணம்அல
ங்காரப்பிரியமும் வாசனைகளி இவைகளாலுல்லாச. முடையவளா
வாளெனவறிக.

செவ்வாய்க்கிழமையின்பலன்.

செவ்வாய்க்கிழமையில் ஜெனனமாகினும் அல்லது இருதுவா
கினும் அவள்வர்ணச்சேலையிற் பக்ஷமுடையவள், ஜெனித்தவிடத்
தில் குடும்பசுகமும் பொருள்சேகமடைவள். கோபமுடையவள்
மகவுதோஷஞ் சோதரப்பிரசை தோஷமாயினும் அல்பமுடையவ
ளாவள் கணவனுக்குமுன் தரித்திரத்தையும் மத்தியில் சுகபத்தை
யும் மடைகுவளரெனவறிக.

புதன்கிழமையின்பலன்.

புதன்கிழமையில் ஜெனனமாகினும் அல்லதுஇருதுவாகினும்
அவள்இளைப்பானதா அல்பலமான சரீரபோகவிச்சையே பொரு
ந்தியவள் எதிலும்புத்திசாலியாகிக் கல்விமுதலியவாகுதையும்விருத்
தியுமடைவள் தயையாவள் பக்தியுள்ளவள் சம்போகமாகினும்
பின்வயதிற்சுகமடைவள் எவரையும்வாஞ்சிப்பள் மகவுதோஷம்
மாதுரு பர்த்துருவழி கஷ்டமும பெரியோரபிமானியும் பிரந்த
வம்மிஷப் சுகமும் உள்ளவளெனவறிக.

வியாழக்கிழமையின்பலன்.

வியாழக்கிழமையில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகி
னும் அவள்கணவனுலுந் தன்னாலும் யோகத்தையும் கல்விமுதலிய
புத்தியுடையவள் அற்பரோகசரீரியாகவும் தேவதாபக்திகளும்மத்
தியகாலம் புத்திரலாபம் அல்லதுதனத்தால் வருந்திப் பின்னடை
வள், பூஷணமுடையவள் உயறமானவடிவமும் ஆகிருதியும் சிகப்
பிலமானிறமும் உடையவளாகு மெனவறிக.

வெள்ளிக்கிழமையின்பலன்

வெள்ளிக்கிழமையில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகி
னும் அவள்பர்த்தாவின் ரோகத்தையும் தனவஸ்திராபரணபூஷண

முடையவளாகி லீலாவிநோதியாகியும் அதிகப்புத்திரவதியாகி செல்வத்தை யுடையவளாகியும் ரூபவதியாகியும் வாழ்வாளென வறிக.

சனிக்கிழமையில் பலன்.

சனிக்கிழமையில் ஜெனனமாகினும் அல்லதுஇருதுவாகினும் அவள்மந்தபுத்தியும் தேஜசாபாதாகி தேகரோகமுடையவள் புத்திர ரெவரிஷ்டமுடையவள் கணவனுக்குமரிஷ்டம குடும்பநஷ்டத்தையுங் காணுவாளெனவறிக.

———

இருதுமாத பலன்கள்.

சித்திரைமாதம்	இருதுவாகின்	புருஷனுக்காகாவாம்
வைகாசிமாதம்	இருதுவாகின்	சுகமுடையவள்
ஆனிமாதம்	இருதுவாகின்	புத்திருண்டாம
ஆடிமாதம்	இருதுவாகின்	பலபுருஷரையிச்சிப்பள்
ஆவணிமாதம்	இருதுவாகின்	புத்திரசுபத்துண்டாம்
புரட்டாசிமாதம்	இருதுவாகின்	பதிவிரதையாயிருப்பள்
அர்ப்பசிமாதம்	இருதுவாகின்	பிள்ளைகளைப்பெற்று விதவையாவள்
கார்த்திகைமாதம்	இருதுவாகின்	பலரையுமிச்சிப்பாள் கோபியாகுவள்
மார்கழிமாதம்	இருதுவாகின்	பொருளும், புத்திரர்களு முண்டாகிவாழ்வள்
தைமாதம்	இருதுவாகின்	புண்ணியவதியாகவிருப்பள்
மாசிமாதம்	இருதுவாகின்	தனதான்யமுடையவளாகவாழ்குவள்
பங்குனிமாதம்	இருதுவாகின்	மக்களைப்பெற்று ஆயுசுவிருத்தியடைவள்

———

திதியின் பலன்களாவன.

பிரதமையில்	இருதுவாகில்	சோரமுடையவள்
துதியையில்	,,	அழகுடையள்
திருதியையில்	,,	இன்பமுடையள்
சதுர்த்தியில்	,,	சத்துருவுடையள்
பஞ்சமியில்	,,	புத்திரரைப்பெருவள்
சஷ்டியில்	,,	ஆசாரமுடையவள்
சப்தமியில்	,,	புத்திரரைப்பெருவள்
அஷ்டமியில்	,,	பெற்றிழப்பள்
நவமியில்	,,	கிலேசமுடையள்
தசமியில்	,,	தருமஞ்செய்வள்
ஏகாதசியில்	,,	பலமுடையள்
துவாதசியில்	,,	கோபமுடையள்
திரையோதசியில்	,,	தற்புகழ்ச்சியுடையள்
சதுர்த்தசியில்	,,	சோரம்போவள்
பௌர்ணமியில்	,,	இடருடையள்
அமாவாசையில்	,,	தரித்திரமுடையாளாம்

நக்ஷத்திரப் பலன்களாவன.

அசுவினியின் பலன்.

அசுபதிநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள் அன்னியருக்கு உதவிசெய்வாள். குறைசீரி பாவத்தொழிற்செய்வள். மத்திபவயதிலேயே பர்த்தாவுக்குத் தோஷமடைவள் புத்திரதோஷமாவள் மெல்லீசானசரீரமுடையவள் துர்க்குணியாவள் முன்பொருளையும் சௌகர்யத்தையும விவாதர்தாறரேற்பளெனவறிக.

பரணியின் பலன்.

பரணிநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும், அல்லது இருதுவாகினும் அவள்சரீரகனமுடையவள் மகவுதோஷமுண்டு மகவுவிருத்தி பெரின் பர்த்தாவைப் பாலியஎவ்வனத்தில் இழப்பன் பலவிதவகங்காரி பலவிதவெண்ணமாவள். முன்கடை பிரபலயோகமாவள். யாவரையும் நிகரின்றி யெண்ணுவாளெனவறிக.

கார்த்திகையின்பலன்.

கார்த்திகைநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும், அல்லது இருதுவாகினும் அவள்தேசகாந்தியுடையவள். புருஷனுக்கு மேலானவதிகாரமும் செல்வமுமுடையவள் தனமுடையவள் குடும்பநஷ்டமும் மரணதுக்கியாவள் உஷ்ணசரீரி தியாகி மோகியாகிப் புத்தியுங்கல்வியும் அல்லதுகல்விமானை இச்சித்தடைவள் சென்றநாண் முதலே வதிகயோகமுடையவள் மகவு அதிகலாபமுடையவளாமெனவறிக

உரோகணியின்பலன்.

உரோகணிநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள்நல்லரூபியாவள் விழியும் மயிரும் அழகுடையவள் உரிசிற்பிரியமாவள் சோபமில்லாள் செல்வமும் தன்குடும்ப வழியாற்பிரபலமடைவள் பின்காலத்திற் தனநஷ்டமடைந்து பின்சுகியாவள் கணவனுக்கு இளையாளாவள் வஸ்திராபரணாலங்காராதி போகியாகி வாழ்வளென்றும் மகவுதோஷமுடையவள் பாற்பாக்கிய முதலிய வாகனமுடையவள் எப்பொழுதும்மேலானவிச்சையுடன் லபிதமடைவளெனவறிக.

மிருகசீரிடத்தின்பலன்.

மிருகசீரிடநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள்புத்திரவதிக லாபமுடையவள் பின் ஆயுள்விருத்தி அற்பமாவள் பர்த்தாவுக்கரிஷ்டமுடையவள். பாற்பாக்கியாதிசெல்வமும் விவாதவழக்குடையவள், தானதருமியாவள். புராணாதிஞானங்கள் கல்விபிரியவதியாவள் சுருண்டமயிரும் முகபிம்பச்சுருக்கவழகுடையவளாவள் பிறந்தவம்சாவழி விருத்தியும் பர்த்தாவுக்கு போகத்தையும் பிரபலிக்கும் போகமுடையவள் சீலமுடையவள் சுகசரீரியா மெனவறிக.

திருவாதிரையின்பலன்.

திருவாதிரைநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும்அல்லதுஇருதுவாகினும் அவள்பர்த்தாவகைநஷ்டமும் பிணியுமடைவள்உரோகி குடும்பப்பகையாவள் வயதாகவயதாகப் பொருள்விருத்தி குன்றினும் பின்சுகமடைவள் கலக்கமுடையக் கிலேசிபுத்திரவிருத்தியில்லாள் சுகமில்லாள் பெண்வழியினுற் சுகமடைவளெனவறிக.

புனர்பூசத்தின்பலன்.

புனர்பூச நக்ஷத்திரத்தில ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள்செல்வமுடையவள் அதிகமோகி பிராணனுங் தனவிருத்தியடைவள் அதிகாரஞ்செய்வள் பெண்மைகளிலதிக் பிரியமுடையவள் சூடுமுதலியவிரணநோயும் விஷநோயுமுடையவள்பிரந்தவழி நஷ்டமடைவள் புத்திரதோஷ முடையவளெனவறிக.

பூசநக்ஷத்திரத்தின்பலன்,

பூசநக்ஷத்திரத்தில்ஜெனனமாகினும் அல்லதுஇருதுவாகினும் அவள் அதிரூபமுடையவள் யாரமேலுமபிரியமடைவள்புத்திவிசாலமுஞ் செல்வமும முகமும் சிரோபாரவழகுவிருத்தியுடையவள் இரண்டென்னும பர்த்தர் பிதுர்வழிகளின் பிரபலவிருத்தியாவள் அனேகவஸ்திராபரண பூஷணமடைவள் சிருவரிச்சையான மகவுடையவள் மத்தியகாலத்திற் றுக்கமுடையாள் முன்னும்பின்னுமானவயதுகளிற் சுகமும் பர்த்தாவுக்குயோகமும் முடையவளெனக் காணல் வேண்டுமெனவறிக,

ஆயிலியத்தின்பலன்.

ஆயிலியநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள் புத்திரவிருத்திக்கிடையாதவள் கோபிசத்துருவுடையாள் குடும்பசலகமும் நஷ்டமும் வம்சக்ஷயமும் மடைவள் தேகவிளைப்பும் பிணிபீடையும கற்பதோஷமும பர்த்தா வாயுள்பீடை நஷ்டமுமுடையவ ளெனவறிக.

மகத்தின்பலன்.

மகநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவ[illegible] லியாதிசேஷ்ய கஷ்டபஷ்முதலிய குடும்ப மரணக்கிலேசதிடசரீரயு குரூரமனமுடையவள் இயாருந் துஞ்சாள் புத்திரவிருத்தியப பர்த்தாவிருத்தியுமுள்ளவள் செல்வக்குறைவுடன் முன்வயதில்வாழ்க்கை பின்சுகமும் தனத்தையும் படைப்பள் சிலநாட் கஷ்டமுஞ் சிலநாட்சுகமுமபெறுவள் மானமற்பமுள்ளவள் மேகநோயமுதலிய உதரபீடையுடையவள். கேவலபாவனையுடையவள் மனவுருதியுள்ளவள் சரீரசாத்ரமும் உயர்ந்த சரீரியாவளெனவறிக

பூரத்தின்பலன்.

பூரநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லதுஇருதுவாகினும் அவள்உயர்சரீரமுமினைத்தவடிவமும்சிவப்புநிறமும் போகசுகியாகியும் மருமணமல்லது அகாலபுத்திர விருத்தியுடையவள். செல்வமுன்னனுபவிததுப்.பின்சிலநாட் கஷ்டமடைவள். பிறந்தகுடும்பசயத்தாற் றுக்கியவாளெனவறிக.

உத்திரத்தின்பலன்.

உத்திரநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும் அவ்லதுஇருதுவாகினும் அவள்பர்த்தூர் வகைநஷ்டமும் குடும்பச்சேதமுப புத்தியீனமும்பெருத்த வ்லது உயர்ந்தசரீரமும அதியோகி மோகியாகியும் தனயோகப் பிரபல வம்சயோகத்தி லுகித்தவளாவள். புத்திரவிருத்தியுடையாள். பர்த்தாவுக்கு இவளாற்செல்வமோங்குந் தருணியாவள் பக்தியுங்குணமு மேலாவாளெனவறிக.

அஸ்தத்தின்பலன்.

அஸ்தநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள்மாணியாவள் உருபவதியுஞ் செல்வமுடையவள் பர்த்தாவிருத்தியடையாள் புத்திரதோஷமும் புருஷகுடும்ப க்ஷயமும் பலவகைவருத்தமடைவள் க்ஷீணசரீரியென்றும்கவலையுடையவளாமெனவறிக.

சித்திரையின்பலன்.

சித்திரைநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லதுஇருதுவாகினும் அவள்பர்த்துர் வம்சாதிக்ஷ்பமுடையவள்வுரோதவாதபுரிவள் கடூரிகோபி பந்துவிரோதியாவள் ஈனகாரியப்பிரவேசியாவள் தரித்திராதிப்பீடையும் முன்சுகமும் பின்துக்கமடைவள் ரூபக்குறையுடையவளெனவறிக.

சுவாதியின் பலன்.

சுவாதிநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லதுஇருதுவாகினும் அவள்உருபலாவண்யகாந்தி சந்தோஷிதமுடையவள் தியாகி புத்திரநஷ்டமுடைவள் தோஷமுள்ளவள் அதிகாரஞ்செய்யுங்குணத்தள் மேலாகிவாள்வள் புருஷனுக்குவதிகக் கீர்த்தியுஞ் செல்வமு

மாவள் சுகசரீரி தெய்வபக்தியும் ஞானமுடையவள் அதிகவேலைக ளிலும் முயற்சிகளிலும் பிரியமு மேன்மையுடையவ ளெனவறிக.

விசாகத்தின்பலன்.

விசாகநக்ஷத்திரத்தில ஜெனனமாகினும் அல்லது இருதுவாகி னும் அவள் அநேக மகவுயோகமுஞ் செல்வமுபமுடையவள் செல் விஸ்திரபுத்தியுடையவள் வாக்குவிருத்தியும்ஸ்திரமும்அன்புமுடை யவளாவள் பர்த்தாவிற்கனுகூலி மிகவும்பிரபலயோக மடைவளெ னவறிக.

அனுஷத்தின்பலன்.

அனுஷநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும்அல்லதுஇருதுவாகி னும் அவள்பர்த்தாவுக்கு நஷ்டமுடையவள் தரித்திரமும் பகையு டையவள் தேகரோகமாவள்புத்திரநஷ்டமுண்டாகும் குள்ளமான சரீரமுடையவளாகுமெனவறிக,

கேட்டையின் பலன்.

கேட்டைநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும்அல்லதுஇருதுவா கினும அவள்வபசக்ஷயமும் பர்த்தாவரிஷ்டதோஷமும் வைதவ்வி யமடைவள் உரோகமுடையவள் கோபி ஈனமுடையவளாகினும் யோகமுடையவளாக முனவயதிலடைந்து பின்தரித்திரமடைவள் உருபக்குறையுடன் வாழ்வாளெனவறிக.

மூலத்தின் பலன்.

மூலநக்ஷத்திரத்தில ஜெனனமாகினும் அல்லதுஇருதுவாகினும் அவள்தேககாந்தியுடையவள் புத்திரவிருத்தியுஞ்செல்வமுடையவ ளாவள் சிலகாலம்வருந்தியும் பிணிமுகலிய புத்திரதோஷமுடைய வள்கணவனுக்கும் அவர்களின்பகைக்குந துக்காதிபாதியமடை வள் மத்தியகாலத்தில மங்கிலியகுறைவை யடைவா ளெனவறிக.

பூராடத்தின்பலன்,

பூராடநக்ஷத்திரத்தில ஜெனனமாகினும் அல்லதுஇருதுவாகி னும அவள்பாலமுதலிய பாக்கியமுஞ் செல்வமுடையவள் தலைவ னைகநாசமும பர்த்தாவகைப பிரபலமடைவள் மிகவும்அதிகாரியா

வள் அதிபோகமோகி உருபவதியும் ஸ்தூலசரீரமுடையவள் தரு
மப்பிரிய முடையவளாவா ளெனவறிக.

உத்திராடத்தின் பலன்.

உத்திராடநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லது இருது
வாகினும் அவள் தயைமுதலிய புத்திகல்வியறியுங் குணமுடையவள்
செல்வப்பெருக்கு மனப்பெருக்குமத்திபத்திலடைவள் அரசி அல்
லது மன்னரைப்போலொற்றவர்களை மணப்பள் தியாகியாகியும்
எவரையும் காப்பாற்றுங்குணமும் நல்லுருவமும மயிர்சுருண்டிருக்
கும் விழிசக்ஷண விலாசமுடையவ ளெனவறிக

திருவோணத்தின் பலன்.

திருவோணநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லதுஇருது
வாகினும் அவள்தேவதாபக்தியும புதுகிரமும் உயரமானசரீரமும்
தியாகியுமபெருவள் வஸ்திராபரணதிரவியமேல் பிரியமுடையவ
ள் வாக்குவிருதியும் பலதொழிலுஞ்செய்யப் புத்தியுடையவள்
கலவிமேன்மையிற் கனமுடையவள் சிலகாலஞ்செல்வமும் சிலகா
லஞ் செல்வக்குறைவைப் பொருந்துவள் சஞ்சாரியெனவறிக.

அவிட்டத்தின் பலன்.

அவிட்டநக்ஷத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லதுஇருதுவா
கினும் அவள்ஜெனனவிடத்தாற் தனயோகமடைவள் செல்வமும்
பொருளும் பாலியத்தனுபவித்துஞ் சிலகாலஞ்சுகமடைந்துஞ் சில
காலம்வருந்திஇளைப்பள் பர்த்தாமேல பிரியஞ்சிலகாற் றேனறும்
பிணியற்பமுடையவள் மகவைப்பெருவள் ஆகினும்விருத்தியடை
யாத புத்திரக்கிலேச மாவாளெனவறிக.

சதயத்தின் பலன்.

சதயநட்சத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகி
னும் அவள்புத்திரதோஷம் கணவனுக்கு அடங்கிநடக்காள் மாச்
சரியமும முனகரித்திரத்தையுமனுபவிப்பள் குடும்பவபிவிருத்தி
க்குறைவும் மோகிபோகியாவள் செல்வமுஞ்சுகத்தையும் பின்வய
திலனுபவிப்பள் கருமைகலர்ந்த மாநிறமானசரீரமும் கீர்த்தியும்
பெற்று வாழ்வளெனவறிக.

பூரட்டாதியின்பலன்.

பூரட்டாதிநட்சத்திரத்தில் ஜெனனமாகினும் அல்லதுஇருதுவாகினும் அவள்பார்பபாக்கியமுங் குடும்பந்தாய்வழிச் செல்வமுடையவள் மங்கிலிபவிருத்தியும் புத்திரலாபமும் பிரபலமாக வடையவள் தனயோகசாலியாவள் யாவருக்குமேலான புத்தியுங் கல்விமேன்மையிற் பிரியமுடையவள் வஸ்திராபரண பூஷணமுடையவளெனவறிக.

உத்திரட்டாதியின் பலன்.

உத்திரட்டாதிநட்சத்திரத்தில் ஜெனனமாகினும்அல்லதுஇருதுவாகினும் அவள்சமசரீரி தேககாந்தியுடையவள் பாலியங்களிற் செல்வமும் ஜனனஸ்தானத்திலும் தனலாபமுஞ்செல்வமும் பார்பாக்கியமுடையவள் புத்திரவிருத்தியைப்பெறுவள் தான்பர்த்தர் குடும்பஞ்சேர்ந்தும் பின்வயதிலும் பலவிதமான கஷ்டநஷ்டசோகமடைவள் செல்வங்குன்றுதலாற் சிலநாள்வருந்தி யின்பமெனவறிக.

இரேவதியின்பலன்

இரேவதிநட்சத்திரத்தில் ஜெனனமாகினும்அல்லதுஇருதுவாகினும் அவள்திவ்விய பாக்கியமுடையவள் செல்வத்தினால் மகிழ்ந்து தைரியமும் உருபலாவணிய சரீரபெலனும் காந்தியான மோகனவதியாவள் பர்த்தாவுக்கதிக இராஜயோகமும்தனலாபமுமசேரும் புத்திரரைப்பெற்று சுகமாகவாழ்வள் என மேலோர் கூறுகின்றனரென்றறிக.

கவி.

உத்திராட மாதியாக வாறுமாறு முத்தமம்
பித்தனார் பிறந்தநாளும் பின்னையாறு மத்திமம்
அத்தனோடு சித்திரை யமர்ந்தவாறு குன்றிடும்
மற்றோராறு நாள்கடமயின் மங்கைநா விழப்பளே.

இலக்கின பலன்களாவன.

மேஷலக்கினபலன்

மேஷலக்கினத்தில் ஜனனமாகினும் அல்லதுஇருதுவாகினும் அவள்சிகப்பு புஷ்டிமையான தேகவருணமுஞ் சமசரீர முடையவள் குலத்துக்கு மூத்தோளாவள் அனேகமானமன்னர் பூஜிதம்உடையவள் புத்திரதோஷமடைவள் பலவிதமானசெல்வபோகமுண்டாமெனவறிக

இரஷபலக்கினபலன்

இரஷபவிலக்கினத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள்புத்திவிசாலமும் கல்விமேற்பிரியமுளவள் அநேகதன வஸ்திராபரணாதி செல்வமுடையவள் குடும்பமேன்மையுஞ் சுகுணவதியாகியும் பிரபலயெண்ண முடையவளாவளென்றும் புத்திரக் குறைவையடைவள் சேகதிட உல்லாசியாமெனவறிக.

மிதுனவிலக்கின பலன்.

மிதுனவிலக்கினத்தில் ஜெனனமாகினும் அல்லதுஇருதுவாகினும் அவள்லட்சணவதியாகியும் போகியாகியும் பெண்பிரஜை அதிகமுடையவள் மத்தியகாலங்களில் பர்த்தர் பீடை யுடையவள் யோகமடைவளெனவறிக.

கடகவிலக்கினத்தின்பலன்.

கடகவிலக்கினத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள்சஞ்சாரி மிருதுவாக்குங் கல்வியுடையவள் மிகவும் பிரபலசெல்வமும் யோகமுமுடையவள் புத்திரவிருத்தி யுடையவளாவள் வஸ்திராபரண முடையவளாவாளெனவறிக.

சிம்மவிலக்கினபலன்.

சிம்மவிலக்கினத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள்திடபுத்தியுடையவள் பெரியோர்பக்தியுஞ் சிரத்தையுமுடையவள் மேலான உத்தியோகபக்திசித்தியும் கல்வியிற் பிரியவாஞ்சையும்அடைவள் புத்திரதோஷமடைவள் பர்த்தாவுக்கு வியாதியுண்டாகிச் சுகமடைவளெனவறிக.

கன்னியாலக்கின பலன்.

கன்னியாலக்கினத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள் தெய்வ பக்தியுள்ளவள் செல்வத்துடன் யோகமுமுள்ளவள் சுகமும் பிரபலயோகமுமுடையவள் கலவித்திறமையும் புத்தியு முடையவள் ஸ்திரீ ஜோதிசலவமும் அநேகர்களின் அனுகூலதைகையும் பெறுவள் அதிகாரமும் பிரபலமுமுடையவள் பர்த்தாவைச் சேருவளென வறிக.

துலாலக்கின பலன்.

துலாலக்கினத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள் எவ்விதத்தொழிலும் கைத்தொழிலும் விவேகமுடையவள் பர்த்தா புத்திரசோதமுடையவள் குடும்ப தாயமியாவள் காலதாமத புத்தியுடையவள் பின் சரித்திரமடைவளென வறிக.

விருட்சிக இலக்கின பலன்.

விருட்சிக இலக்கினத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள் டுஞ்சொர்ப்படி புருஷனுக்கு கொள்கருமைஉருபமும் பொருந்தியவள் புத்திரகஷ்டமுண்டு பர்த்தாவகை யழிவு பொருட்டுனமுசனும் பயங்காயிலலாதவள் குரூபியாவள் அதிகமாகச் சுகமடைய மாட்டாளென வறிக.

தனுசுவிலக்கின பலன்.

தனுசுவிலக்கினத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள் முகவசீகரமும் பாவியபெலமுடையாரீரி வஞ்சகமுமுடையவள் கணர்ச்சிக் தீமை லதிசுக்கநத்தும் கனபோகபிரபலமுடையவள் இராஜயோகமாகி வாழ்வள் ஆண்டுவிக்குத் தடும்பதனமுடையவள் புத்திரவிருத்தியும் பெற்றிருப்பள் பின்பிரபல முண்டாகுமென வறிக.

மகரவிலக்கின பலன்

மகரவிலக்கினத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள் பர்த்தாவுக்குக் குனக்குந்தகமில்லாள் குடும்பபகையுடையவள் மனத்துட்கிலேசமுடையவள் தேகத்திற்பிணியாவிளைப்பள் தேகவர்ணதைகளாலுந் தேசபாசை சிலகாலத்தி லுண்டாகும் யோகமுடையவள் ஜெனன குடும்ப சரித்திரமும் பிரஜாவிருத்தியும்

முள்ளாள் கருமைபொதுநிறத்துடையாள் சமசரீரியாவள் சிலகாலந் தரித்திரத்தையுடைய ள் அமங்கிலியாகி மதிப்பளெனவறிக

கும்பவிலக்கின பலன்

கும்பவிலக்கினத்தில் ஜெனனமாகினும் அல்லது இருதுவாகினும் அவள் தேகதிடமுந் தரித்திரமுமுடையவள் அதிபோகமோகியாவள் செலவமு பாக்கியமும் தாமிசகுணமுடையவள் தேகங்கருமை அல்லதுபுதுநிறமுடையவள் கிலேசியாகி புத்திரால் மனத்துயரடைவளெனவறிக

மீனவிலக்கின பலன்.

மீனவிலக்கினத்தில் ஜெனனமாகினும் அல்லதுஇருதுவாகினும் அவள் சுடும்பவிருத்தியுடையவள் செல்வமும்உடமையும் ஆபரணதிகளமும் மேலானபர்த்தர்சுகமும் மிகவுமேன்மையுடையவள் பிதுர்குடும்பவிருத்தியும் கணவன்வழியறிவுமுடையவள் பலவிதபுத்திகளினுஞ் சிரேஷ்டமுடையவளென்றும் சுகத்தை பின்னடைவள் புத்திரலாபமதிக விருத்தியடைவளென்றும்அவ்வழித்துக்கப் பலன்களையும் அடைவள்எனக் காணவேண்டும்.

ஆருடந்திக்கு அறியும் வகை.

கிழக்கு	வெள்ளைப்புடவை	சோரம்போவள்	பிள்ளை 7
தென்கிழக்கு	கருப்புப்புடவை	,,	,, 1
தெற்கு	நீலப்புடவை	மலடியாகவிருப்பாள்	
தென்மேற்கு	வெள்ளைப்புடவை	உரோகி	பிள்ளை 4
மேற்கு	அழுக்குப்புடவை	நல்லது	,, 6
வடமேற்கு	மஞ்சள்கலந்த சிகப்புபுடவைசக்களத்தியுடையவள்		பிள்ளை 2
வடக்கு	அவரைவர்னப்புடவை	செல்வமுண்டு	
வடகிழக்கு	நல்லபுடவை	தரித்திரம்	,, 10

இருதுசாந்தி.

ஸ்திரீ ருதுவானதிதிவார நக்ஷத்திரயோககரண லக்கினகிரகதோஷங்கள் நிவர்த்தியாகும்பொருட்டுக் கமதம வருணங்களுக்கு விதிவிதிப்படி இருதுசாந்திசெய்து பின்பு கருப்பாதானஞ் செய்ய

வேண்டும் விவாகத்திற்குமுன் ருதுவானஸ்திரீகளுக்குவிவாகமான பின் ருதுசாந்திசெய்து கருப்பாதானஞ் செய்யவேண்டும்

ஸ்திரீபுருஷர்களுடைய ஜன்மநக்ஷத்திரங்களுக்கு 7-தாநக்ஷத்திரங்களும் 8-வதுராசியில் சந்திரனிருக்குமநட்சத்திரங்களுமதிதிகளில சஷ்டி அஷ்டமி ஏகாதசி சதுர்த்தசி பூர்ணை அமாவாசியை நட்சத்திரங்களில அசுவனி பரணி கிருத்திகை ஆயில்யம் மகம பூரம் கேட்டை ரேவதி யோகங்களில் வியதிபாதம வைதிருதி இலக்கனங்களில் விருஷபம் கடகம கன்னி விருச்சிகம் மகரம மீனம்இவைகள் அல்லாதக் காலங்களில் சுபம்.

சாதகப்படலம்.

இலக்கினபாவகம்.

ஓர்பிள்ளைஜெனனகாலத்து இலக்கினத்திற்குடையோனும்வாக்குஸ்தானாதிபதியும் 11-ஆமிடத்திற்கதிபனும் இந்தமூன்று கிரகங்களுங்கூடியிருக்க ஜாதகமானவன் திரவியவானாகுவன் வாக்குஸ்தானாதிபதியும் 11-ஆமிடத்தோனுங்கூடி 11-ஆமிடத்திலிருக்க ஆட்சி உச்சமாகவிருக்க தனவந்தனாகுவனெனவறிக.

ஜென்மம்வாக்கோன் குருவாகவிருக்க அவருடன் 11-ஆமிடத்ததிபன்கூடி ஜெனமவிராசியில்லிருக்க குடும்பஸ்தானத்தில் ஜென்மாதிபதியிருக்க அம்மனைநட்புவீடாகவிருக்க ஜாதகமானவன் அரசர்க்கரசராய் யிருந்து திரவியந்தேடுவானெனவறிக.

ஜென்மாதிபதி வாக்குஸ்தானமாகவிருக்க பெலம்பெறஅல்லது நட்பாட்சியுச்சஸ்தானமேற ஜாதகமானவன் தன்னுடைய ஆயுள் பரியந்தம் குறைவில்லாத செல்வமுடன் சேடியர்களோடுதனமனையில் வாழ்துவானெனவறிக

இரெண்டாம்பாவகம்.

ஓர்பிள்ளைஜெனனகாலத்து வாக்குஸ்தானாதிபதி வியாழனுடன்கூடியிறக 4-9-11 இந்த ஸ்தானாதிபதிகள் கேந்திரகோணமேறியிருக்க ஜாதகமானவன இலட்சந்திரவியந்தேடி சுகமுடன் வாழ்ந்திருப்பனெனவறிக

இலக்கினாதிபதி கேந்திர ஸ்தானமேறியிருக்க 4-5-9 இந்த ஸ்தானங்களுக்குடையவர் கேந்திரகோணமாகவிருக்க ஜாதகமானவன் கீர்த்திவானாய்த் திரவியந்தேடி வாழ்துவானெனவறிக.

ஓரைக்குடையோனும் வாக்குஸ்தானாதிபதியும் 11-ஆமிடத்தோனும 9-10-க்குடையவனும இவர்கள் உச்சவீடு பெற்று நிற்க ஜாதகமானவன நானாவித சம்பத்துள்ளவனாய் திவ்விய ஞானசகிதனும் அரசனாக வாழ்குவனென்றறிக

ஜென்மபனும 4-10-க்குடைய கோனும் கேந்திரமேறி நிற்க ஜாதகமானவன கீர்த்திமானாய் வாழ்குவனென்றறிக

வாக்குஸ்தானாதிபதி பாபியாக இலக்கினாதிபதி நீசனாயிருக்க ஜாதகமானவன மிடியனாகியும் பாபியாகியும் குலயீனமுடையவனாகியும யாவரு மிகவாழ்வனென்றறிக.

பாபக்கிரகங்கள் உடலையும்உயிரையும் பற்றிநிற்க நீசர்கள் அவரைபார்க்க ஜாதகமானவன் தன் குலம நாசமாகியும் அவகேடான மரணஞ் சம்பவிக்குமெனவறிக.

இலக்கினத்தினும 2-8-ஆந்தஸ்தானங்களில் பாபக்கிரகங்களிருக்க அவரைசுபக்கிரகங்கள் பார்க்க ஜாதகமானவனுக்கு ஆயுசு ஸ்திரமாகும செல்வங்கெடும் தகப்பனுக்கு அழிவுண்டாகும் சிறு அதனமுண்டாமெனவறிக.

மூன்றும்பாவகம்.

11-ஆமிடத்தில் சூரியன்நிற்க சகோதரஸ்தானமாகிய 3-ஆமிடத்தில் தீக்கோள்கள்சேர்ந்துநிற்க ஜாதகனுக்கு சகோதர மூத்தசகோதரமுண்டு சரவிராசியில சனியுடன செவ்வாய் 3-ஆமிடத்தில் நிற்க அவரை தீக்கோள்நோக்கில் இளையசகோதரமுண்டாமெனவறிக

12-ஆமிடத் ததிபன் 6-8-12 இந்தஸ்தானங்களில் நிற்கினும் அல்லதுபாபர்களுடன்கூடி பகை நீசஸ்தானங்களில நிற்க ஜாதகமானவனுக்கும முன்பின்னும் சகோதரமில்லையா மெனவறிக

நான்காம்பாவகம்.

துலாவிராசியில் 4-ஆமிடத்ததிபன் நிற்க சந்திரன் கேந்திர கோணமாக நிற்கினும அல்லது சுபக்கிரகங்களுடன் கூடிநிற்கினும் ஜாதகனுக்கு நற்குணமுடைய தாயார் சுகமும் பந்துமும வித்தைப் பலிதமாகும வாகனம் பூமி கிடைக்கும் கீர்த்தியுண்டாகு மென வறிக.

4-ஆமிடத்தோன் 7-ஆமிடத்தோன் 9-ஆமிடத்தோன் 10-ஆமிடத்தோன் 11-மிடத்தோன இவர்கள் கேந்திர திரிகோணம் அல்லது நட்பாட்சியுச்சஸ்தானமிவைகளிலேனும் நிற்க ஜாதகமானவனுக்கு பெரிய உத்தியோகமுங் கிடைப்பதுடன் அரசர்களால் சிவிகைதானம் பெறுகுவானெனவறிக.

4-5-9 இந்தஸ்தானாதிபதிகள் கேந்திரகோணமேறி நிற்க அல்லது ஆட்சியுச்சம்பெற நோக்குதல்செய்ய ஜாதகமானவனுக்குசிவிகை யானை குதிரை சாமரம் இவைகள்பெறுதும் மாதர்களின்மேல் மோகமுடையவன் தமிழ் பிரியனெனவறிக.

4-11-க்குடையோனும் இலக்கினாதிபதியும் 9-ஆமிடத்தோனும் தனஸ்தானாதிபதியிவர்கள் 6-8-12-இந்தஸ்தானங்களிலேறி நிற்க பகைநீசமாகியும் அஸ்தமனமாகவிருக்க ஜாதகமானவன்மிடியன் பொய்சொல்குவன் யாதொரு சுகமுமில்லாதானுமெனவறிக.

ஐந்தாம்பாவகம்-

5-க்குடையோனும் வாக்குஸ்தானாதிபதியும் சுருதிமால்மறையோன இவர்கள்தோனறில் நட்பாட்சியுச்சம கேந்திரதிரிகோணங்களில்நிற்கினும் அல்லதுசுபருடன்சேரினும் நோக்கினும் ஜாதகமானவன் ஜெகத்தின்மீது களத்திரபுத்திர பவுத்திரர்களின் யோகமுண்டாகி வாழ்குவனெனவறிக.

வாக்குஸ்தானாதிபதி வியாழனுடன்கூடிநிற்க, சுக்கிரன் புதன் சந்திரன் இவர்கள்நண்ணின ஜாதகமானவன் பொன்பொருள்உடைத்தாய் அடிமையுங் கீர்த்தியுமுடையவனுகியும் யோகவானுகியும் வாழ்குவானெனவறிக,

வாக்குஸ்தானாதிபதியும் புதனுங்கூடி கேந்திர திரிகோணங்களில்நிற்க ஆட்சியுச்சம்பெற ஜாதகமானவன வித்தியாளுகி நாலுவேதம் ஆறுசாஸ்திரமும் சொல்லவும் வாசிக்கவும் வல்லவனுகி கணிதநூற் புலவனுதுமெனவறிக

மாதுருஸ்தானாதிபதியும் மற்றையகிரகங்களில் சிலதுங்கூடி வாக்குஸ்தானத்திலநிற்க பாபக்கிரகங்களுடனசேர்ந்து பலகீனஸ்தானங்களிலநிற்க ஜாதகமானவன நாளு பிணிகொண்டவனுகவிருப்பன் மக்கள்நசிக்குமபோகும் மிடியனாகி சாகுமளவும் யிரந்துண்பானெனவறிக.

5-ஆமிடத்தோனும் வியாழனுங்கூடி கட்பாட்சி பச்சத்திலே னும் கேந்திரதிரிகோணங்களிலேனும் சேர்ந்திருக்க ஜாதகமான வன் பட்டுவஸ்திரங்கள் கட்டுபவனுமியும் பரிமளதிரவியங்களின் பிரியமுள்ளவனுமியும் தன்னுடையதுவக தீற்சசையை அ[illegible] வனெனவறிக.

புதன் சந்திரன் சுக்கிரன் இவர்கள் கேந்திரதிரிகோணமேறியிருக்க ஜாதகமானவன் ஞானி பலகலையோர்ந்த வல்லவன் புத்திமானிருக்கி யோகி புலவனுக வாழ்குவானெனவறிக.

ஆறாம்பாவகம்.

6-ஆமிடத்திற்குடையோனும் வியாழனும் இலக்கினாதிபதியும் இவர்கள் 3-12-இந்தஸ்தானங்களில் திக்கோடு கூடியிருக்க ஜாதகமானவன் அல்லல்படுகுவன் ரோகமுடையவன் சத்துருக்களா லும் ஆயுதங்களினாலும் அக்கினியாலும் வருத்தப்படுகுவனென்றும் சொல்லி யெனவறிக.

6-ஆமிடத்ததிபன் பாபனுக பாபருடன்கூடியிருக்க ஜாதகமா னவன் மரணமாகுவனெனவறிக.

ஏழாம்பாவகம்.

ஏழாமிடத்ததிபன் சுபனுகவிருக்க அந்தானுதிபதிசுபனுமாகி [illegible] அவர்களைபார்வையுற 3-ஆமிடம் சுத்தமாகவிருக்க சாதகமான வனுக்கு களத்திரயோகமுண்டாம் ஆடையாபரணம் வீடு கிடைக் கும் புத்திரயோகமுமெனவறிக.

ஏழாமிடத்தோனசுபனுகி சுபரோடேகூடி கேந்திர திரிகோ ணமேறியிருக்க திக்கோர்கள் பார்க்க ஜாதகமானவனுக்கு களத் திரமுண்டாகி வாழ்வுபெறுகிறதினுல களத்திரம் தனதுடைய [illegible] சகலகாரியமு முடிப்பனெனவறிக.

சுபர் [illegible] கேந்திரத்திருக்க சந்திரனசுக்கிரனும [illegible] திரோணியிருக்க 7-ஆமிடமும் 8-ஆமிடமும் சுத்தமாகவிருக்க சாதகமானவன் அக்கியாக்முடையவன் பெரியோர்களின் சேர்க் கை குருபத்தியுள்ளவன் குறையாதவாழ்வுடன் புத்திரனிருக்கி புத்திரருடனெனவறிக.

[illegible]ராசியில் சுக்கிரனிருக்க 7-ஆமிடத்ததிபன் 8-12-இந்த ஸ்தானங்களிலிருக்க அவனைப் பாபக்கிரகம்பார்க்க மனைவியற்றவ

க்கங்களின் இவ்விதப்பட்ட சாதகமானவனுடைய பெண்டீர்க்கு [illegible] புண்டாய [illegible] உடையவனாகும் [illegible] மென்றறிக.

அட்டமஸ்தானம்.

அட்டமஸ்தானத்தில் [illegible] சுக்கிரன இவர்கள் சேர்ந்திருக்கப்பெற்றிருக்க, [illegible] சாதகமானவனுக்கு ஆயுசுப்பூரண [illegible] மென்றறிக

அட்டமஸ்தானமும் சனியும் பாபருடன்கூடி 6-8-12 இந்த ஸ்தானங்களிலிருக்க சுபக்கிரகங்கள் பாராதிருக்க சாதகமானவனுக்கு அற்பாயுசாகும் 6-8-ல் புதன் சேர்ந்திருக்கில் உடனே மரணமாகுமென்றறிக

சூரியன் குரு சனி இவர்கள் 8-ஆமிடமாகவிருக்க [illegible] ஸ்தானத்தில் [illegible] சாதகமானவனுக்கு அற்பாயுளாகும் [illegible] வயதில் மரணமாவானென்றறிக.

[illegible] இந்தஸ்தானங்களில் சூரியன் குரு பாம்புகள் சனி இவர்கள் [illegible] சாதகனுக்கு ஆயிசு குறைவாகும் 18 வயதின்மேல் [illegible] மென்றறிக

[illegible] சனிசேர்ந்து [illegible] சாதகமானவனுக்கு தீர்க்காயுசுண்டாமென்றறிக

ஒன்பதாம்பாவகம்.

சுக்கிரன் [illegible] சாதகமானவன் [illegible] வாழ்வானென்றறிக

[illegible] 9-ஆமிடத்தோன் [illegible] சாதகமானவன் [illegible] வாழ்வானென்றறிக

[illegible] 3-11 - இந்த [illegible] ஸ்தானங்களிலிருக்க சாதகமானவன் [illegible] கீர்த்தியுடையவனாய் வாழ்வானென்றறிக

[illegible]

[illegible] அத்தானத்திபன பாபனுக்குரிய [illegible] சாதகமானவனுடைய [illegible] 6-9-12 இந்தவயதில [illegible] மென்றறிக.

கன்னி மீனம் மிதுனம் சிங்கம் தனுசு கும்பம் இந்த [illegible] சாதகமானவன் [illegible]

ப்போல் ஆனைசேனை பரிவாரங்களுடன் இராஜயோகமுண்டா
வாழ்குவானென்றறிக

பத்தாம்பாவகம்,

இலக்கினத்தின் 4-7-10 இடங்களில் சந்திரன்நிற்க,
வரை சுக்கிரன்வியாழன் இவர்கள் பார்க்கப்படசாதகமானவ
எக்காலமும் மன்னனுக்காவாழ்குவன் வேதியர்களுக்குப் பிரியமு
ளவனென்றறிக.

பதினோராம்பாவகம்

இலாபாதிபதியேறிய அங்கிசாதிபதிகனஸ்கானமேறி நிற்
9-ஆமிடத்ததிபன் இலக்கினகேந்திரத்தில் முன்பினாக பிருகி
காலேறு ஆயுளபாக்கியம் இலாபம்பெற்று சந்திரன்சுக்கிரன்புத
வியாழன் இவர்கள்பார்க்க சாதகமானவன் சிறுவயதிலேயே வா
ளுகிலேளேறுவன செல்வமும் அழகுமுடையவன இவனுதனக்குவ
து எழுபத்தெட்டாகுமனறிக.

வாகனஸ்சானாதிபதிகள் இருவரும் கேந்திரிக்க சுபரோகி
ரும பாபர்களோடுபாபரும இலாபஸ்கானத்திலிருக்க இலா
திபதியும ஞாதியுமபார்க்க சாதகமானவனுக்கு குறைவற்
செல்வமும பலைக்குமுண்டாகும் பாக்கியங்களபெருகும் தாய்
தையான் பார்க்குக்களிப்பாகள் இவனகல்விக்கு உலகத்தி
ளவாகள் சமமதிப்பாகள் இவனதனக்குவயதுஎழுபத்தாறுகு
னவறிக

பனிரெண்டாம்பாவகம்

வாகனக்காரகாதிபதியுதிச்ச அங்கிசக்கிறுள்ளோன்இலாப
ஸ்தானத்திலிருக்க அந்த ஸ்தானாதிபதிபரஸ்கனமேறிநிற்க அவ்
டத்தோனும் 4 12-க துடையவருமசேர்ந்துபிருக்கு 3-11-ல்
ந 12 ஆமிடத்தவசாதகமானவன 14-வயதின்மேல் வா
ளுகி சதுடையவனாகி 78-வயதளவும வாழ்குவானெனவறி

4-8டத்தில் துளிகனிற்க, 4-ஆமிடத்ததிபன் 8-ஆமிடம
நிற்க இராகுசனி னுடன்கூடிநிற்க சாதகமானவன பிரநடை
விருந்தப்பிரதானதுதா 4 ஆமிடத்தில் சூரியன்நிற்க, 4-க்கு
யோன இராகுவுடன்கூடிநிற்க வியாழன்சந்திரன்இவர்களபார்
யில்லையாகில் பிராகிருசாமமெனவறிக

கனஸ்தானாதிபதியும் குருசனி சந்திரன் சுக்கிரன் புதன்
வர்கள் அஉச்சர்களங்கிசத்திலிற்கினும அல்லதுகேந்திரதிருகே
ணமேறினு சாதகமானவன் கனகானயசமபத்துடையவ
யும மகுடவர்த்தனனுகியும் கவிவாணர்களுக்குப் பிரியவானுகி
வாழ்குவானெனவறிக.

சோதிடகோட்சாரசிந்தாமணி முற்றிற்று